


# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

## கோவை - 2010

### தகவல் கையேடு

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

## (கோவை - ஜீன் 23-27, 2010)

## தகவல் கையேடு

வெளியீடு :

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை – 600 009.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் –
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
உண்பது நாழி உடுப்பது இரண்டே

உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் –
உழைத்து வாழ்வோம்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்!
போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!

அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி –
ஓதி வளரும் உயிரான உலக மொழி –
நம் மொழி – நம் மொழி – அதுவே
செம்மொழி – செம்மொழி – நம் தமிழ் மொழியாம் !
வாழிய வாழியவே! வாழிய வாழியவே! வாழிய வாழியவே!

உலக வழக்கில் என்றென்றைக்கும் உன்னதமாய் நிலைத்து நிற்கும் – சீரிளமைத் திறன் வாய்ந்த செம்மொழியாம் செந்தமிழ் மொழியின் பன்முக உயர்தனிப் பாங்குகளையும், தமிழர்தம் நாகரிகம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளையும், பாரெங்குமுள்ளோர் அறிந்து உணர்ந்து கொள்ளவும் இருபத்தோராம் நூற்றாண்டில் அகிலமெங்கிலும் அனைத்து முனைகளிலும் ஏற்பட்டுவரும் மாறுதல்களுக்கும் மொழியியலில் ஏற்பட்டுவரும் புதிய பரிமாணங்களுக்கும் ஈடுகொடுத்திடும் வகையில், நமது தமிழ் மொழியை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆராய்ச்சி முயற்சிகளை வலுப்படுத்திடவும், சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் 17.9.2009 மற்றும் 18.9.2009 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் கோவையில் உலகத் தமிழ் மாநாடு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோரின் தலைமையில், மாநாடு நடத்துவது குறித்து தமிழறிஞர்களுடனும், அலுவலர்களுடனும், கலந்தாய்வுக் கூட்டங்கள் நடைபெற்று மாநாட்டைச் சீரும், சிறப்புமாக நடத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, மாநாட்டின் மைய நோக்கத்தினைப் பறைசாற்றும்வகையில், மேற்கண்ட கவிதையை எழுதியுள்ளார். இக்கவிதைக்கு திரை இசை அமைப்பாளர் ஏ.ஆர்.இரகுமான் அவர்கள் இசையமைக்கிறார். இதுதொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை திரு.ஏ.ஆர்.இரகுமான் 28–1–2010 அன்று சந்தித்து உரையாடினார்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் ஜூன் மாதம் நடத்துவது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்பு**

காஞ்சிபுரத்தில் 26.9.2009 அன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோவையில் ஜூன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் என்று அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில்,மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மொழி அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் முடிவில், 2010 ஜூன் திங்கள் 23 முதல் 27 வரை கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை நடத்த முடிவெடுக்கப்பட்டது.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு சட்டமன்ற அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்க அழைப்பு**

18.10.2009 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழச் செம்மொழி மாநாட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உள்ள கட்சிகள் பங்கேற்குமாறு கோரியும், மாநாடு தொடர்பாக அமைக்கப்படும் குழுக்களில் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினார்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு தனி அலுவலர் மற்றும் தனிப் பொறுப்பு அலுவலர் நியமனம்**

18.10.2009 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான நிர்வாக ஏற்பாடுகளைச் செய்ய தனி அலுவலராக மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர் திரு. கா.அலாவுதீன் அவர்களும், தனிப் பொறுப்பு அலுவலராக டாக்டர் எஸ். பிரபாகரன் அவர்களும் நியமனம் செய்யப்பட்டார்கள்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான இலச்சினை வெளியீடு**

23.10.2009 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு– கோவை 2010க்கான இலச்சினையை (LOGO) வெளியிட்டார்கள்.

**இலச்சினை விவரம்**

கடல்கோள்களை எதிர்கொண்டும், காலவெள்ளத்தைக் கடந்தும் சீரிளமைத் திறத்தோடு தமிழ்நாடு திகழ்கிறது என்பதைக் குறிக்கும் வகையில் சுனாமி அலைகளும், அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில் சுருளும் அழகிய பின்னணியில் இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது. வழக்கமாக, தத்துவ விளக்கங்களுக்கேற்ப மூன்று விரல் முத்திரைகளைக் கொண்டு சிலைகள் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால், திருவள்ளுவர் சிலையோ அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலைக் குறிப்பிடும் வகையில் மூன்று விரல்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவரைச் சுற்றியுள்ள மேல்வட்டத்தில் உலகத் தொன்மையான நான்கு நாகரிகங்களில் ஒன்றாகக் கருதப்படும் திராவிட நாகரிகமாகிய சிந்துவெளி நாகரிகச் சின்னங்களும் குறியீடுகளும் இடம் பெறுகின்றன.

சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் செழித்து வளர்ந்த நகர்மய நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. சிந்துநதிக் கரையில் 1,500 ஏக்கர் பரப்பளவில் செழித்தோங்கி, 700 ஆண்டுகள் சிறந்து விளங்கியது சிந்துவெளி நாகரிகம். அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளிச் சின்னங்களுடன் கூடிய குறியீடுகள்– எழுத்துப் பொறிப்புகள், தமிழகத்தின் கொங்கு மண்டலச் சூலூர், விழுப்புரம் அருகில் கீழவாளை, சோழமண்டலத்தில் மயிலாடுதுறை, செம்பியம், கண்டியூர் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

படகும், கப்பலும் தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடிய திறன்மிகு வரலாற்றையும், காளைச் சின்னம் தமிழர்களின் வேளாண்மைத் தொழிற் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன.

இலச்சினையில் ஏழு குறியீடுகள்/சின்னங்கள் இடம் பெறுகின்றன. ஏழு என்பது தமிழர்களுக்குரிய கணக்கீட்டு முறையில் சிறப்பான எண்ணாகும். ஏழு நாட்கள், அகப்பொருள் திணைகள் ஏழு, புறப்பொருள் திணைகள் ஏழு, திருக்குறள் 133 அதிகாரங்கள், அறத்துப்பாலில் பாயிரவியல் தவிர 34 அதிகாரங்கள், பொருட்பாலில் 70 அதிகாரங்கள், காமத்துப்பாலில் 25 அதிகாரங்கள், இவற்றின் கூட்டுத்தொகை ஏழு எனும்

எடுத்துக்காட்டுகள் ஏழின் சிறப்பை விளக்கிச் சொல்லும். ஏழு என்பது 'எழு' என்பதாகவும், 'எழுபதில்' இடம்பெறும். இலக்கை எட்டுவதற்கு எழுவது/'எழு' என்பதாகவும் அமைகிறது.

இந்த மாநாட்டின் எடுத்துரைக் குறிப்பாக (Motto) "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது அமைந்துள்ளது. ஓலைச்சுவடியில் இடம் பெற்றுள்ள எடுத்துரைக் குறிப்பு, இன்றைய உலகிற்குத் தமிழ்ச் செம்மொழி வழங்கும் கொடையாகக் கருதத்தக்கது.

இன்றைய உலகின் தேவை நல்லிணக்கம்; சாதி, மதம் கடந்து மக்கள் மனநிறைவோடு வாழும் மனிதநேயம் செறிந்த வாழ்க்கை. இதற்குத் தேவை வேறுபாடற்ற உலகம். ஏற்றத்தாழ்வற்ற உலகம் அமைய இந்தியா உலகிற்கு அளிக்கும் கருத்துக் கொடை "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதாகும். இச்சிந்தனை 2,000 ஆண்டுகளுக்கும் முன்பே தமிழ்ச் செம்மொழி தரணிக்கு வழங்கிய கொடையாகும்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு ஆய்வரங்கக் குழு அமைத்து ஆணை வெளியீடு**

29.10.2009 அன்று, ஆய்வரங்கப் பணிகளை மேற்கொள்ள பேராசிரியர் முனைவர் கா.சிவத்தம்பி அவர்களின் தலைமையில் ஆய்வரங்கக் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவதற்கான இடத்தினை நேரில் சென்று தேர்வு செய்தார்கள்.**

6.11.2009 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோவை மாநகருக்கு சென்றபோது, கோவை மாவட்ட சிறுதொழில் முனைவோருக்குச் சொந்தமான இடங்களையும், அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் பார்வையிட்டு, தலைமைச் செயலாளர் உட்பட அலுவலர்களுடன் கலந்தாலோசித்தார்கள். அதனையடுத்து, 9.11.2009 அன்று, கோவை கொடீசியா அரங்கில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய மாநாடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு**

12.11.2009 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கும், தேவைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையிலும், தமிழ் மொழியை வளர்த்தெடுக்க வேண்டியதன் இன்றியமையாமையைக் கருத்திற்கொண்டு, கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக "தமிழ் இணைய மாநாட்டையும்" நடத்திட அறிவுறுத்தினார்கள். இது தொடர்பாக நடைபெறும் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் ஆகியவற்றில் பல்வேறு நாடுகளிலும் உள்ள தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்களும், கணினித் தமிழ் அறிஞர்களும் பங்குபெறுவார்கள். உலகளாவிய அளவில் தமிழுக்குத் தகவல் தொழில்நுட்பம் சேர்த்துள்ள வளங்களை வெளிப்படுத்தும் வகையிலும், இனி எதிர்வருங்காலங்களில் அது செல்ல வேண்டிய பாதை, எட்டவேண்டிய இலக்கு இவை குறித்த சிந்தனைகள், இவற்றை தொகுத்து ஆற்ற வேண்டிய பணிகள் ஆகியவற்றை முடிவு செய்யும் வகையிலும் இம்மாநாடு அமையும்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணிகளைச் செம்மையாக நிறைவேற்றிட 21 குழுக்கள் அமைத்து ஆணை**

17.11.2009 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணிகளைச் செம்மையாக நிறைவேற்றிட ஆயத்தப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தவும், அவற்றைக் கண்காணிக்கவும் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்கும் தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாநாட்டு ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவிற்கு மாநாட்டின் தனி அலுவலர் திரு.கா.அலாவுதீன், இ.ஆ.ப., அமைப்பாளராகச் செயல்படுவார் என அறிவிக்கப்பட்டது. பல்வேறு குழுக்களில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தொழில் அதிபர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், கலைத் துறையினர், அரசு அலுவலர்கள் தலைவர்களாகவும், ஒருங்கிணைப்பாளர்களாகவும், உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

## மாநாட்டுத் தலைமைக் குழு

<u>தலைவர்</u>

**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு முதலமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

**பேராசிரியர் க. அன்பழகன்**
மாண்புமிகு நிதியமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்**
மாண்புமிகு துணை முதலமைச்சர்

முனைவர் **வா.செ. குழந்தைசாமி**
துணைத் தலைவர், உலகத் தமிழாய்வுக் கழகம்

திரு. **ஐராவதம் மகாதேவன்**
தொல்லியல் அறிஞர்

<u>உறுப்பினர்கள்</u>

திரு. **கே.எஸ். ஸ்ரீபதி,** இ.ஆ.ப.
தலைமைச் செயலர்

திரு. **கு. ஞானதேசிகன்,** இ.ஆ.ப.
முதன்மைச் செயலர், நிதித் துறை

<u>அமைப்பாளர்</u>

திரு. **கா. அலாவுதீன்,** இ.ஆ.ப.
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் 16–10–2009 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு குறித்து கலந்தாய்வுக்கூட்டம், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மாநாட்டு ஆலோசனைக் குழு

தலைவர்

**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு முதலமைச்சர்

உறுப்பினர்கள்

**பேராசிரியர் க. அன்பழகன்**
மாண்புமிகு நிதியமைச்சர்

திரு. **இரா. ஆவுடையப்பன்**
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்

திரு. **கே.வீ. தங்கபாலு**
இந்திய தேசிய காங்கிரஸ்

திரு. **கி. வீரமணி**
திராவிடர் கழகம்

திரு. **இராம. வீரப்பன்**
எம்.ஜி.ஆர் கழகம்

திரு. **கோ.க. மணி**
பாட்டாளி மக்கள் கட்சி

திரு. **என். வரதராஜன்**
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

திரு. **வை. சிவபுண்ணியம்**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

திரு. **இல. கணேசன்**
பாரதிய ஜனதா கட்சி

திரு. **காதர் மொய்தீன்**
இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திரு. **தொல். திருமாவளவன்**
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

திரு. **சரத்குமார்**
சமத்துவ மக்கள் கட்சி

திரு. **ஸ்ரீதர் வாண்டையார்**
மூவேந்தர் முன்னேற்றக் கழகம்

திரு. **பூவை ஜெகன் மூர்த்தி**
புரட்சி பாரதம்

திரு. **பெஸ்ட் ராமசாமி**
கொங்கு முன்னேற்றக் கழகம்

திரு. **கே.எஸ். ஸ்ரீபதி,** இ.ஆ.ப.,
தலைமைச் செயலர்

அமைப்பாளர்

திரு. **கா. அலாவுதீன்,** இ.ஆ.ப.
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

# மாநாட்டுச் சிறப்பு மலர்க் குழு

தலைவர்

**பேராசிரியர் க. அன்பழகன்**
மாண்புமிகு நிதி அமைச்சர்

துணைத் தலைவர்கள்

முனைவர் **மு. நாகநாதன்**
துணைத் தலைவர், மாநிலத் திட்டக் குழு

முனைவர் **கோ. திருவாசகம்**
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

உறுப்பினர்கள்

முனைவர் **கரு.அழ. குணசேகரன்**
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திரு. வானதி **திருநாவுக்கரசு,** சென்னை

திரு. பூம்புகார் **பிரதாப்சிங்,** சென்னை

ஒருங்கிணைப்பாளர்

திரு. **கூ.வ. எழிலரசு**
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை

## மாநாட்டு ஏற்பாடுகள் மேற்பார்வைக்குழு

தலைவர்

திரு. **மு.க. ஸ்டாலின்**
துணை முதலமைச்சர்

துணைத் தலைவர்கள்

திரு. **கோ.சி. மணி**
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்

திரு. **சுப தங்கவேலன்,**
மாண்புமிகு குடிசைமாற்று வாரியத் துறை அமைச்சர்

திரு. **எஸ்.என்.எம். உபயதுல்லா**
மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்

திரு. **டி.பி.எம். மைதீன்கான்**
மாண்புமிகு இளைஞர் நலம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

திருமதி **கீதா ஜீவன்,**
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்

திரு. **கே.பி.பி. சாமி,**
மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்

திரு. **உ. மதிவாணன்,**
மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்

பிற குழுக்களின் தலைவராக உள்ள அமைச்சர்களும் இதில் இடம் பெறுவார்கள்.

உறுப்பினர்கள்

திரு.**சி. ஞானசேகரன்,** சட்டமன்ற உறுப்பினர்
திரு. **து. ரவிக்குமார்,** சட்டமன்ற உறுப்பினர்
தலைமைச் செயலர்,
பொது மேலாளர் (தென்னக இரயில்வே),
முதன்மைச் செயலர் (உள்துறை),
முதன்மைச் செயலர் (நிதி),
இயக்குநர், காவல் துறை,
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்,
முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி & ஊராட்சித் துறை,
காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு),
துணை வேந்தர், பாரதியார் பல்கலைக்கழகம்,
செயலர் (பொதுத் துறை),
செயலர் (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை),
செயலர் (த. வ.அ. நி. மற்றும் செய்தித் துறை),
செயலர் (போக்குவரத்துத் துறை),
செயலர் (நகராட்சி நிருவாகம் & குடிநீர் வழங்கல் துறை),
செயலர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை),
மண்டல இயக்குநர், இந்திய விமான நிலையங்களின் ஆணையம், சென்னை.

ஒருங்கிணைப்பாளர்கள்

தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு
மாவட்ட ஆட்சியர், கோவை

# வரவேற்புக் குழு

தலைவர்

திரு. **ஆற்காடு நா. வீராசாமி**
மாண்புமிகு மின் துறை அமைச்சர்

துணைத் தலைவர்கள்

திரு. **துரைமுருகன்**
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

திரு. **டி. சுதர்சனம்**
சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர்

ஒருங்கிணைப்பாளர்

திரு. **தேவ ஜோதி ஜெகராஜன்,** இ.ஆ.ப.,
செயலர், பொதுத்துறை

உறுப்பினர்கள்

திரு. **வி.பி. துரைசாமி**
சட்டப் பேரவைத் துணைத் தலைவர்

திருமதி. **சுப்புலட்சுமி ஜெகதீசன்**
முன்னாள் மத்திய இணையமைச்சர்

டாக்டர் **எம்.ஏ.எம். ராமசாமி**
வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

திரு. **சிவந்தி ஆதித்தன்**
தலைவர், தினத்தந்தி குழுமம்

திரு. **சீனிவாசன்**
மேலாண்மை இயக்குநர், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம்

திரு. **வேணு சீனிவாசன்**
மேலாண்மை இயக்குநர், டி.வி.எஸ் நிறுவனம்

திரு. **கருமுத்து தி. கண்ணன்**
தலைவர், தியாகராஜா மில்ஸ், மதுரை

திருமதி. **ராஜஸ்ரீ பதி**
தலைவர், ராஜஸ்ரீ சுகர்ஸ், கோவை

திரு. **கிருஷ்ணராஜ் வானவராயர்,** கோவை

திரு. கவிஞர் **ஈரோடு தமிழன்பன்**

திரு.**வி.ஆர்.எஸ். சம்பத்**

**திரு. தீனபந்து, இ.ஆ.ப.,**

திரு. **அசோக் வர்தன் ஷெட்டி,** இ.ஆ.ப.,

திரு. **ராஜிவ் ரஞ்சன்,** இ.ஆ.ப.,

திரு.**பா.வி.ச. டேவிதார்,** இ.ஆ.ப.,

திரு. **க முத்துசாமி,** இ.ஆ.ப.,

திரு. **தனவேல்,** இ.ஆ.ப.,

டாக்டர் **பு. உமாநாத்,** இ.ஆ.ப.,

திரு. **சி. காமராஜ்,** இ.ஆ.ப.,

# மாநாட்டு அரங்க அமைப்புக் குழு

தலைவர்

**வீரபாண்டி** திரு. **எஸ். ஆறுமுகம்**
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

துணைத் தலைவர்கள்

திரு. **கே.ஆர். பெரியகருப்பன்,**
மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்

**திரு. கே. ராமச்சந்திரன்**
மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்

திரு. **பொன் குமார்**

ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. **எஸ். ராமசுந்தரம்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர்

டாக்டர் **பு. உமாநாத்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், கோவை

உறுப்பினர்கள்

கோவை **இரா. மோகன்**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

திரு. **கருணாகரன்,** பி.இ.,
தலைமைப் பொறியாளர்

டாக்டர் **பி. முருகேச பூபதி,**
துணை வேந்தர்

டாக்டர் **சு. பிரபாகரன்**
சிறப்புப் பணி அலுவலர், கோவை

# பொது அரங்க நிகழ்ச்சிகள் அமைப்புக்குழு

<u>தலைவர்</u>

முனைவர் **க. பொன்முடி**
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **ச. ஜெகத்ரட்சகன்**
மாண்புமிகு மத்திய இணை அமைச்சர்

**குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**

திரு. **குமரி அனந்தன்**

முனைவர் **அவ்வை நடராசன்**

கவிக்கோ **அப்துல் ரஹ்மான்**

பெருங்கவிக்கோ **வா.மு. சேதுராமன்**

கவிஞர் **வாலி**

கவிப்பேரரசு **வைரமுத்து**

பேராசிரியர் **சுப. வீரபாண்டியன்**

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. **செ. அரங்கநாயகம்**
முன்னாள் அமைச்சர்

திரு. **க. கணேசன்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர், உயர்கல்வித் துறை

<u>உறுப்பினர்கள்</u>

திரு. **கே.எஸ். அழகிரி**
நாடாளுமன்ற உறுப்பினர்

முனைவர் **வெ. இறையன்பு,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

திரு.**க. முத்துசாமி,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

முனைவர் **சபாபதி மோகன்**
துணைவேந்தர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திரு. **கூ.வ. எழிலரசு**
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை

# ஊர்வலக் குழு

<u>தலைவர்</u>

திரு. **கே.என். நேரு**
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **ஐ. பெரியசாமி**
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்

திரு. **ஏ.வி.எம். சரவணன்,** சென்னை

திரு. **இராம. நாராயணன்,** தலைவர்,
திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், சென்னை

திரு. **அபிராமி ராமநாதன்**
தலைவர், தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சம்மேளனம்

திரு. **வி.சி. குகநாதன்,** தலைவர்
தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் (பெப்சி), சென்னை

டாக்டர் **சி. சுவாமிநாதன்**
துணைவேந்தர், பாரதியார் பல்கலைக் கழகம்

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. **செல்லமுத்து,**
இணைத் தலைவர், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

திரு. **சி. காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை

<u>உறுப்பினர்கள்</u>

**ஆணையர்,** தொழில்நுட்பக் கல்வித் துறை

முனைவர் **வெ. இறையன்பு,** இ.ஆ.ப., செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

டாக்டர் **பு. உமாநாத்,** இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், கோவை

திரு.**மு. ரவி,** இ.கா.ப., காவல் துறைத் தலைவர், சென்னை

திரு. **சைலேந்திரபாபு,** இ.கா.ப., மாநகரக் காவல் துறை ஆணையர், கோவை

திருமதி. **பாலநாகதேவி,** இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர், கோவை சரகம்

திரு. **என். கண்ணன்,** இ.கா.ப., காவல் துறைக் கண்காணிப்பாளர்

டாக்டர் **பெருமாள்சாமி,** இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை

திரு. **ஜெயபாஸ்கரன் சார்லஸ்,** இயக்குநர், கல்லூரிக் கல்வித் துறை

திரு. **மருது,** ஓவியர், சென்னை

திரு. **சந்துரு,** முதல்வர் (ஓய்வு), அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை.

திரு. **மனோகர்,** முதல்வர் (பொ), அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை

திரு.**வெ. சந்திரசேகரன்,** முதல்வர், அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

# மருத்துவம் மற்றும் சுகாதாரக் குழு

<u>தலைவர்</u>

திரு. **எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்</u>

டாக்டர். **காஞ்சனா கமலநாதன்,** கிருஷ்ணகிரி

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

டாக்டர். **காயத்ரி தேவி,**
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **வி.கே. சுப்புராஜ்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்

டாக்டர். **கே.ஜி. பக்தவத்சலம்,**
கே.ஜி. மருத்துவமனை

டாக்டர். **ஜெம். பழனிவேலு**

<u>உறுப்பினர்கள்</u>

டாக்டர். **பு. உமாநாத்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை

டாக்டர். **ச. வினாயகம்,**
இயக்குநர், மருத்துவக் கல்வித் துறை

டாக்டர். **வ. குமரன்**
முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, கோவை

டாக்டர். **பெ. நந்தகோபாலசாமி**
இயக்குநர், ஊரக நலப் பணிகள் துறை

டாக்டர். **சு. இளங்கோ,**
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை

டாக்டர். **பழனிச்சாமி,**
கோவை மெடிக்கல் சென்டர்

# தங்கும் இட ஏற்பாட்டுக் குழு

<u>தலைவர்</u>

பொங்கலூர் திரு.**நா. பழனிச்சாமி**
மாண்புமிகு ஊரகத் தொழில் துறைஅமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **க. செல்வராஜ்**
வணக்கத்திற்குரிய மேயர், திருப்பூர் மாநகராட்சி

கோவை திரு. **மு. இராமநாதன்**

திரு. **ஏ. சக்திவேல்,**
அகில இந்திய ஏற்றுமதியாளர்கள் சங்கம்

திரு. **பழனி ஜி. பெரியசாமி**

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

டாக்டர். **பு. உமாநாத்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், கோவை

திரு. **அன்சுல் மிஸ்ரா,** இ.ஆ.ப.,
மாநகராட்சி ஆணையர், கோவை

<u>உறுப்பினர்கள்</u>

டாக்டர் **சி. சுவாமிநாதன்,**
துணை வேந்தர், பாரதியார் பல்கலைக் கழகம்

டாக்டர் **செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
இயக்குநர், நகராட்சிகள் நிருவாகத் துறை

டாக்டர் **எஸ். பழனிச்சாமி,**
பதிவாளர், அண்ணா பல்கலைக் கழகம், கோவை

டாக்டர் **பி. திருமாவளவன்**
பதிவாளர், பாரதியார் பல்கலைக் கழகம்

டாக்டர் **கார்த்திகேயன்,**
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

திரு. **குண்டன்,** உதகமண்டலம்
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

திரு. **மார்ட்டின்,** கோவை

டாக்டர். **சு. பிரபாகரன்**
சிறப்புப் பணி அலுவலர், கோவை

## கலை நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாக் குழு

<u>தலைவர்</u>

திரு **என். சுரேஷ் ராஜன்**
மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்,**
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்

திருமதி. **ஆ. தமிழரசி**
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்

நடிகர் திரு. **சிவக்குமார்**

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

செல்வி. **கே. பாலபாரதி,** சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **பெ. கமலாம்பாள்,** சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **விஜயா தாயன்பன்,** சென்னை

திருமதி. **ஜோன்ஸ் ரூசோ**

கவிஞர் **சல்மா என்கிற ரொக்கையா**

திரு. **ப.அ. மணி,** இ.வ.ப.,
ஆணையர், கலை மற்றும் பண்பாட்டுத் துறை

<u>உறுப்பினர்கள்</u>

முனைவர் **வெ. இறையன்பு,** இ.ஆ.ப.,
செயலர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

முனைவர் **ஆ. சித்தரஞ்சன் மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை

திரு. **ஜி. பால்ராஜ்**
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை

அருட்தந்தை **வின்செண்ட் சின்னதுரை,** சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம், சென்னை

கவிஞர். **இளையபாரதி**
செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

திரு. **மு. இராமசாமி,**
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
முதல்வர் (பொ), திரைப்படக் கல்லூரி, சென்னை

திரு **நா. முத்துசாமி,** கூத்துப் பட்டறை
முனைவர் மார்கரெட் பாஸ்டின் கலைக் காவிரி, திருச்சி

# மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரக் குழு

<u>தலைவர்</u>

திரு. **பரிதி இளம்வழுதி**
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **தா.மோ. அன்பரசன்**
தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

திரு. **என். ராம்,**
தி இந்து

திரு. **கலாநிதி மாறன்**
சன் தொலைக்காட்சிக் குழுமம்

திரு. **ராமச்சந்திர ஆதித்தன்**
மாலைமுரசு

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. **பீட்டர் அல்போன்ஸ்,**
சட்டமன்ற உறுப்பினர்

திரு **க. முத்துசாமி,** இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

<u>உறுப்பினர்கள்</u>

எழுத்தாளர் திரு. **சோலை**

திரு. **நக்கீரன் கோபால்**

திரு. **ரமேஷ் பிரபா**

டாக்டர் **பு. உமாநாத்**
மாவட்ட ஆட்சியர், கோவை

டாக்டர் **சு. பிரபாகரன்**
சிறப்புப் பணி அலுவலர், கோவை

# விருந்தோம்பல் குழு

<u>தலைவர்</u>

திரு. **எ.வ. வேலு**
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **மு. கண்ணப்பன்**
முன்னாள் மத்திய இணையமைச்சர்

திரு. **பொள்ளாச்சி நா. மகாலிங்கம்**

திரு. **பேரூர் சாந்தலிங்க அடிகளார்**

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. **கோவை தங்கம்,**
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **க. சண்முகம்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்,

<u>உறுப்பினர்கள்</u>

திருமதி. **பத்மாவதி,**
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **கு. செல்வப்பெருந்தகை,**
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **எஸ்.வி. பாலசுப்பிரமணியன்**
பன்னாரி அம்மன் குழுமம்

திருமதி. **நந்தினி ரங்கசாமி**

திரு. **ரவிசாம்**

திரு. **க. இராஜாராமன்,** இ.ஆ.ப.,
உணவு வழங்கல் துறை ஆணையர்.

டாக்டர் **ஆ. சித்தரஞ்சன் மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

டாக்டர் **பு. உமாநாத்,** இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சியர், கோவை

திரு. **நாகராஜன்,** இ.கா.ப.,
துணை ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), கோவை மாநகர காவல் துறை

திரு. **சுவாமிநாதன்,**
பி.எஸ்.ஜி. கல்வி அறக்கட்டளை, கோவை

முனைவர் **பால் தினகரன்**
வேந்தர், காருண்யா பல்கலைக் கழகம்

திரு. **சீனிவாசன்,**
மாநில பொருளாளர், மாநில ஓட்டல் / உணவு விடுதிகள் சங்கம், கோவை.

# கண்காட்சி அமைப்புக் குழு

<u>தலைவர்</u>

திரு. **தங்கம் தென்னரசு**
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **என். செல்வராஜ்**
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

திருமதி. **சற்குண பாண்டியன்**
முன்னாள் அமைச்சர், தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர்

திருமதி **டி. யசோதா**
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **கணபதி ஸ்தபதி,**
சென்னை

முனைவர் **நாகசாமி,**
இயக்குநர் (ஓய்வு), அரசு தொல்லியல் துறை

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திருமதி. **வசந்தி ஸ்டான்லி,**
மாநிலங்களவை உறுப்பினர்

திரு. **கோபண்ணா**

கவிஞர் **மு. மேத்தா**

கவிஞர் **பா. விஜய்**

திருமதி **தமிழச்சி தங்கபாண்டியன்**

டாக்டர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
தொல்லியல் துறை ஆணையர்

<u>உறுப்பினர்கள்</u>

திருமதி. **சத்தியபாமா,**
மத்தியத் தொல்லியல் துறை

திரு. **கா. இராசன்,**
மத்தியப் பல்கலைக் கழகம், புதுச்சேரி

திரு. **இரத்தினகிரி,** தஞ்சை

திரு. **சொக்கலிங்கம்**
(கவிதா பதிப்பகம்), சென்னை

திரு. **வேலாயுதம்**
(விஜயா பதிப்பகம்), கோவை

திரு **மா. உமாபதி,** கோவை.

# போக்குவரத்து ஏற்பாட்டுக் குழு

<u>தலைவர்</u>

திரு. **வெள்ளக்கோயில் மு.பெ. சாமிநாதன்**
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்

<u>துணைத் தலைவர்கள்</u>

திரு. **சி. கோவிந்தசாமி**
சட்டமன்ற உறுப்பினர்

திரு. **கே. சுப்பராயன்**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

திரு. **க.ரா. சுப்பையன்**
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. **மச்சேந்திரநாதன்,** இ.ஆ.ப.,
போக்குவரத்துத்துறை ஆணையர்

டாக்டர் **பு.உமாநாத்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், கோவை

<u>உறுப்பினர்கள்</u>

திரு. **அதுல்ய மிஸ்ரா,** இ.ஆ.ப.
செயலாளர், போக்குவரத்துத் துறை

திரு. **விஜயகுமாரசாமி,** இ.கா.ப.
துணை ஆணையர் (பொ), போக்குவரத்துத்துறை, கோவை

திருமதி. **என். காமினி,** இ.கா.ப.
துணை ஆணையர், போக்குவரத்து (மாநகரக் காவல் துறை)

டாக்டர் **பி. திருமாவளவன்,**
பதிவாளர், பாரதியார் பல்கலைக் கழகம்

டாக்டர் **அ. கார்த்திகேயன்**
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

டாக்டர் **சு. பிரபாகரன்**
சிறப்புப்பணி அலுவலர், கோவை

# மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு

<u>தலைவர்</u>

திரு.**கே.எஸ். ஸ்ரீபதி,** இ.ஆ.ப.,
தலைமைச் செயலர்

<u>அமைப்பாளர்</u>

திரு. **கா. அலாவுதீன்,** இ.ஆ.ப.,
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

<u>உறுப்பினர்கள்</u>

திருமதி. **எஸ். மாலதி,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர், உள்துறை

திரு. **கு. ஞானதேசிகன்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர், நிதித்துறை

திரு. **க. அசோக் வர்தன் ஷெட்டி,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

டாக்டர் **நிரஞ்சன் மார்டி,** இ.ஆ.ப.,
செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

திரு. **தேவ ஜோதி ஜெகராஜன்,** இ.ஆ.ப.,
செயலாளர், பொதுத்துறை

திரு. **க. முத்துசாமி,** இ.ஆ.ப.,
செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை

டாக்டர் **வெ. இறையன்பு,** இ.ஆ.ப.,
செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

திரு.**கோ. சந்தானம்,** இ.ஆ.ப.,
செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

திருமதி. **லத்திகாசரண்,** இ.கா.ப.,
இயக்குநர், காவல் துறை

திரு. **சி.பி. சிங்,** இ.ஆ.ப.,
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்

டாக்டர் **பு. உமாநாத்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், கோவை

திரு. **மு. ரவி,** இ.கா.ப.,
காவல் துறைத் தலைவர், சென்னை

மேலும் பிற குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்களும் இதில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

## பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் மீட்புப் பணிகள் குழு

தலைவர்

திரு. **கே. எஸ். ஸ்ரீபதி,** இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

துணைத் தலைவர்கள்

திருமதி. **எஸ். மாலதி,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர், உள்துறை

திருமதி. **லத்திகாசரண்,** இ.கா.ப.,
காவல் துறை இயக்குநர்

திரு.**கே. நடராஜ்,** இ.கா.ப.,
இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. **கே. ராதாகிருஷ்ணன்,** இ.கா.ப.,
காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்–ஒழுங்கு)

திரு. **ஆர். பால்சாமி,**
இணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

உறுப்பினர்கள்

திரு. **ஜாபர் சேட்,** இ.கா.ப.,
காவல் துறைத் தலைவர் (நுண்ணறிவுப் பிரிவு)

திரு. **பிரமோத் குமார்,** இ.கா.ப.,
காவல்துறைத் தலைவர், மேற்கு மண்டலம்

திரு. **சைலேந்திரபாபு,** இ.கா.ப.,
கோவை மாநகர காவல்துறை ஆணையர்

டாக்டர் **பு.உமாநாத்,** இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர், கோவை

திருமதி. **பாலநாகதேவி,** இ.கா.ப.
காவல் துறைத் துணைத் தலைவர், கோவை

திரு. **என். கண்ணன்,** இ.கா.ப.,
காவல்துறைக் கண்காணிப்பாளர்

திரு. **ஆர்.ஜி. ஜெயகாந்தன்**
துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை,
கோவை மண்டலம்

# தமிழ் இணைய மாநாட்டுக் குழு

<u>தலைவர்</u>

பேராசிரியர் **மு. ஆனந்தகிருட்டினன்**
தலைவர், ஐ.ஐ.டி., கான்பூர்

<u>அமைப்பாளர்</u>

டாக்டர். (திருமதி) **பூங்கோதை**
தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்

<u>ஒருங்கிணைப்பாளர்</u>

திரு. **பி.டபிள்யூ.சி டேவிதார்,** இ.ஆ.ப.,
செயலர், தகவல் தொழில்நுட்பத் துறை

<u>உறுப்பினர்கள்</u>

கவிஞர். **கனிமொழி,** மாநிலங்களவை உறுப்பினர்

முனைவர் **ப.ரா. நக்கீரன்**
இயக்குநர், தமிழ் இணையப் பல்கலைக் கழகம்

திரு. **மோகன்,** தேசியத் தகவல் மையம்– மைய அரசு

திரு. **டி.என்.சி. வெங்கடரங்கன்,** துணைத் தலைவர், உத்தமம்

திரு. **ஆன்டோ பீட்டர்,** கணினித் தமிழ்ச் சங்கம்

திருமதி. **ஸ்வரன் லதா,**
இயக்குநர், இந்திய மொழிகளில் தொழில்நுட்ப மேம்பாடு, தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், மைய அரசு

டாக்டர். **சந்தோஷ் பாபு,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

# வெளிநாட்டுப் பேராளர் தொடர்புக் குழு

<u>தலைவர்</u>

கவிப்பேரரசு **வைரமுத்து**

<u>இணைத் தலைவர்</u>

கவிஞர் **கனிமொழி,**
மாநிலங்களவை உறுப்பினர்

<u>துணைத் தலைவர்கள்</u>

டாக்டர் **சி. சுவாமிநாதன்,**
துணைவேந்தர், பாரதியார் பல்கலைக் கழகம்

டாக்டர் **மன்னர் ஜவகர்,**
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

திரு. **வைத்தியநாதன்,**
தினமணி

பேராசிரியர் **மு.பி. பாலசுப்பிரமணியன்,**
சென்னை

டாக்டர் **பி. திருமாவளவன்**
பதிவாளர், பாரதியார் பல்கலைக் கழகம்

<u>உறுப்பினர்</u>

டாக்டர் **ஆ. கார்த்திகேயன்**
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

# கோவை மாநகர மேம்பாட்டுக் குழு

<u>தலைவர்</u>

திரு. **வெங்கடாசலம்,**
வணக்கத்திற்குரிய மேயர், கோவை மாநகராட்சி

<u>துணைத் தலைவர்</u>

திரு. **கார்த்திக்,**
துணை மேயர், கோவை

<u>ஒருங்கிணைப்பாளர்கள்</u>

டாக்டர். **பு. உமாநாத்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், கோவை

திரு. **அன்சுல் மிஸ்ரா,** இ.ஆ.ப.,
மாநகராட்சி ஆணையர், கோவை

<u>உறுப்பினர்கள்</u>

திரு. **பி.ஆர். நடராஜன்,**
நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. **வீரகோபால்,** கோவை

டாக்டர். **நிரஞ்சன் மார்டி,** இ.ஆ.ப,
அரசுச் செயலாளர்

திருமதி **எம். விஜயலட்சுமி,**
நகராட்சிகள் நிருவாகத் துறை, திருப்பூர்

திரு. **ககன்தீப்சிங் பேடி,** இ.ஆ.ப.,
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை

டாக்டர் **சு. பிரபாகரன்,**
சிறப்புப்பணி அலுவலர், கோவை

# மாநாட்டு ஆய்வரங்க அமைப்புக் குழு

தலைவர்

பேராசிரியர் முனைவர் **கா. சிவத்தம்பி**

இணைத் தலைவர்கள்

முனைவர் **அவ்வை நடராசன்**

முனைவர் **பொன். கோதண்டராமன்**

செயலாளர்

கவிஞர் **கனிமொழி**
மாநிலங்களவை உறுப்பினர்

ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **ம. இராஜேந்திரன்**
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில்
**31–12–2009** அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்துவதற்காக
அமைக்கப்பட்டுள்ள **21** குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின்
கலந்தாய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு இணைய தள வலைப்பக்கம் – 9.12.2009 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்**

9.12.2009 அன்று, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் இணைய தள வலைப்பக்கம் (www.ulakathamizhchemmozhi.org) பயன்பாட்டுத் தொடக்க விழா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழர்களின் மரபு வழிப்பட்ட நாகசுரத்தில் மல்லாரி இசையுடன் வலைப் பக்கம் தொடங்குகிறது. தமிழ்நாடு அரசின் இலச்சினையும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு இலச்சினையும் இடம்பெற்றுள்ளன. தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் வலைத்தளப்பக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இடது பக்கம் சங்ககால நாணய முத்திரையும் வலது பக்கம் சிலம்பும், தொன்மையான தமிழ் எழுத்து வடிவங்களும், சிந்துவெளிக் குறியீடுகளும், முத்திரைகளும் இடம் பெற்றுள்ளன.

**அறிவிப்புகள்** எனும் பக்கத்தில், மாநாடு தொடர்பான அறிவிப்புகளை அறியலாம்.

**கோவை 2010** எனும் பக்கத்தில், கோவை மாநகர் பற்றிய செய்திகளோடு சங்ககால வரலாற்றில் கொங்கு மண்டலம் பெற்றிருந்த சிறப்புகளை அறியலாம்.

**தமிழ்ச்செம்மொழி** எனும் பக்கத்தில், உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழ் பெற்றிருக்கும் தகுதிகளுக்கேற்ப அறிந்தேற்புப் பெற பரிதிமாற் கலைஞர் முதலாகத் தமிழறிஞர்களும் தமிழார்வலர்களும் மேற்கொண்ட முயற்சிகளும் பணிகளும் இடம்பெறுவதோடு, இந்திய அரசின் ஏற்பினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க பதிவுகளும் இடம் பெற்றுள்ளன.

**ஆய்வரங்கப் பொருண்மைகள்** எனும் பக்கத்தில், நடைபெறவுள்ள மாநாட்டு ஆய்வரங்கங்களில் இடம்பெறக் கூடிய பொதுநிலைச் சிறப்பரங்கம், தனிப்பொழிவரங்கம், கலந்துரையரங்கம், கருத்தரங்கம் ஆகியவை பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளின் பொருண்மை விவரங்களும் தரப்பட்டுள்ளன. பங்கேற்க எனும் தலைப்பில் உள்ள பக்கத்தில், மாநாட்டு ஆய்வரங்கத்தில் கட்டுரையாளராக, நோக்காளராகப் பங்கேற்க விரும்புவோர் பதிவு செய்து கொள்ளும் வகையில் படிவங்களும் கட்டுரையாளர் அனுப்ப வேண்டிய ஆய்வுச் சுருக்கத்திற்கான பகுதியும் இடம் பெற்றுள்ளன. வலைத்தளப் பக்கத்திலிருந்தே பதிவு செய்து கொள்ளும் வகையிலும் தொடர்பு கொள்ளும் வகையிலும் ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கடவுச் சொல் வழங்கப்படும் அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஊடகங்களில்** எனும் பக்கத்தில், மாநாட்டு ஆய்வரங்கம் தொடர்பாக அவ்வப்போது வெளிவரும் ஊடகப் பதிவுகள் இடம்பெறுகின்றன. மேலும் தொடர்புடைய தமிழ் இணையப் பக்கங்களுடன் தொடர்பு கொள்வதற்கேற்ப இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துடன், மாநாட்டு ஆய்வரங்கம் தொடர்பாக மனப்பதிவுகளை வெளிப்படுத்தும் வகையில் **மனஉரைப்பகுதி** இடம் பெற்றுள்ளது.

**ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்க அழைப்பு**

**24.12.2009** அன்று, மாநாட்டு ஆய்வரங்கத்தில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கு பல்வேறு தலைப்புகள் அறிவிக்கப்பட்டு தமிழறிஞர்களுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டன. இந்நிகழ்வின் முடிவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாநாட்டினையொட்டி, பழந்தமிழ்ப் புலவர்கள், மன்னர்கள், இலக்கியங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் மக்களுக்கு எடுத்துக்காட்டுகின்ற வகையில் ஊர்வலம் நடைபெறும் என்று அறிவித்தார்கள்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – கட்டுரைகள் வெளியீடு**

**25.12.2009** முதல் **31.12.2009** வரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ''செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்'' எனும் தலைப்பில் அரிய தகவல்கள் அடங்கிய கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

# செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 1

(25–12–2009)

உடன்பிறப்பே,

ஒய்வுக்காக வந்திருக்கிறேன் என்று நீ எண்ணிக் கொண்டிருப்பாய். ஒய்வுக்காக அல்ல; அல்ல! ஒப்பற்ற முறையில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்குக் கடிதங்களைக் கொண்டு, ஒரு தோரணவாயில் அமைக்கின்ற ஆர்வத்தோடு தான், இந்த ஒய்வைப் பயன்படுத்திக் கொள்கிறேன். தோரணவாயில் அமைக்க நான் கொட்டிவைக்கும் கற்களின் குவியல் இது!

அறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சராக முன்னின்று நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினையும் சேர்த்து, இதுவரை “உலகத் தமிழ்மாநாடு” என்ற பெயரில் எட்டு மாநாடுகள் நடந்தேறியுள்ளன.

சென்னையில் சிறப்புறவும், கண்டோர் வியப்புறவும் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தமிழர்களின் உள்ள உணர்விலும், அறிவுத் திறனிலும் விதைத்த மிகப்பெரிய மாற்றத்தின் காரணமாக; அறிஞர் அண்ணா அவர்கள்,

“திராவிடர்தம் மொழியாம் செந்தமிழ் மொழியின் மேன்மையும் மேம்பாடும் சீரும் சிறப்பும் உலகப் பார்வையில் சிறப்பிடம் பெற்று வருகின்றது.

தமிழின் சிறப்பியல்புகளை – செம்மொழிக்கேற்ற சீரிளம் இயல்புகளை மொழிவல்லார் பலரும் மெத்தவும் மெச்சிடுகின்றனர்.

தமிழ்மொழி, காலத்தால் மிக மிகத்தொன்மையானது. இலக்கண இலக்கிய விதிகளையும் வரைமுறைகளையும் செவ்வனே பெற்றுள்ளது. தூயது – தூய்மையானது. துல்லியமாக எண்ணங்களை வெளிப்படுத்திடும் சொல்வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை நுட்பமாகவும் நுண்ணியமாகவும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை – கொள்கை கோட்பாடுகளை வழுவாமல், பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

சூடு, சுவை, சூட்சுமம், மதி நுட்பம் வாய்ந்த குறிப்புரை, விரிவுரை, விளக்கவுரை அத்துணையும் ஆற்றிடவல்ல சொல்லாரம் தமிழ்க் களஞ்சியத்தில் ஏராளம், ஏராளம், மிக மிக ஏராளம்; எடுக்க எடுக்கக் குறையாதது. கொடுக்கக் கொடுக்க மாளாதது நம் தமிழ்மொழியின் வளம் – வல்லமை.

தமிழ் இனியது. அழகியது. ஆற்றல் மிக்கது, வற்றாத ஊற்றான சொற்செறி வும், பொருட்செறிவும், நாகரிக நயமும் நேர்த்தியும் கொண்டது. அது தொன்மையானது. தூயது! என்றும் அழியாத வியத்தகு சீரிளமைத் திறம் உடைத்தானது என்பதெல்லாம் உண்மை–வெறும் புகழ்ச்சியல்ல என்பதை ஊரும் உலகும் ஒப்பிடத் தொடங்கியுள்ள காலக்கட்டத்தில் நாம் வாழ்கின்றோம்!”

– என்று பீடும் பெருமையும் கொண்டு பேசினார்கள்.

இப்போது, 2010ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை 5 நாட்களுக்கு, கொங்குப் பகுதியின் கோலமிகு திருநகரமாம் கோவையில் நடைபெறுமென நாம் அறிவித்திருப்பது, “உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு” ஆகும். மாநாட்டுக்கான தொடக்கக் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மாநாடு நடைபெறவுள்ள நாட்கள்;
மாநாடு நடைபெறவுள்ள இடம்;
மாநாட்டை அழகு மிளிர்ந்திடவும்;
ஆய்வரங்கங்கள், பொருளாழம் கொண்டதாகவும்–
அடுத்துவரும் தலைமுறையினர்க்கு அறிவூட்டுவதாகவும்–
அன்னைத் தமிழுக்கு மேலும் பொலிவு தரும் புத்தம்புதிய

அணிகலன்கள் பூட்டுவதாகவும் அமைந்திடவும்;
பொது அரங்கங்கள், இதுவரை
கண்டிராத உணர்ச்சியையும், ஊக்கத்தையும், வெள்ளமெனப் பெருக்கி
உலகெங்கணும் உள்ள தமிழர்களிடைப் பாய்ச்சுவதாகவும்;
கண்காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக,
கண்களின் நினைவுகளில்,
காலமெலாம் நின்று நிலைத்து ஒளி உமிழ்வதாகவும்;
ஊர்வலம்— தமிழர் நாகரிகம், பண்பாடு, பன்முகத் தோற்றம், தொன்மை,
தரணி போற்றிடும் தமிழிலக்கியத்தின் மேன்மை, மென்மை
ஆகியவற்றைப் பேசும் சித்திரப் பாவைகளாக உருக்கொண்டு,
ஊர்வலமாக மட்டுமன்றி, உலகவலமாகப் பிரமிப்பூட்டுவதாகவும்;

நடத்துவதற்குத் தக்கவகையில் சான்றாண்மை மிக்கோர் பலரையும் இணைத்து 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளபடியே சொல்லப்போனால், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற வகையில், நாம் நடத்திடப் போவது, முதல் மாநாடாகும். நமது தமிழ்மொழி, 'செம்மொழி' என்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் நிரம்பவே பெற்றிருப்பதால், அதனைச் செம்மொழியென அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று; இன்று, நேற்றல்ல — ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பே குரலெழுப்பப்பட்டது.

அன்று எழுப்பப்பட்ட அந்தக் குரல் — தமிழ்க் குரல் — மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, காலப்போக்கில் — தமிழறிஞர்களின் குரலாக — தமிழ் ஆர்வலர்களின் குரலாக — தமிழ்ச் சமுதாயத்தின் குரலாக — அரசியலரங்கத்தில் ஆற்றல் செறிந்த குரலாக — உருப்பெற்று; அந்தக் குரலை, கேளாக்காதினர் மதித்திடத் தவறிவிட்டாலும்; செவித்திறனும், சீர்த்த பண்பும் உடையோர் அதனை மதித்துப் போற்றி; அந்தக் குரலின் மாண்பமைந்த நியாயத்தை உணர்ந்து; தமிழ் செம்மொழியே என, இந்தியத் திருநாட்டளவில் அங்கீகாரம் செய்து பிரகடனப் படுத்தப்பட்ட நாள் 12.10.2004.

அந்த நாள், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடைபெற்ற உரிமைப் போராட்ட வரலாற்றில், உயர்ந்த நாள், உன்னதமான நாள்; மாத்தமிழர் என்றென்றும் மறந்திடவியலாத மரகதத் திருநாள்! முன்னைப் பழைமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய், என்று பிறந்ததென்ற இயல்பறியாததாய், சீரிளமைத் திறம் கொண்டதாய் வளர்ந்து செழித்திருக்கும் செந்தமிழ், செம்மொழியெனப் பிரகடனப்படுத்தப்பட்ட பரிணாம வரலாற்றை; உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சரியான தருணத்தில், நான் நினைவு கூர்ந்து உனக்குச் சொல்வதும்; நீ அதனை அறிந்து கொள்வதும், அறிந்து கொண்டவற்றை நினைவிலே தேக்கி, உனது உற்றார் உறவினர்க்கும், மற்ற உடன்பிறப்புக்களுக்கும் எடுத்துரைப்பதன் மூலம் புதிய எழுச்சியும் இன்பமும் கொள்வதும்; நாம் கொண்டிருக்கும் பொருள் பொதிந்த உறவின் காரணமாகப் பொருத்தமானதே!

1887ல் பண்டைத் தமிழறிஞர் வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர் அவர்கள் "தமிழ்மொழியின் வரலாறு" என்ற தமது நூலின் முடிவுரையில்:

"வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ்மொழியும் உயர்தனிச்செம்மொழி யாமாறு சிறிதுகாட்டுவாம்.தான்வழங்கும் நாட்டின்கண் உள்ள பலமொழிகட்குந் தலைமையும் அவற்றினும்மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே உயர்மொழி. இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ் — தெலுங்கு முதலிய வற்றிற் கெல்லாந்தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி என்னப்படும். தான் பிறமொழி கட்குச் செய்யும் உதவி மிகுந்தும், அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ்மொழியினுதவி களையப்படின், தெலுங்கு முதலியன இயங்கு தலொல்லா; மற்றுத் தமிழ்மொழி அவற்றினுத வியில்லாமலே சிறிது மிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்கவல்லது. இஃது இந்திய மொழிநூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் தமிழ் தனிமொழியே யென்க. இனிச் செம்மொழியாவது யாது ?"

– என்று தமிழை உயர்மொழி என்றும் தனிமொழி என்றும் வலியுறுத்திய பின்னர் பரிதிமாற்கலைஞர் அவர்கள், செம்மொழியா வது யாது ? என்ற வினாவுக்கு விடையளித் திடும்போது:

“திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழி யாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை ? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளி தினுணர வல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின் கண் முற்றும் அமைந் திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படு மிடத்துப் பிறபாஷைச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழியென்பது திண்ணம். இது பற்றியன்றே தொன்று தொட்டுத் தமிழ் மொழி செந்தமிழ் என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளி ராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும், உயர்தனிச் செம்மொழியே யாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங் கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுயர் தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச்செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்''.

– என்று தமிழ்மொழியைச் செம்மொழி என நூறாண்டுகளுக்கு முன்பே அறுதியிட்டு, உறுதியாக நிலைநாட்டிக் குரல் கொடுத்தார்.

ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின், தாம் மேற்கொண்ட இதே நிலையைத்தான் இறுதிவரை பரிதிமாற்கலைஞர் வலியுறுத்தி வந்தார். பேராசிரியர் இராகவையங்கார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த “செந்தமிழ்'' எனும் மாத இதழில், 1902ஆம் ஆண்டு, “உயர்தனிச் செம்மொழி'' என்று தலைப்பிட்ட கட்டுரையில், பரிதிமாற்கலைஞர் “தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற நம் அமிழ்தினு மினிய தமிழ்மொழி எவ்வாற்றாணாராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாமென்பது திண்ணம். இத்துணையுயர்வுஞ்சிறப்பும் வாய்ந்த நம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங் கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத், தென்னாட்டுயர்தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம்'' – என்று விளக்கி உரைத்தார்.

அதனால்தான்; மதுரை மாவட்டம், திருப்பரங் குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி எனும் கிராமத்தில் கதவு எண்.4–219ல், 2508 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, நினைவில்லமாகப் பராமரித்திட 16.11.2006 அன்று ஆணையிட்டு; தனியார் பொறுப்பிலிருந்த அந்த இல்லத்தை கையகப் படுத்திட, 1.12.2006ல் 3 இலட்சத்து 84 ஆயிரத்து 534 ரூபாய் அனுமதிக்கப்பட்டு – அந்தப் பழைய இல்லம் கழக அரசால், 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டு – புதிய பொலிவுடன் நினைவில்லமாக்கப்பட்டு – நினைவில்லத்தின் முகப்பில் பரிதிமாற்கலைஞர் அவர்களின் மார்பளவு சிலை ஒன்றும் நிறுவப்பட்டு – 31.10.2007 அன்று பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பரிதிமாற்கலைஞரின் நினைவில்லத்தைத் திறந்து வைத்து; வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள அவரது மார்பளவு வெண்கலச் சிலையைத் திறந்துவைத்து; பின்னர் நினைவில்லத்தில் அவரது வரலாற்றுக் குறிப்புகள், அரிய புகைப்படங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு; அங்கு வைக்கப் பட்டிருந்த பார்வையாளர்கள் புத்தகத்தில்,

**“தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரி குரல்கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் புகழ் வாழ்க!”**

– என நான் எழுதிக் கையெழுத்திட்டேன்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரிய முதல் தமிழன் பரிதிமாற்கலைஞர் என்பதால் தான், கழக அரசு வேறுசில சிறப்புகளையும் அவருக்குச் செய்திருக்கிறது. பரிதிமாற் கலைஞர் படைத்துள்ள நூல்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கி, அவரது மரபுரிமை யர்க்கு 2.12.2006 அன்று 15 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசின் கோரிக்கை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் ஏற்கப்பட்டு, 17.8.2007 அன்று பரிதிமாற் கலைஞர் நினைவு சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

தமிழில் நாடக இலக்கண நூல் இல்லாத குறையைப் போக்க விரும்பி, தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் ஆராய்ந்து, நாடகவியல் என ஒரு நூல் எழுதி வெளியிட்டவர் பரிதிமாற்கலைஞர்.

இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி உட்பட உள்நாட்டு மொழிகளைப் பாடப்பகுதியிலிருந்து நீக்கிட திட்டமிட்டபோது; பரிதிமாற் கலைஞரும், திரு.பூர்ணலிங்கம் பிள்ளையும், தமிழறிஞர்களின் வீடுதோறும் சென்று, முயன்று பல்கலைக்கழகத்தின் திட்டத்தைத் தடுத்தனர்; தமிழ்மொழி தொடர்ந்து பல்கலைக்கழகப் பாடமொழியாக நீடித்தது.

தமிழ்மொழியைச் செம்மொழியென்று பிரகடனப்படுத்துவதற்கு அடித்தளம் அமைத்த பரிதிமாற்கலைஞர் – நூறாண்டுக் கால மொழி உரிமை வரலாற்றைத் தொடங்கி வைத்த தமிழறிஞர் – ஏறத்தாழ 33 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அப்பெருமகனார் – தமிழ் மொழி வரலாற்றில் நிலைத்த புகழைக் கொண்டுள்ளார்.

சூரியநாராயண சாஸ்திரியார் எனும் பரிதிமாற் கலைஞர் அவர்கள்; வடமொழியா ளரின் ஏமாற்று வேலைகள் எப்படிப்பட்டவை என்பதை – அவர்களது முகத்திரையைக் கிழித்து, அணிந்திருந்த முகமூடியைக் கழற்றி – அவர்களது வேடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார். "தமிழ்மொழியின் வரலாறு" என்ற அவரது நூலில் உள்ள அந்தப் பகுதி, தமிழர்கள் அனைவரும் – குறிப்பாக பெரியார், அண்ணா வழி வந்தவர்கள் – தவறாது நினைவு கூரத்தக்கதாகும். அது பின்வருமாறு:

"வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்மநூற்பயிற்சிக்கு உடையாராயும், கலையுணர்ச்சி சான்றவராயுமிருந்தமை பற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர்; தமிழர்களிடத்தில்லாதிருந்த 'அந்தணர்', அரசர், வணிகர், வேளாளர்' என்ற நால்வகைச் சாதி முறையை மெல்ல மெல்ல நாட்டி விட்டனர்.

**"முற்படைப் பதனில்வே றாகிய**
**முறைமைபோல்**
**நால்வகைச் சாதியிந் நாட்டில் நீர், நாட்டினீர்"**

– என்று ஆரியரை நோக்கி முழங்குங் 'கபிலரகவ' லையுங் காண்க. இன்னும் அவர்தம் புந்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம், அமைச்சர்களெனவும் மேலதி காரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழி யினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்"

– என்று பரிதிமாற்கலைஞர் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன்னரே எடுத்துக்காட் டுகளுடன் இயம்பியிருப்பது; பெரியார் – அண்ணா எண்ண ஓட்டங்களைப் பிரதிபலிப்ப தாக அமைந்திருக்கிறதல்லவா? அதனால் தான் சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களை, முதல் தமிழன் பரிதிமாற்கலைஞர் என்று அழைத்து அவர் புகழ் வாழ்க என்று எனது நெஞ்சத்து உணர்வு கலந்து வாயார வாழ்த்தி எழுதினேன்!

அன்புள்ள,

**மு.க.**

## செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 2

### <u>கால்டுவெல் காட்டிய திராவிடத் தனிச்சிறப்பு</u>

**(26–12–2009)**

உடன்பிறப்பே,

தமிழ்மொழி செம்மொழியென முதல் குரல் கொடுத்த தமிழர் பரிதிமாற்கலைஞர் என்றால்; தமிழ்மொழி செம்மொழியென்று முதலில் சொன்ன வெளிநாட்டவர் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் ஆவார்கள். பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழி செம்மொழியென 1887ஆம் ஆண்டு குரல் கொடுத்ததற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே, 1856ஆம் ஆண்டு அறிஞர் கால்டுவெல் அவர்கள், தாம் எழுதிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் ( A Comparative Grammarofthe Dravidian Languages)" என்ற ஒப்புவமை காண்பித்திட இயலாத, உயர்பெரும் நூலில்,

“திராவிட மொழிகள் அனைத்திலும், உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒருசிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்.

செந்தமிழ் என்றும் தனித்தமிழ் என்றும் சிறப்பிக்கப் பெறுவதும், பெரும்பாலும் அம்மொழி இலக்கியங்கள் அனைத்தையும் எழுதப் பயன்படுவதுமாகிய பழந்தமிழ் அல்லது இயல்தமிழ், மிக மிகக்குறைந்த சமஸ்கிருதத் தொடர்பையே பெற்றுள்ளது. சமஸ்கிருதச் சொற்களையும் எழுத்துக்களையும் மேற்கொள்வதை வெறுத்து ஒதுக்கிவிட்டு; பழந்திராவிட தனிச்சிறப்பு வாய்ந்த மூலங்கள், சொல்லுருவங்கள், ஒலி முறைகளை மட்டும் மேற்கொள்வதில் காட்டும் ஆர்வத்தையும் விழிப்புணர்ச்சியையும் விடாமல் மேற்கொண்டிருப்பதினாலேயே அச்செந்தமிழ், தன் மொழியின் உரைநடை, பேச்சு நடைகளோடு சிறப்பாக வேறுபடுகிறது. **(The ancient or classical dialect of the Tamil language, called Shen-Tamil or correct Tamil, in which nearly all the literature has been written, contains exceedingly little Sanskrit; and differs from the colloquial dialect, or the language of prose, chiefly in the sedulous and jealous care with which it has rejected the use of Sanskrit derivatives and characters, and restricted itself to pure Ancient Dravidian sounds, forms, and roots)”**

– என்று தமிழ்மொழி செம்மொழியே எனச் சான்றாதாரங்களோடு நிரூபித்துக் காட்டினார்.

தமிழ் மொழியின் தொன்மையும், தூய்மையும், வலிமையும், வனப்பும் – கற்றோர் அனைவரையும் கவர்ந்திழுத்து ; உயிருக்கும் மேலென உணரவைத்திடும் தகுதி மிக்கதாகும். அப்படித் தமிழால் கவரப்பட்ட வெளிநாட்டவர் அநேகர். அவர்களுள் தலையாயவர் கால்டுவெல் அவர்கள் ஆவார்கள். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் கால்டுவெல், 1838ஆம் ஆண்டு தனது 24ஆம் வயதில் மதபோதகராக, “லண்டன் சமயத் தொண்டர் சங்கத்தின்” மூலமாகச் சென்னை வந்தடைந்தவர்; பின்னர் நெல்லைப் பேராயராகப் பொறுப்பேற்று, பன்னூறு ஓலைச்சுவடிகளையும், சங்ககாலத் தமிழிலக்கியத்தையும் பயின்று, புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பாண்டியர் காலத்திற்குச் சொந்தமான கயல்சின்னம் பொறிக்கப்பட்ட நாணயங்களைக் கண்டுபிடித்து, நெல்லை வரலாற்றை ஆய்வு செய்து, தமது ஆய்வுகளின் அடிப்படையில் நெல்லை வரலாற்றைப் பற்றி நூல் எழுதினார். ‘திராவிட மொழிகள் (Dravidian Languages)’ என்ற சொல்லாக்கத்தை உருவாக்கியர் கால்டுவெல் அவர்களே ஆவார்.

அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆழ்ந்த ஆராய்ச்சி அடிப்படையிலான நூல்கள் தமிழகத் தில் பிராமணர் அல்லாதார் இயக்கத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைந்தன. தமிழ், தமிழர்தம் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த பற்றின் அடிப்படையிலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது, அவரது திருவுருவச் சிலையைச் சென்னை மெரினா கடற்கரையில் நிறுவிடச் செய்தார்கள். தென்னிந்தியத் திருச்சபையினர் வழங்கிய இராபர்ட் கால்டுவெல் அவர்களது திருவுருவச் சிலை, 2.1.1968 அன்று, அன்றைய தமிழக மேலவைத் தலைவர் திரு.எம்.ஏ.மாணிக்கவேலர் அவர்களது தலைமையில், பன்மொழிப் புலவர் திரு.கா.அப்பாத்துரையார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மிகவும் ஆழமான புலமை கொண்டு, புகழ் உருவமாகத் திகழ்ந்த டாக்டர் கால்டுவெல் அவர்கள் தமிழைச் செம்மொழி யென்று அறிவித்தது; செம்மொழி வரலாற்றில் நமக்கு மாணிக்கப் புதையலாகக் கிடைத்திட்ட மகத்தான பொன்னேடாகும்.

தமிழ்மொழி செம்மொழியேயென அறுதியிட்டு உறுதியாக சைவ சித்தாந்த மகா சமாஜம் 1918ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றிய தீர்மானம் தமிழ் ஆர்வலர்களாலும், அன்பர்களாலும் மிகுந்த மகிழ்ச்சியோடும், நிறைவோடும் நினைவு கூரத்தக்கதாகும். அத்தீர்மானம் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

“சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆதரவில் வெள்ளிக்கிழமை (15.3.1918) மாலை 5.45 மணிக்குப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் தமிழ் மொழிக்குரிய சில தீர்மானங்கள் செய்தற்பொருட்டு ஏறக்குறைய 400 தமிழ் மக்கள் கூடினர். பல பண்டிதர்களும், வித்துவான்களும், ஆங்கிலேய பட்டதாரிகளும் கூட்டத்தைச் சிறப்பித்தனர். தமிழ் அகராதிக் கழகத் தலைவரான சாண்டலர், எம்.ஏ., தலைவராக அமர்ந்து, தமிழ்மொழியின் உணர்வைக் குறித்துச் சில செய்திகள் பேசிய பின்னர்,

தீர்மானம் 1.

திராவிட மொழிகளுள் தொன்மையும் சீர்மையும் தலைமையும் பெற்றொளிர்கின்ற உயர் தனிச்செம்மொழி தமிழேயாம். இயற்கைச் செவ்வொளிகளானியன்ற எழுத்துடைமையின், என்றும் வழங்குமியல்பிற்றாய்த் தொன்மையே தனக்கென வகுத்த வரிவடிவுடையதாய்ப் பல்வளமிக்க பண்டையிலக்கண இலக்கிய நுண்ணூற் பெருக்குடையதாய்த் தனக்கே சிறக்கும் அகப்பொருள் நுணுக்கமும் புறப்பொருட்பொலிவும் அருணூற் செம்மையும் உடையதாய்த் திகழா நிற்றலின், அது சர்வ கலா சங்கத்தாரால் ஆரியம், அரேபியம், பாரசீக முதலிய ஏனைத்தனி மொழிகளோடொப்ப வைத்துப் போற்றப்படவேண்டு மென்னும் முதல் தீர்மானத்தை திரு.கே.சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.,எம்.எல்., முன்மொழிந்தார். தமிழ்மொழி மிகத்தொன்மையும், சிறப்பும் வாய்ந்த ஒரு மொழி என்றும், திராவிட நூல்களைக் குறித்துச் சில வடமொழி உபநிடதங்களில் குறிக்கப் பட்டுள்ளமையே அதன் பழைமையை நன்கு

விளக்குமென்றும், தமிழ்ப் பண்டை இலக்கண மாகிய தொல்காப்பியம், வடமொழிப் பாணினீயம் என்னும் இலக்கணத்துக்கு முன்னரே செய்யப்பட்டதென்றும், தமிழ்மொழி யின்கண் உள்ள எழுத்துக்கள் இயற்கை ஒலிகளால் அமைந்த எழுத்துக்களென்றும், தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்தால் அவற்றின் நுணுக்கங்கள் வெளியாகுமென்றும் கூறி முடித்தனர். பின்னர் அந்த முன்மொழிவினை திரு ஆர்.பி.சேதுப்பிள்ளை பி.ஏ., அவர்கள் வழிமொழிந்து பேசும் பொழுது, தமிழ் மொழியானது ஏனைய உயர்தனிச் செம்மொழி களோடு ஒப்பவைத்து எண்ணுதற்குரிய உயர்வும் சீர்மையும் உடையதென்றும், இக்காலத்தில் தமிழ் தனிமொழியென்றும், தென்மொழியென்றும் பல அறிவாளிகள் ஒப்புக்கொண்டபோதிலும், அம்மொழி, நூல்வழக்கோடு உலக வழக்கிலும் காணப் படுகின்றமையால் அது உணர்தனிச்

செம்மொழி அன்று என்னும் ஆசங்கை நிகழ்த்துபவர்கள், செம்மொழியின் உண்மை இலக்கணம் உணர்ந்தவரல்லர் என்றும், ஒரு மொழியானது திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்தியதாயிருப்பின் அதுவே உயர்தனிச் செம்மொழி என்ற பெயருக்கு உரியதென்றும், தமிழ்மொழியின் திருந்திய பண்பு அதன் பண்டை இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் திட்ப நுட்பங்களால் தெளியப்படுமென்றும், ஆதலின் தமிழ் ஏனைய உள்நாட்டு இலக்கண வரம்பில்லா மொழிகள் போல எண்ணப்படுதல் கூடாது என்று நடுநிலை தவறாத ஆங்கிலேய நூல் ஆசிரியர்கள் கூறியுள்ளாரென்றும், தமிழ் நூல்களின் தலையாய சிறப்பும், அகப்பொருள் புறப்பொருள் நுணுக்கமும், சொற்சுவை பொருட்சுவைகளும், அதன்சீர்த்த நாகரிகத்தை விளக்குகின்றன வென்றும், தமிழ்ப் பண்டை இலக்கியங்களில் ஒன்றாகிய திருக்குறள் இக்காலத்தில் வழங்கி வரும் பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே அம்மொழியின் உயர்வை உணர்த்துமென்றும், இன்னும் ஏனைய உயர்தனிச் செம்மொழிகள் பல கிளைமொழி களுக்குத் தாயகமாய் நிற்றல் போல, தமிழ்மொழியும் திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, முதலிய கிளைமொழிகளை உடையதென்றும், ஏனைய செம்மொழிகளினும் தமிழ்மொழி தொன்மையுள்ளது என்பது, இன்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டுள்ள தொல்காப்பியமென்னும் இலக்கணத்தாலே நன்கு விளங்குமென்றும், எவ்வாறெனில் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் முறையாதலாலும், இலக்கியத் தினின்று எடுபடுவதே இலக்கணமாதலாலும், நம் தமிழ்மொழி சரித்திர காலத்திற்கு மிகவும் அப்பாற்பட்ட காலத்திலேயே பல இலக்கியங் களை உடையதாய்ச் சிறப்புற்று ஓங்கியிருத்தல் வேண்டுமென்றும், ஆகவே தமிழ் தொன்மையும் சீர்மையும் திருந்திய பண்பும் வாய்ந்த செம்மொழியாயிருத்தலின், சர்வகலா சங்கத்தார் தமிழையும் உயர்தனிச் செம்மொழிகளோடு ஒன்றாக வைத்து எண்ண வேண்டுவதவசியமென்றும் கூறி முடித்தனர். பின்னர் தமிழ்க் களஞ்சியம் பத்திராதிபரான ஈசுவர அய்யரவர்கள், தமிழ் தனிமொழி யென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன என்று கூறி வழிமொழிந்த பின்னர் பண்டிகை திருமதி அலர்மேல்மங்கைத் தாயாரவர்கள், தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து கொள்ளாத சர்வகலாசாலை சங்கத்தினர் சிலர் தமிழ்மொழியைக் குறை கூறுகின்றாரென்றும், தமிழ் சிறந்த மொழிகளுள் ஒன்றாக வைத்து எண்ணுதற்கு உரிய உயர்வுடைமையால் அதனைச் சர்வகலாசாலைச் சங்கத்தார் அங்கீகரித்தல் அவசியமென்றும், சொல்லி முடித்த பின்னர் முதல் தீர்மானம் அங்குக் கூடியிருந்த தமிழ் நன்மக்கள் அனைவராலும் ஒருமுகமாக அங்கீகரிக்கப்பட்டது. “

பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தைப் பற்றி, தனித்தமிழ் அறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் **12.3.1918**ஆம் தேதி பற்றிய தமது நாட்குறிப்பில், “தமிழைச் செம்மொழியாக **(Classical Language)** ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் விடுப்பதற்குப் பச்சையப்பன் கல்லூரியில் **15**ஆம் நாள் **(15.3.1918)** நடக்கவிருக்கும் கூட்டத்தில் என்னை உரையாற்றுமாறு, திரு.கா.சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.,எம்.எல்., வேண்டினார்” என்று குறிப்பிட்டுள்ளார்.

தஞ்சை–கரந்தைத் தமிழ்ச் சங்கம், செம்மொழி வரலாற்றிற்கு வழங்கியுள்ள மிகச்சிறப்பான பங்களிப்பு போற்றத்தக்கது மட்டுமல்ல; புவியில் வாழும் நாள்வரை தமிழர்களால் மறக்கவொண்ணாததுமாகும். திரு.த.வே.இராதாகிருஷ்ணப் பிள்ளை உள்ளிட்ட தமிழ் ஆர்வமும், தமிழ்ப் பயிற்சியும் உடையோர் சிலரால் **1911**ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கம்; தொடங்கிய காலம் முதல் தமது வாழ்நாள் இறுதிவரை அதன் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர் தமிழறிஞர் த.வே.உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் ஆவார்கள். அதனால் தான், 18.2.2006 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் – கலைஞர் அரங்கில் நடைபெற்ற தமிழவேள் உமாமகேசுவரனார் அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் நான் உரையாற்றிய போது:

“உமாமகேசுவரனார் பெயர் இன்று மற்ற அறிஞர்களைவிட அதிகமாக நினைவுக்கு வரவேண்டிய காலகட்டம் இது. காரணம் தமிழ்ச் செம்மொழி என்று எண்ணினால், பரிதிமாற் கலைஞருக்கு அடுத்து, நம் நினைவுக்கு வருகிற பெயர் தமிழவேள் உமாமகேசுவரனாரின் பெயர்தான். அவர்தான் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ், செம்மொழியாக ஆக்கப் படவேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியவர். இல்லையேல், தமிழ் செம்மொழியாவதற்கு எந்த ஆதாரத்தை வைத்து நாம் மத்தியிலே இருக்கின்ற அரசோடு பேசமுடிந்தது ? “

– என்று கரந்தை உமாமகேசுவரனாரின் அருமைபெருமைகளுக்கு அணி செய்தது எனது நினைவில் அழுத்தமாக அச்சியற்றப் பெற்றிருக்கிறது.

தஞ்சை – கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஏழு–எட்டாம் ஆண்டுகளுக்கான விழா, 24.5.1919 மற்றும் 25.5.1919 ஆகிய நாட்களில் திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் திருஞானியார்மடத்தின் தலைவர் திரு.சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சார்ய சுவாமிகள் அவர்கள் தலைமையில், தமிழவேள் த.வே.உமாமகேசுவரம் பிள்ளை, தமிழறிஞர் வேங்கடசாமி நாட்டார், திரு.டி.என்.குருமூர்த்திப் பிள்ளை, திரு.டி.கூரத்தாழ்வார் முதலியார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அவ்விழாவில், ''தமிழ்மொழியானது தொன்மையும், சீர்மையும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்ற ஓர் உயர்தனிச் செம்மொழி யென உறுதிப்பட பலதிறத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதால், சென்னைப் பல்கலைக் கழகத்தார் தாம் இதுகாறும் கொண்டிருந்த கொள்கையை மாற்றித் தமிழ்மொழி, ஓர் உயர்தனிச் செம்மொழியே என்பதை ஒப்புக் கொண்டு, இத்தென்னாட்டுப் பல்கலைக் கழகத்தில் அதற்கு முறைப்படி முதலிடமும், உரிமைகளும் கொடுக்க வேண்டும்'' என்று வற்புறுத்தித் தீர்மானம் இயற்றப்பட்டது. இந்தத் தீர்மானம், தமிழ்ச்சங்க உறுப்பினர்களான திரு.டி.ஏ.சபாபதி பிள்ளை அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு.எம்.அப்பாவு முதலியார் அவர்களால் வழிமொழியப்பட்டது. இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சென்னைப் பல்கலைக் கழகத் தலைவர், துணைத் தலைவர், பதிவாளர் ஆகியோருக்கும், சென்னை ஆட்சியமைச்சர் அவர்களுக்கும் முறைப்படி அனுப்பப்பட்டது.

செம்மொழி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல் போன்று அமைந்த மகத்தான தீர்மானம் இதுவாகும். காரணம், இதுதான் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டு மென்று அமைப்புரீதியாக நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் ஆகும்.

தொடர்ந்து, தஞ்சை–கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழா, 21.8.1920 அன்று திரு எஸ்.சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவிலும், ''எவ்வளனும் இனிது வாய்ந்துள்ள தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழி வரிசையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பலமுறையும், சென்னைப் பல்கலைக்கழகத்தாரை வற்புறுத்தியும், அவர்கள் இன்னும் அவ்வாறு செய்யாமலும், கட்டாயப் பாடமாக ஏற்படுத்தாமலும் இருப்பது பிழையென்று அறிவிப்பதோடு, இனியாவது அவர்கள் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரி களில் கலை பயில் கருவிமொழியாகவும் கொண்டு, தங்கள் முதல் கடமையைச் செலுத்தும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக் கொள்கிறார்கள்'' எனும் தீர்மானம் இயற்றப்பட்டது. இத்தீர்மானத்தை திரு.வி.ஏ. சகராயப் பிள்ளை முன்மொழிய, திரு.ஐ.குமார சாமிப்பிள்ளை வழிமொழிந்தார்.

**1921**ஆம் ஆண்டில் சென்னை மாகாண ஆட்சித் தலைவர் அவர்கள், தஞ்சைக்கு வருகை தந்தபோது, செந்தமிழ் மொழியினை உயர்தனிச் செம்மொழியாக அறிவிப்பது தொடர்பாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக திருவாளர் இராவ்பகதூர் வீ.அ.வாண்டையார் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினர் சென்று தங்கள் கோரிக்கைகளை நேரில் எடுத்துரைத்தனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பதினோராவது ஆண்டு விழா 18.11.1922 மற்றும் 19.11.1922 ஆகிய நாட்களில் திரு.க.சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின் போது, ''விசுவபாரதிக்குடையார், தமிழை உயர்தனிச் செம்மொழியாகச் சம்மதித்து, அதனை அவர்கள் பாடவரிசையில் சேர்த்துக் கொள்ளவேண்டும்; இந்தியாவின்தொன்மைவரலாறுஎழுதுவோர்க்குத் தென்னிந்திய வரலாறு இல்லையாயின் முற்றுப் பெறாததாலும், வேண்டிய செய்திகள் சங்கத் தமிழ் நூல்களில் மட்டும் கிடைக்குமாதலாலும், உலகத்து நாகரிகமுற்ற நாடுகளில் தமிழ்நூல், தமிழறிவுப் பரப்பை மிகுவிக்க வேண்டும்'' எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**22.9.1923** மற்றும் **23.9.1923** ஆகிய நாட்களில் தமிழ் வள்ளல் சா.ராம.மு.சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பன்னிரெண்டாவது ஆண்டுவிழாவில், ''உலகத்து உயர்தனிச் செம்மொழிகளில், முதல் மொழியெனக் கருதப்படுவதற்குரித்தான எல்லா இலக்கணமும் தமிழ் மொழி உடையதா யிருப்பதால், அதனை அத்தகை மொழியாக ஆட்சியாளர் கருதி ஐ.சி.எஸ். பட்டத்திற்கு அதனை ஒரு பாடமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்திய அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகிறது'' எனும் தீர்மானம் இயற்றப்பட்டது.

**1938**ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **15, 16, 17**ஆகிய நாட்களில் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாவிற்குத் தலைமையேற்ற திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் தனது உரையில், ''இத்தகைய பெருமையும், இனிமையும் உடைய தமிழை உயர்தனிச் செம்மொழி என்ற நிலையில் அரசியலார் போற்றாதிருப்பது கவலத்தக்க தாகும்'' என்று தனது ஆழ்ந்த வருத்தத்தை வெளியிட்டார்.

இவ்வாறு கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்கள் தலைமையில் தொடக்கக் கட்டத்தில்; தமிழ், செம்மொழியென அரசியல் நிலையில் அங்கீகரிக்கப்பட்டு உரிய முறையில் சிறப்பு செய்யப்படவேண்டும் என்பதற்கு ஆற்றிய பணி அளவிடமுடியாததாகும். செம்மொழி வரலாற்றில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆற்றல் மிக்கதோர் அத்தியாயமாக இடம் பெற்றுள்ளது.

அன்புள்ள,

**மு.க.**

# செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 3

## பாவாணர் கண்ட பதினைந்து சான்றுகள்

**(27–12–2009)**

உடன்பிறப்பே,

1919ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் நாளன்று, திருச்சி டவுன்ஹாலில் பிராமணர் அல்லாதார் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில், திருச்சி வழக்கறிஞர் திரு.டி. சி.தங்கவேலு, ராவ்பகதூர் ஒ.கந்தசாமி செட்டியார், திரு.டி.ஏ.ஜி.ரத்தினம், திரு.டி.வி. சுப்பிர மணியம், திவான்பகதூர் பி.ராமராயநிங்கார், இராமநாதபுரம் மன்னர், கொல்லங்கோடு மன்னர், தொட்டப்பநாயக்கனூர் ஜமீன்தார், திரு.டி.ஆர். மருதமுத்து மூப்பனார் போன்ற பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் முன்னணியினர் கலந்து கொண்டனர். அந்த மாநாட் டில், பிராமணர் அல்லாதாருக்குத் தனி வாக்குரி மைத் தொகுதி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், கலப்புத் திருமணம் ஆகியவை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு முக்கியமான தீர்மானம் பின்வருமாறு:

“சென்னைப் பல்கலைக்கழகமும், அரசுப் பணித் தேர்வாளர்களும்; பாரசீக மொழி, அரேபிய மொழி, வடமொழி ஆகிய மொழிகளுக்குச் சமமாக; செறிவும், செழிப்பும் நிறைந்த மிகப்பழமை வாய்ந்த இலக்கியங்களைக் கொண்டுள்ள தமிழ் மொழியை, செம் மொழியாக அங்கீகாரம் செய்யவேண்டும் **(Tamil, which is rich in ancient literature, should be recognised by the University of Madras and the Civil Service Examiners as a Classical Language on the same footing as Persian, Arabic and Sanskrit).** “

இவ்வாறு பிராமணரல்லாதார் இயக்கத்தைச் சேர்ந்த நமது நீதிக்கட்சியின் முன்னோர், 1919ஆம் ஆண்டிலும்; தமிழவேள் உமாமகேசு வரனார் தலைமையில் அமைந்திருந்த கரந்தைத் தமிழ்ச்சங்கம் கடைசியாக 1923ஆம் ஆண்டிலும்; தமிழ் செம்மொழியாக அங்கீகரிக் கப்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பிறகு;

விடுதலைப் போராட்ட வீரரும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், பாகிஸ்தான் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்தவரும், உருது, அரேபியம், இந்தி, பாரசீகம், வங்காளம், ஆங்கிலம் ஆகியமொழிகளைக் கற்றுத்தேர்ந்த பன்மொழி அறிஞரும், கவிஞரும், பண்டிதநேரு அவர்களின் மத்திய அமைச்சரவையில் இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராகப் பணியாற்றியவரும், இலவசத் தொடக்கக் கல்வியை அறிமுகப்படுத்தியவரும், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களை(**IITs**) அமைத்த வருமான மாண்புமிகு மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள்; 15.3.1951 அன்று – சாகித்ய அகாடமியை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட மாநாட்டில் தொடக்க உரையாற்றிய போது, “இந்திய அரசியல் சட்டத்தால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள பதினான்கு மொழி களில் சமஸ்கிருதமும், தமிழும் அடங்கும். சமஸ்கிருதம் தனிவகையைச் சேர்ந்தது; வளம் செறிந்த செம்மொழிகளுள் ஒன்றாக முறையாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள மொழியாகும். தமிழ்மொழி செழுமையும், தொன்மையும் மிக்க இலக்கியத்தைக் கொண்டது; அம் மொழியிலுள்ள கவிதைகள் வெளிநாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்குரிய தகுதி படைத்தவை; தமிழ் உண்மையிலேயே ஒரு செம்மொழி என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்; தமிழ் செம்மொழியென அங்கீகாரம் செய்வதற்குரிய தகுதிப் பாடுகள் அனைத்தும் பண்டைக் காலத்தைச் சார்ந்தவை **(The fourteen languages recognised by the Constitution include Sanskrit and Tamil. Sanskrit is, of course, in a class by itself, and is rightly recognised as one of the most developed of classical languages. Tamil also has a rich and ancient literature and its poetry has been and deserves to be translated into foreign languages. We must however, remember that Tamil is really a Classical Language, and most of the achievements of Tamil which entitle it to recognition belong to a past age)** என்று தமிழ் செம்மொழியே என்பதைச் சுட்டிக் காட்டினார்.

1955ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26, 27, 28 ஆகிய நாட்களில் சிதம்பரம் – அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய கீழ்த்திசை மாநாட்டில் தலைமை யுரை ஆற்றிய பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்; 15.3.1951 அன்று மத்திய கல்வி அமைச்சர் மாண்புமிகு மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள் சாகித்ய அகாடமியை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட மாநாட்டில் ஆற்றிய மேலே குறிப்பிட்ட தொடக்க உரையைச் சுட்டிக்காட்டி, “அவ்வாறு தமிழ்மொழியைச் செம்மொழியென அங்கீகாரம் அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தேவையான அங்கீகாரத் தை இந்தக் கீழ்த்திசை மாநாடு வழங்கவில்லையெனில், வேறுயார் தான் வழங்க முடியும் ? **(My appeal is only to give effect to this recognition and if this Oriental Conference of Scholars is not going to give this recognition, who else would?)”** என்று வினாக் கணை தொடுத்தார்.

செம்மொழி வரலாற்றில் அடுத்த கட்டம் 1966ஆம் ஆண்டு உருவானது. அதனை உருவாக்கியவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் ஆவார்கள். பாவாணர் நுண்ணிய ஆய்வு ஆராய்ச்சிக்குப் பிறகு, தமிழ்மொழி செம்மொழியே என மொழி அறிஞர் கள் அனைவரும் ஏற்றுப் போற்றும் வகையில், உரிய சான்றுகளுடன் “உலகின் முதன்மை யான செம்மொழி **(The Primary Classical Language of the world)”** என்ற அரிய நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். அந்த நூலில், “லெமூரியாவை மூலமாகக் கொண்டுள்ள மொழியான தமிழ்மொழி, மிகப்பெருமளவுக்குச் செழித்து வளர்ந்துள்ள செம்மொழியாகும் **(Tamil is a highly developed Classical Language of Lemurian Origin)”** என்ற கருத்தை உரிய சான்றுகளுடன் விளக்கிச் சொன்ன பாவாணர், செம்மொழிக்கான பின்வரும் தகுதிப்பாடுகள் அனைத்தையும் கொண்டு இலங்குவது தமிழ் என்று நிலை நிறுத்திக் காட்டினார்:

“தமிழ்மொழி–செம்மொழித் தகுதிபாட்டுச் சான்று ஆதாரங்கள்

**EVIDENCES OF THE PRIMARY CLASSICALITY OF TAMIL**

1. தொல் இலமூரியா காலத்தோடு தொடர்புடையது
**(Lemurian Origin of Tamil)**
2. சந்த ஒலிச் சால்பு
**(Phonological simplicity of Tamil)**
3. உலகளாவிய உணர்வுப் பெருமிதம்
**(Catholicity of Tamil)**
4. ஆரிய மொழிகளுக்கிடையே, தலைநிமிரும் தமிழின் தரம்
**(Tamulic substratum of the Aryan family of languages)**
5. சொல்லமைப்பின் தொன்மையும் ஒலிச் சுருக்கமும்
**(Morphological parity and primitiveness of Tamil)**
6. தமிழ்மொழியில் உள்ள “அம்மா” “அப்பா” என்கிற சொற்கள் பிற பழைமையான மொழிகளில் ஒத்த வடிவங்களில் உள்ளன. **(The presence of the words ‘amma’ and ‘appa’ in almost all great languages in some form or other).**
7. எழுவாய் வேற்றுமைக்குத் தனி விகுதி யின்மை.
**(Absence of Nominative case-termination in Tamil)**
8. அடைமொழிகள் பிரிக்கத்தக்கவை – ஆழமுடைமை
**(Separability and significance of all affixes in Tamil)**
9. தமிழ் சொற்களுக்குப் பாலினம் இல்லை.
**(Absence of morphological gender in Tamil)**
10. தமிழில் ஒழுங்கு முறையற்ற சொற்கள் இல்லை.
**(Absence of arbitrary words in Tamil)**
11. தமிழ்மொழி தோன்றிய காலத்தைக் கண்டறிய இயலும்.
**(Traceability of Tamil to its very origin)**
12. தமிழில் காணப்படும் சொற்கள் இயற்கையான காரணகாரிய தொடர்புடை யவை. **(Logical and natural order of words in Tamil)**
13. ஒருமை, இருமை, பன்மை என்று வட மொழியில் இருக்க, தமிழில் ஒருமை, பன்மை என்று இரண்டைப் பொருத்தமாகக் கொண்டு இருத்தல்.
**(Absence of dual number in Tamil)**
14. தமிழின் தனித்தன்மையும் – இயற்கைத் தன்மையும்
**(Originality and natural development of Tamil)**
15. உயர்ந்த இலக்கியத் தரமிகுந்த நூற்கோவைகள்
**(Highest order of the classicality of Tamil)”**

பாவாணர் எடுத்துரைத்த அசைக்கமுடியாத ஆதாரங்கள் தமிழ் ஆர்வலர்களையும், அறிஞர்களையும் மட்டுமல்லாமல், பிறமொழி அறிஞர்களையும் குறிப்பாக, வடமொழி மற்றும் ஆங்கிலப் புலமை மிக்கோரையும் பெரிதும் ஈர்த்து ஏற்றுக் கொள்ளச் செய்தன.

பாவாணரின் தமிழ்மொழி மேதைமையையும், ஆழ்ந்த தமிழ்ப்பற்றினையும், தமிழ் செம் மொழியே என அனைவரும் ஏற்றுக் கொள்வதற்கு அவர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகளையும் பாராட்டிப் போற்றிடும் வகையில்; கழக அரசு 1974ல், ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்'' ஒன்றினை நிறுவி, அதன் முதல் இயக்கு நராக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை நியமித்தது.

பிறமொழித் தாக்கத்திலிருந்து தமிழைப் பாதுகாக்கத் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் வழியைப் பின்பற்றி; ''உலகத்தமிழ்க் கழகம்'' கண்ட பெருமைக்குரியவர் பாவாணர். பாவாணர் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட; மதம் – குலம் இவற்றைக் கடந்து தமிழராக அவர் வாழ்ந்ததால், தம் பிள்ளைகளின் பெயர்களை; நச்சினார்க்கினிய நம்பி, சிலுவையை வென்ற செல்வராயன், அருங்கலைவல்லான் அடியார்க்கு நல்லான், மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி, மணிமன்ற வாணன், பைந்தமிழ் வளர்த்த பாண்டியன் – என இனிய தனித்தமிழில் வழங்கினார். இருபத்திமூன்று மொழிகளைக் கற்றுத் தேர்ந்து, பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தவர்

பாவாணர். அத்தகைய பாவாணரின் நினைவைப் போற்றிடும் வகையில் கழக அரசு, 1996ஆம் ஆண்டு அவரது படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கி, அவரது மரபுரிமையர்க்கு 20 இலட்ச ரூபாய் பரிவுத்தொகையை வழங்கியதோடு; அவரது நினைவு சிறப்பு அஞ்சல்தலையை, மத்திய அரசின் மூலம் 18.2.2006 அன்று வெளியிட்டுப் பெருமை கொண்டது. அதுமட்டுமல்லாமல், மதுரை மாவட்டம் சாத்தமங்கலம் கிராமத்தில், பாவாணர் அவர்களுக்கு 39 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்ச் செலவில் மணிமண்டபமும், அதில் பாவாணரது முழுஉருவச் சிலையும் தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட்டு, நான் 30.10.2007 அன்று திறந்து வைத்துச் சிறப்பு செய்தேன்.

அதன்பிறகு, நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. தமிழைச் செம்மொழியாக அறிவித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை முன் வைத்து, தமிழ் ஆர்வலர்கள் மத்தியிலோ, தமிழ் அமைப்புகள் மத்தியிலோ, பெரும் கருத்துரு வாக்கம் எதுவும் ஏற்படவில்லை.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, மதுரையில் 1981ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழைச் செம் மொழியாக அறிவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றியும், அந்த முயற்சி களுக்கு நேர்ந்த முடிவு பற்றியும், வளர்தமிழ்ச்செல்வர் மணவை முஸ்தபா அவர்கள் தனது ''செம்மொழி – உள்ளும் புறமும்'' என்ற நூலில் எழுதியுள்ளார்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில், இரண்டாம் நாள் காலை, நீதியரசர் மகராஜன் தலைமை யில் நடைபெற்ற பொதுநிலைக் கருத்தரங்கில், மணவை முஸ்தபா அவர்கள் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர் தனது உரையில், ''செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் இருந்தும், அதற்கு அரசு அங்கீகாரம் அளிக்காததால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பற்றி'' விரிவாகப் பேசினார். அவரது உரையைக் கேட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், மணவை முஸ்தபா அவர்களிடம் செம்மொழி தொடர்பாக அரசுக்கு ஒரு கோரிக்கை மனு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க, 1982ஆம் ஆண்டில், மணவை முஸ்தபா செம்மொழி கோரிக்கை மனுவை, தமிழக அரசின் பரிசீ லனைக்கு அனுப்பினார். அந்த மனு மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்பது குறித்து யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை.

1984ல் தனக்கு 'கலைமாமணி விருது' அளித்ததற்கு நன்றி கூறும் முறையில், முதல்வரு க்கு எழுதிய கடிதத்தில், மணவை முஸ்தபா செம்மொழி பற்றியும் நினைவூட்டினார். அது அரசுத் துறைச் செயலாளருக்கு அனுப்பப்பட; அன்றைய அரசுச் செயலாளர், அக்கோரிக் கை மனு மீது எழுதிய குறிப்பில், ''திரு.மணவை முஸ்தபா கூறுவது போல், தமிழைச் செம்மொழியாக்கினால், தமிழைச் செத்த மொழிகளின் பட்டியலில் சேர்த்ததாகி விடும் என்பதால், இக்கோப்பு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது'' என்ற முறையில் குறிப்பு எழுதி, கோப்பையே முடித்து வைத்துவிட்டதாக மணவை முஸ்தபா அவர்கள் கையறு நிலை கசியக் கசிய கண்ணீர் மல்கிட தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

செம்மொழி கோரிக்கைக்கு இந்தக் 'கதி' ஏற்பட்டதற்குப் பிறகும், இந்தக் களத்தில், யாரும் கவனம் செலுத்தவில்லை. மாநாடுகளிலோ, கருத்தரங்குகளிலோ, செம்மொழி கோரிக்கை முன்வைக்கப்படவில்லை.

1995ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கை, அப்போதைய இந்தியப் பிரதமர் திரு.நரசிம்மராவ் அவர்கள் முன்னிலையில் வைக்கப்பட்டதாகவும்; ஆனால் பிரதமர் அக்கோரிக்கை தொடர்பாக எவ்விதக் கருத்தையும் வெளிப்படுத்தாமல், தன்னுடைய உரையை நிறைவு செய்தார் என்றும் புலவர் த.சுந்தரராசன் (பொதுச் செயலாளர், தலைநகர்த் தமிழ்ச்சங்கம், சென்னை) கட்டுரை ஒன்றில் மிகுந்த கவலையுணர்ச்சியோடு தெரிவித்துள்ளார்.

''நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்'' என்று தொடங்கும் மனோன் மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய பாடலை, 1970ஆம் ஆண்டில் 'தமிழ்த்தாய் வாழ்த்துப்' பாடலாக ஆக்கிய பெருமை, கழக அரசுக்கு என்றென்றும் உண்டு. அதைப் போலவே, தமிழர்களின் நலன்காக்க, நாளும் பாடுபடும் கழக அரசு, தமிழ்மொழியின்

வளர்ச்சிக்கும் பாடுபடுவதை எந்தநிலையிலும் நிறுத்தாது என்பதற்கு உதாரணம்தான், நான்காம் முறையாக கழக அரசு பதவியேற்றபோது, தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கியது; அந்தத் துறை, அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், 13.5.1996 முதல் செயல்படத் தொடங்கியது.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அந்தத் துறையின் தலையாய முதல் பணியாக, தமிழைச் செம்மொழி என அறிவிக்கக் கோருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் வழங்கிய அறிவுரை களையொட்டி; 20.6.1996 அன்று தமிழ்ப்பண் பாட்டுத் துறை அமைச்சர் திரு.தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. வா.செ.குழந்தைசாமி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ப.க.பொன்னுசாமி, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் – முனைவர் ச.அகத்தியலிங்கம், முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் சி.பாலசுப்பிர மணியம்; திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச.முத்துக்குமரன், ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் ஜி.ஜான்சாமுவேல், திரு.மண வை முஸ்தபா தமிழ்வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில்; தமிழ்மொழியைச் செம்மொழியென அறிவிக்கப்படுவது தொடர்பாக, ஆசியவியல் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சி.ஜான் சாமுவேல் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கை பரிசீலிக்கப்பட்டு,ஒரு சிலமாற்றங் களுடன் ஏற்கப்பட்டு, மத்திய அரசுக்குப் பரிந் துரைக்கலாம் என முடிவெடுக்கப் பட்ட தோடு; தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுக்களின் பரிந்துரைகளை யும் பெறலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ் செம்மொழி என அறிவிக்கப்படுவதற்குரிய அடிப்படைத் தகுதிகள் அனைத்தையும் பெற்றிருக்கிறது என்பதற்கான வலுவான ஆதாரங்களைக் கொண்டுள்ள அறிக்கை என்பதாலும்; தமிழ் செம்மொழி என அறிவிக்கப் படுவதற்கு அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும், அரசளவிலும், கழக அரசால் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி என்பதாலும்; தமிழ் ஆர்வலர்களும், கழக உடன்பிறப்புகளும் அதனைப் படித்தறிந்து நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் தயாரிக் கப்பட்ட அந்த அறிக்கையை, தமிழாக்கம் செய்து, அதன் முக்கியப் பகுதிகளை அடுத்த கடிதத்தில் வழங்குகிறேன்.

அன்புள்ள,

**மு.க.**

## செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 4
## தொன்மைக்குத் தொன்மையாய் வாழும் தொல்பழங்கால மொழி!

**(28–12–2009)**

உடன்பிறப்பே,

நான்காவது முறையாக நான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு; கழக அரசின் சார்பில், தமிழ் செம்மொழியே என உரிய முறையில் நிலைநாட்டி, மத்திய அரசிடம் கோரிக்கை வைப்பதற்கென; ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் முனைவர். ஜான்சாமுவேல் அவர்களால் தயாரிக்கப்பட்ட; முனைவர். ச.அகத்தியலிங்கம், முனைவர். வா.செ.குழந்தைசாமி, திரு.மணவை முஸ்தபா, முனைவர் அவ்வை நடராஜன், முனைவர். பொற்கோ போன்ற வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவு அறிக்கையின் முக்கியப் பகுதிகள் பின்வருமாறு:–

**“உயர்தனிச் செம்மொழியாக ஒளிரும் தமிழ் இந்தியச் சூழலில் செம்மொழித் தமிழ் பெறும் சிறப்பிடம் :–**

உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழுக்கு ஈடில்லாத ஒரு தனித்தன்மையுண்டு. ஈராயிரம் ஆண்டுப் பழமைவாய்ந்த செவ்விய இலக்கியங்களின் களஞ்சியமாகவும், மூத்த திராவிட இலக்கிய அணிகலன்களின் கவச மாகவும் தமிழ்மொழி திகழ்கிறது. எண்ணற்ற கவிதைகள்–செய்யுள்கள்– பாடல்களின் கோவைகளைக் கொண்ட இம்மொழி கிறித்துவின் முதலாண்டுக்கு முன்னேயே நிலைபெற்றதாகும். தங்குதடையின்றிப் பொங்கும் வளமையுடனும், பொலிவார்ந்து ஓங்கிய வளர்ச்சியுடனும் நூற்றாண்டுகள் பல கடந்தாலும் இன்றும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் தமிழ் மொழி சிறந்து விளங்குகிறது.

பொங்கித்ததும்பும் நதியின் போக்கிற்கேற்பப் பல்வேறு இணைப்புகள், பகிர்வுகள் வாயிலாகத் திராவிட மொழிகளின் தொகுப்பில் உயரிய இடம் பெறும் மொழியாகத் தமிழ்மொழி மிளிர்கிறது. இந்தியாவின் வடமாநிலங்களில் வழங்கிய சமஸ்கிருத மொழிக்கு நிகராக, உயிரோட்டத் தோடு உலவி வரும் மொழியாக நிலைபெற்று, இந்தியப் பண்பாட்டு மாறுதல்களுக்கு இசைவாகப் பிறமொழிகளுடன் தக்க உறவினையும், அதே

சமயம் தன்னுடைய தனித்தன்மை வாய்ந்த இயல்புகளைத் தக்கவைத்துக் கொண்டும், ஆற்றல் குன்றாத நிலையில் தமிழ்மொழி திகழ்கிறது.

இந்திய ஐரோப்பிய மொழி வரிசையில், செல்தியம், செருமானியம், இலத்தீன் மற்றும் கிரேக்க, இரானிய மொழிக் குழுமத்தின் வேர்த் தொடர்புகளைத் தமிழ் மொழியிலும் கண்டு அறிஞர் கால்டுவெல் ஒப்பீடு செய்துள்ளார். அதேபோல, தாமஸ் பர்ரோ பின்லாந்திய மொழிக்கும், திராவிட மொழிகளுக்கும் நுண்ணிய தொடர் இணைப்புகளைக் கண்டார். அங்கேரிய மொழிக்கும் திராவிட மொழிக்கும் தொடர்புறவை ஜி.எஸ்.பாலிண்ட் ஆராய்ந்து கண்டார். ஹப்பர், சுசுமோ ஒநோ ஆகியோர் சப்பானிய, கொரிய ஒப்பாய்வுகளைத் தமிழ்மொழியோடு ஆராய்ந்து கண்டுள்ளனர்.

தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் ஆறு கோடித் தமிழரின் அன்றாட வாழ்வில், நடனமிடும் தமிழ்மொழி; இலங்கையிலும், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, மியான்மர் நாடுகளிலும் மோரீசு, டிரினிடாட், பிஜிதீவுகளிலும் வாழும் மக்களால் பேசவும், எழுதவும் படுகிறது. இலங்கையரசும், சிங்கப்பூர் அரசும், தமிழ்மொழியினை ஆட்சி மொழியாகவும் அறிவித்துள்ளன.

எகிப்திய, சுமேரிய, சிந்துவெளி பண்பாட்டுக்கு இணையாக கலையிலக்கிய பண்பாட்டுச் செல்வங்களைத் தாங்கி விளங்கும் தமிழ்மொழி, தொல் திராவிட மரபையும், தொல் தமிழிய வளர்ச்சியையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வாளர்கள் கணக்கிடுவதற்கு வழிவகுக்கிறது. இந்நிலையிலும், இவ்வளவு தொடர்பிருந்தும் இன்றுவரை தொன்மைக்குத் தொன்மையாய், இன்றும் வாழும் ஒரே இயல்பும் திறனும் கொண்டது தமிழ்மொழி ஒன்றேயாகும்.

தமிழ்மொழியையும், தமிழின் இலக்கியப் படைப்புகளில் பொதிந்துள்ள கோட்பாடு களையும், இலக்கண விதிகளையும் நுணுக்கமாக வரையறுக்கும் வகைப்பாடு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொடங்கியுள்ளது. இதனால் இலக்கியச் செய்யுள் படைப்புகள் செம்மையாக அமைவதற்குத் தொல்காப்பியம் வளமூட்டியுள்ளது. தொல்காப்பியத்தில் காணப்படும் விதிகள், நெறிமுறைகள், ஒலியியல், மொழியியல் பயன்பாடுகள், அயற்சொற்களைக் கையாள்வதற்கு உருவாக்கிய விதிப்பாடுகள் முதலியன தெளிவாக உள்ளன. இதனால் தமிழ்மொழி பயனுடைய மேம்பாட்டைப் பெறுதற்கு இடந்தருகிறது என்று குறிப்பிட்டுள்ளனர். பழமைவாய்ந்த, செப்பமுற வளர்ந்த தமிழ்மொழியை இப்போது செம்மொழி என்று நாம் குறிப்பிடும் சிந்தனைக்கு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இம்மண்ணில் வாழ்ந்த அறிஞர்கள் உரமூட்டினர்.

கிரேக்க மொழியுடன் தமிழ்மொழியாளரின் உறவு தொடங்குவதற்கு முன்னரே, தமிழ்மொழி செம்மொழித் தகுதியை அடைந்துவிட்டது என்று கில்பர்ட் சிலேட்டர் குறிப்பிடுகிறார். தமிழ்மொழி கிரேக்க மொழியை விடச் செறிவானதென்றும், இலத்தீன் மொழியைவிட மேன்மையானது என்றும், ஆங்கிலம் மற்றும் செருமன் மொழியைவிட ஆற்றல் வாய்ந்தது என்றும் டாக்டர் வின்சுலோ குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்சு இந்தியவியல் அறிஞர் பியரி மெய்லியின் கருத்துப்படி, செம்மொழித் தமிழின் சங்கப் பாடல்கள், கிரேக்க மொழியின் நுட்பமான கவிதைத் தொகுதிகளுக்கு அறைகூவலாக விளங்குகின்றன.

**தாமதமாக உணரப்பட்ட தமிழ் மேன்மை:–**

தொடக்க நிலைகளில் கூட, வால்டர் எலியட், எல்லீசு கோவர், வின்சுலோ, கால்டுவெல், போப், வின்சன் ஆகியோர் தாங்கள் வாழ்ந்த காலத்திலும் திராவிடத் தமிழ்ப் பண்பாட்டாய்வு பொதுவாக புறக்கணிக்கப்பட்டேயிருந்தது என்பது பற்றிய தங்கள் கருத்தைத் தெரிவித் துள்ளனர். ஆங்கிலேய அரசு தமிழ் இலக்கி யத்தை புறக்கணித்தது பற்றி டாக்டர். ஜி.யு.போப், 1910ஆம் ஆண்டிலேயே தெரிவித்தார். மிகத் தொன்மையான, வளம்மிக்க, பண்பட்ட தமிழ்மொழி எம்மொழிக்கும் சிறப்பில் குறைந்ததன்று என்றபோதிலும்; இங்கிலாந்துப் பேரரசின் ஆட்சியிலிருந்து தொலைவில் உள்ள ஒரு பகுதியில் வாழும் மக்களால் பேசப்படும் ஒரு மொழி என்றே, தமிழ் மொழியைப் பெரும்பான்மையான மக்கள் நினைக்கின்றனர். நம்முடைய இந்திய அரசோ, நம்முடைய பல்கலைக் கழகங்களோ தமிழ் இலக்கியத்தின் மாண்பை முழுமையாக அறியவில்லை. எனவே, தென்னிந்திய மொழிகள் குறித்து ஆய்வு செய்பவர்கள், ஆழ்கடலில் முத்துக்களை அலைந்து தேடுபவர்களைப் போன்ற அரிய உழைப்பாளர்களாக உள்ளனர்.

புவியியல் வகையில் பரந்து விரிந்த இந்திய நாட்டின் மொழி என்ற வகையிலும், திராவிட இனம் சார்ந்த, சமூக நலனில் அக்கறையுள்ள ஒரு மொழி என்ற வகையிலும், அமெரிக்காவிலும் தமிழைப் படிக்கத் தொடங்கினர். தமிழ்மொழி, பென்சில்வேனியா, சிகாகோ, கான்சாஸ் ஆகிய பல்கலைக் கழகங்களிலும், கோடைப் பள்ளிகளிலும் மொழியைப் பயிற்றுவிக்கும் திட்டங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

பன்னாட்டு அறிஞர்களும், நம்முடைய தமிழியல் ஆய்வாளர்களும், இந்திய பண்பாட்டுக் கூறுகளை முழுமையாகவும், முற்றிலுமாகவும் புரிந்துகொள்வதற்குத் தமிழாய்வு மிகவும் இன்றியமையாததென்பதை உணர்ந்துள்ளனர். இந்தியத் திருநாட்டின் பண்பாட்டுக் கலை வளத்தை, முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு வடமொழி ஆய்வு மட்டும் போதுமானதல்ல என்றும்; திராவிட மொழிகளில் மிகத் தொன்மையான தமிழ்மொழியின்

வளம்மிக்க கலைப் பண்பாட்டு இலக்கியக் கூறுகளை கருத்தில் கொண்டால்தான்; இந்தியப் பண்பு குறித்த எந்த ஒரு ஆய்வும் முழுமையாகும் என்றும் அறிஞர்கள் ஒருமித்த கருத்தை உறுதி செய்கின்றனர். இந்திய மொழிகள் குறித்து, புகழ்பெற்ற அறிஞரான டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி பின்வருமாறு தன் கருத்தைத் தெரிவித்தார். (வங்கநாட்டுப் பேராசிரியர் சுனித்குமார் சட்டர்ஜி தமிழார்வத்தால் தன் பெயரை 'நன்நெறி முருகன்' என மாற்றிக் கொண்டதும் நாம் நினைக்கத்தக்கது). 'தற்போதைய இந்தியப் பண்பாடு மற்றும் சமய தத்துவத்தைப் பொறுத்தவரையில் திராவிட மொழியே பாவு நூலாகவும், ஆரியமொழி ஊடிழையாகவும் உள்ளன. இந்தியப் பண்பாட்டுச் செல்வத்துக்கு திராவிடர்கள் ஆற்றிய பங்கு ஐம்பது விழுக்காட்டுக்குக் குறையாதது' என்றும் அவர் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்சங்க இலக்கியம்தான் செம்மையான, நவீனமான இந்திய இலக்கியமாகும். முந்தைய வடமொழி நூல்களைப் போன்று பழமையான தோடு இன்றைய நவீன படைப்புகளுக்கும் ஈடுகொடுத்து தொடர்ந்து வாழ்ந்து வருகிறது. அறிஞர் ஏ.கே.இராமானுசன் 'இலக்கிய இயற்கையடைவு' என்ற தன் நூலில் இந்தியாவின் இரண்டு செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மட்டுமே, சமகால இந்திய நிகழ் மொழியாகும் என்றும்; இது கடந்தகாலத் தொல் பழமையோடு தொடர்ந்து வழக்கு மொழியாக மக்களிடையே ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது என்றும் காட்டியுள்ளார். சங்க இலக்கியங்கள் புகழ்பெற்ற காலப்பழமை கனிந்த தமிழ்ப்பாடல்களாகச் செம்மையுடன் விளங்குவதற்கு, மூன்று காரணங்களை, டாக்டர் கமில் சுவலபில் தெரிவிக்கிறார். முதலாவதாக, நம்முடைய தேசிய இலக்கியங்களின் சில பகுதிகளை நாம் பாராட்டுவதைப் போன்று; புகழ்பெற்ற சங்கப் பாடல்களை, தமிழறிஞர்களும், வரலாற்று வல்லுநர்களும் திறனாய்வாளர்களும் செம்மையானது என்று பாராட்டுகின்றனர். இரண்டாவதாக, இது ஒரு முற்றாக 'நிறைவெய்திய' இலக்கியத் தொகுப்பாக இருந்து வந்துள்ளது. இது இன்றும் உயிர்ப்பான வாய்மொழி மரபில் துடிப்போடு வழங்கப்பெறுகிறது. காலத்திற்கேற்ப மாற்றம் பெறமுடியாத விழுமிய சொற்களைக் கொண்டதால் 'உறைந்த நிலை மாறாத கவிதை' வடிவில் உள்ளன. மேலும் இது செம்மையான மரபு வழியின் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. மூன்றாவதாக, ஒரு மொழிசார்ந்த யாப்பிலக்கணம் மற்றும் புலனெறி சார்ந்த முழுமைபெற்ற வரம்போடு உள்ளது. முழுமையான, நிறைவான, ஈடிணையற்ற பண்பாட்டின் இலக்கியத் தொடராகவும், பண்பாட்டின் முடிமணியாகவும் இவை உள்ளன. இவ்வகையில், செம்மையான வடிவமைப் புடையதாக ஒரு செவ்விய இலக்கியமாக உள்ளது. (கமில் சுவலபில், "முருகனின் புன்னகை" பக்கம் 50).

திராவிடக் குடும்ப மொழிகளில் தலையாய மொழி என்ற வகையில், இது தனியிடம் பெற்றுள்ளதால், பல நூற்றாண்டுகளைக் கடந்தும் இன்றும் என்றுமுள தென்தமிழாக நிலைத்து நின்று; வளர்ச்சியையும், மேன்மையையும் பெற்று அனைத்தையும் அரவணைத்து அனைவருடனும் ஒன்றிக் கலந்து வந்துள்ளது. ஏனைய திராவிட மொழிகளைப் போன்று, இந்திய ஐரோப்பிய மொழிகள் மற்றும் கீழை நாட்டு மொழிகளின் அம்சங்களுடன், தொடர்புற்றிருந்த ஒப்புமையையும் வெளிப்படுத்துகிறது. இருபத்தைந்து மொழிகளுக்கு மேற்பட்ட திராவிடக் குடும்ப மொழிகளில் இதுவே முதன்மையான மொழியாகும்.

தமிழ்மொழியிலுள்ள சொற்களின் வேர்களை, உலகின் அனைத்துச் செம்மொழி களிலும் காணலாம். இது, போர்த்திறம் கொண்ட புறப்பாடல்களையும், உயரிய காதல் கனிந்த அகப்பாடல்களையும் மற்றும் அறநூல்களையும் சிறந்த படைப்புகளாக (Masterpieces), இலக்கியத் தொகுப்பாகப் படைத்துள்ளது. சமயம் சாராத உலகளாவிய மனித நேயம் பற்றி இவ்விலக்கியங்கள் கூறுகின்றன. சமய உருக்கம் கொண்ட பக்தி சார்ந்த பாடல்களின் தொகுப்பும் இம்மொழியின் செல்வமாகும். இந்த நாட்டில் இன்றுள்ள அனைத்து மொழிகளிலும் நிலையான தமிழ் முத்திரையைப் பொறித்துள்ளது.

கடந்த ஐம்பதாண்டுகளாகவும் அல்லது அதற்கு மேலாகவும், அரப்பா – மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியைத் தொடர்ந்து சிந்துவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், ஒட்டுமொத்த இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ் அல்லது திராவிட மொழி பேசும் மக்களின் கணிசமான, குறிப்பிடத்தக்க பங்களிப்பு அனைவராலும் கவனிக்கத்தக்க அளவுக்கு உணரப்பட்டு வருகிறது. மொகஞ்சதாரோ என்ற இடத்தைக் கண்டுபிடித்த பேராசிரியர் ஆர்.டி.பானர்ஜி 'ஆரியர்கள் வருகை புரிந்த காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கும் முன்னரே அமைந்திருந்த, சிந்துவெளி நாகரிகமானது, ஆரிய நாகரிகத்திற்கும் முந்தைய அதிசய நாகரிகம் என்பதை நிலைநிறுத்தியுள்ளது என்றும்; அம்மக்களைத் திராவிடர்கள் அல்லது திராவிட இனத்தில் மூத்தவர்கள் என்று தென்னிந்தியாவில், திராவிட மொழிகளைப் பேச்சுவழக்காகக் கொண்டு வாழும் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகப் பின்னர் சுட்டிக்காட்டப் பட்டது' என்றும் எழுதியுள்ளார்.

தமிழர்கள், தம் இலக்கிய இலக்கணக் கோட்பாட்டினை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மிகவும் திறம்பட மேம்படுத்தி யுள்ளனர் என்பதும், இது உலகில் உள்ள எந்த வொரு செம்மொழிக்கும், எந்த வகையிலும் சளைத்தது அன்று என்பதும் ஐயத்திற்கிட மின்றி அறுதியிடப்பட்டுள்ளன. தமிழ்மொழி சில சொற்களை வடமொழியிலிருந்து பெற்றிருந்தாலும், அவையனைத்தும் தமிழ்ச்சொற்களாகவே கொள்ளப்பட்டதால் அல்லது தமிழாக்கப் படுவதால், தமிழ்மொழி யானது தன் தனித்தன்மையையும், அமைப் பொழுங்கையும் தக்கவைத்துக் கொண் டுள்ளது. சொல்லமைவு நுணுக்கத்தைப் பெருமளவில் வடஇந்திய மொழிகளுக்குத் தமிழ்மொழி வழங்கியுள்ளதை முனைவர். பர்ரோ, பட்டியலிட்டுள்ளார்.

இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ்மொழி மிகப்பெரிய அளவில், பங்களிப்புச் செய்தபொழுதும், உரிய தகுதியினைப் பெறத்தாமதமாகிவிட்டது. செனகலிலுள்ள டாக்கர் பல்கலைக்கழகத்தில், செம்மொழித் துறையில், தமிழ்மொழி, அரேபியமொழி, பாரசீக மொழி, வடமொழி ஆகியவை செம்மொழிகளாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நம்முடைய பல்கலைக் கழகங்களில் நீண்டகாலத்திற்கு முன்னரே தமிழ்மொழி, இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, அரேபிய மொழி, பாரசீகமொழி, வடமொழி ஆகிய மூன்று மொழிகளே செம்மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், தமிழறிஞர் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி என்று குறித்துக் காட்டி தமிழுக்குச் செம்மொழி மகுடம் சூட்டவேண்டும் என்று விழைந்தார். இந்த வேண்டுதல் அறிஞர்கள் பலரின் உள்ளங்களில் எழுச்சியூட்டியது.

மரபுரிமைக் களஞ்சியமாக இலக்கிய வரையறையைக் கொண்டுள்ள மொழி சார்ந்த சமுதாயம் ஒவ்வொன்றும், சமூக மற்றும் இலக்கியம் சார்ந்த சூழலின் குறிப்பிட்ட காலத்தினைச் செம்மொழிக் காலமாகக் குறிப்பிடுகிறது. அறிஞர் சிலரின் கூற்றுப்படி, கி.மு.500லிருந்து 300 வரைப்பட்ட காலமானது, கிரேக்கர்களின் செம்மொழிக் காலம் ஆகும். கி.மு.500 முதல் கி.பி.1110 என்ற வரையறையில் வடமொழியின் செம்மொழிக் காலமெனக் கருதப்படுகிறது.

சங்க காலம் முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டைய எல்லையுட்படும் காலத்தைச் செம்மொழிக் காலமாகக் குறிப்பிடலாம். ஏனெனில், இக்காலத்தில் தான் ஈடிணையற்ற இலக்கியமும், மொழிசார்ந்த உயர்ந்த சிந்தனைகளும் மலர்ந்தன. இத்தகைய பங்களிப்புகள், திராவிடத் தொன்மையினையும் விழுமிய செழுமையினையும் உருவாக்கின. திராவிடர்களின் சிறந்த பண்பாட்டுச் சாதனைகளைக் கணக்கில் கருதத் தவறினால், இந்தியப் பண்பாட்டு மரபு குறித்த எந்தவொரு ஆய்வும் முழுமையற்றதாக குறையளவிலேயே இருக்கும் என்று, புகழ் வாய்ந்த ஆய்வாளர்கள் பெரும்பாலானோர் வலியுறுத்துகின்றனர்.

பன்னாட்டு அறிஞர்கள், உலகின் செம்மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழியை இப்போது ஏற்றுள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், வடமொழி, அராபிய மொழி மற்றும் பாரசீக மொழியுடன் பண்டைய தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவிப்பதற்கு முன்வந்துள்ளன. வடமொழியறிஞர் சி.ஆர்.சங்கரன், ஈராயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தொல்காப்பிய நூலில் உள்ள ஒலியியல் குறித்த பிரிவை ஆராய்ந்து தாம் கண்ட முடிவைப் பின்வருமாறு எழுதுகிறார். மொழியின் உள்ளார்ந்த ஒலி குறித்த ஆய்வுமுறைக்குச் சிறப்பளிப்பதும் ஒலியின் வடிவம், வகைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றை உறுதிப்படுத்தும் முயற்சி, சொற்களுக்குப் பொருள்கள் காண் பதில் சிறப்பான இடத்தைக் கொண்டிருக்க வேண்டும். இது பாணினியின் அஸ்டதி யாதியில் கூடக் காணப்படவில்லை என்று மதிப்பிட்டுள்ளார். மொழிகள் குறித்த வரலாற்றுக்குப் பண்டைய தமிழ் இலக்கண மரபார்ந்த நெறி மிகவும் போற்றத்தக்க பங்களிப்பாகக் குறிப்பிடலாம்.

## செம்மொழியாகத் தமிழ்:–

இந்தியாவில் உள்ள மொழிகளில் தனித்தன்மை பூண்ட வீறுகொண்டதாகத் தமிழ் விளங்குகிறது. செழுமையான, அகப்புற இலக்கியக் கோட்பாடுகளையும், யாப்பிலக் கணம், செய்யுளியல், இலக்கண வரம்புகளையும் உள்ளடக்கியதாகத் தமிழ் இலங்குகிறது. வடமொழிச் செம்மொழியுடன் சேர்ந்து ஒரே நேரத்தில் இரண்டு மொழிகளாக அமைந்திருந்தாலும் வடமொழியின் செல்வாக்கினால் எவ்விதச் சீர்குலைவுமின்றி, வழக்கொழியாமல் தமிழ் தனித்து நின்று ஈடில்லாத மொழியாகத் தன்னைக் காத்துள்ளது.

## தொன்மைத் தமிழ் செம்மொழியாக மலர்தல்:–

உலகளாவிய மரபிலக்கிய நற்கூறுகள், தொன்மை, வளமை, எளிமை முதலிய சிறப்பியல்புகளைப் பெற்றிருந்தபோதிலும் கூட, இந்நாள்வரையில் தமிழ்மொழி வட்டார மொழியாகவே கருதப்பட்டு, புதிய இந்திய மொழிகளின் வரிசையில்தான் வகைப்படுத்தப்பட்டது. இந்திய மொழிகளில், வடமொழி தவிர, தமிழ்மொழி போன்ற தொல்மரபு கொண்ட மொழி வேறெதுவும் இல்லை. ஒருமைவாய்ந்த நம் பண்பாட்டின் உயர்ந்த மரபு மாட்சியைப் பேணுவதும், காப்பதும் இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமை என்பதை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வரையறை செய்துள்ளது. இந்நிலையில் தமிழ்மொழியைச் செம்மொழியாக ஏற்பது நமது கடமையாகும்.''

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று, தக்க வரலாற்றுப் பின்னணியோடும், சான்றுகளோடும், கழக அரசின் சார்பில் மத்திய அரசின் கல்வித் துறைக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை; மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் ஆணையத்திற்குப் பரிசீலித்து கருத்துரைக்குமாறு அனுப்பப்பட்டது.

அன்புள்ள,

**மு.க.**

# செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 5

## கலிபோர்னியா பேராசிரியர் வழங்கிய கருத்துக்கோவை!

**(29–12–2009)**

உடன்பிறப்பே,

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளோடு, கழக அரசால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை; மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் ஆணையத்திற்கு அனுப்பப் பட்டது. அந்த அமைப்பு, கழக அரசின் அறிக்கை யினை அனைத்துக் கோணங்களிலும் அணுகி, ஆராய்ந்து; இறுதியில், "செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் தமிழுக்கு இருப்பதால், நடுவண் அரசு தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம்'' என மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது.

இதற்கிடையே, "இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியம் மிக்க நம் தமிழ்மொழியைச் செவ்வியல் மொழி வரிசையில் சேர்த்து, அதன் வளர்ச்சிக்கு நிதியுதவி அளிக்க வேண்டு மென மத்திய அரசை இந்தப் பேரவை கேட்டுக் கொள் கிறது'' என **30.5.1996** அன்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும்;

"பல்லாயிரம் ஆண்டுக்கால பழைமையும், சீரிய இலக்கியச் செழுமையும், இலக்கண முழுமையும் வாய்ந்த மொழியாகிய தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது'' என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும்;

"தமிழ் மொழியின் தொன்மை, செழுமை வாய்ந்த இலக்கியங்கள் ஆகியவற்றின் காரண மாகவும்; பல்வேறு மொழிகளுக்கும், இலக்கியப் படைப்புகளுக்கும் மூலாதாரமாகத் தமிழ் மொழி விளங்குவதாலும்; தமிழ் மொழியைச் செம்மொழியெனப் பிரகடனம் செய்து, தொடர்ந்து தமிழ் வளர்ந்தோங்கிடத் தேவையான நிதியுதவியினை வழங்கிட வேண்டு மென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்படுகிறது'' என்று **19.7.1996** அன்று சென்னைப் பல்கலைக் கழகமும்;

"தமிழ், தொன்மையான மொழியாகவும், வளம் செறிந்த இலக்கியப் பாரம்பரியம் கொண்ட தாகவும் திகழ்வதால்; தமிழ்மொழி யைச் செம்மொழி என அங்கீகாரம் செய்து தமிழ்மொழி வளர்வதற்கு நிதி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அளித்திட வேண்டு மென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்படுகிறது'' என்று **20.8.1996** அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகமும் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் அனுப்பி வைத்தன. இதுபோன்ற தீர்மானங்கள், தமிழகத் திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களாலும் நிறைவேற்றி, அனுப்பி வைக்கப்பட்டன.

**23.8.1996** அன்று தமிழகச் சட்டப் பேரவையில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ்.ராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, "இந்தியா முழுவதும் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் சமஸ்கிருதம், அரேபிய மொழி வரிசையில், தமிழ் மொழிக்கும் அந்தஸ்து வழங்க வேண்டு மென்று வற்புறுத்திப் பிரதமருக்கு முதலமைச்சர் கலைஞர் கடிதம் எழுதியுள்ளார்'' என்று அமைச்சர் தமிழ்க்குடி மகன் பதில் அளித்தார்.

"அரிய இயல்புகள் அனைத்தையும் கொண்டிருந்தாலும், தமிழ் இன்னமும் இந்தியத் திரு நாட்டின் செம்மொழியென அங்கீகரிக்கப்பட வில்லை. ஆனால், சமஸ்கிருதம், பாரசீகம், அரேபியம் ஆகிய மொழிகளுக்கு அந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழை, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையும், பல்கலைக்கழக மானியக் குழுவும் செம்மொழியென அங்கீகாரம் செய்வதோடு, மேலும் தாமதமின்றி உரிய நிதியுதவியும் அளித்திட வேண்டும்'' என்று **21.8.1996** அன்று; தமிழக முதலமைச்சர் என்ற முறையில் நான், பிரதமர் தேவகவுடா அவர்களுக்குக் கடிதம் அனுப்பினேன். அந்தக் கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு **29.8.1996** அன்று பிரதமர் தேவகவுடா அவர்களிடமிருந்து, ஒப்புதலும் வந்தது.

முந்தைய பிரதமர்கள் திரு.தேவகவுடா, திரு.ஐ.கே.குஜ்ரால் மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர்களுக்கு ஏற்கனவே நான் அனுப்பியிருந்த கடிதங்களைச் சுட்டிக்காட்டி; **24.10.1998** அன்று பிரதமர் அடல் பிகாரி வாஜ்பய் அவர்களுக்கு, "சமஸ் கிருதம், பாரசீகம், அரேபியம் போன்று தமிழைச் செம்மொழியென அறிவித்திட வேண்டு மென்ற, உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் நீண்ட காலக் கோரிக்கையினை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நியாயமான அந்தக் கோரிக்கை நிறை வேற்றப் பட வேண்டும்'' என்று நீண்ட கடிதம் எழுதி னேன். கடிதத்துடன் "உயர் தனிச் செம்மொழி யாக ஒளிரும் தமிழ்'' எனும்

தலைப்பிடப்பட்ட வல்லுநர் குழு அறிக்கையின் நகலையும், தமிழகப் பல்கலைக் கழகங்களில் நிறைவேற்றிய தீர்மானங்களின் நகல் களையும் மீண்டும் அனுப்பி வைத்தேன். தொடர்ந்து பிரதமருக்கும், மத்திய அரசுக்கும், நினைவூட்டுகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

தலைநகர்த் தமிழ்ச் சங்கம், டெல்லி தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகள் சார்பில், தமிழை மத்திய ஆட்சிமொழியாகவும், செவ்வியல் மொழியாகவும் ஏற்றிடக் கோரி; டெல்லியில் 2000, ஏப்ரல் திங்கள் 29, 30 ஆகிய நாட்களில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அம்மாநாட்டை, செவ்வியல் மொழிச் செயலாக்கக் குழுத் தலைவர் சாலினி இளந்திரை யன் முன்னின்று நடத்தினார். கல்வியாளர்களும், அரசியல் தலைவர்களும், தமிழறிஞர் களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். தமிழக அரசின் சார்பில், அந்த மாநாட்டில் கலந்து கொள்ள தமிழ்வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் தமிழ்க் குடிமகன் அனுப்பி வைக்கப்பட்டார். மாநாட்டுக்கு நான் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "இம்மாநாடு நடத்துவதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் மொழியை மத்தியில் ஆட்சிமொழியாக்கிட வேண்டுமென, அண்ணா காலத்திலிருந்து மைய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தமிழக அரசின் சார்பில், மைய அரசுக்குக் கோரிக் கைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், புதுடெல்லியில் மாநாடு நடத்தி, அதன் மூலம் இக்கோரிக்கைகளை வலியுறுத் திடும் முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கதாகும். இம்மாநாடு மையஅரசின் எண்ணங்களை, அறவழியில் ஈர்த்திடும் வண்ணம் எழுச்சியுடன் நிகழ்ந்திட உளமார வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

2000ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், டெல்லியில் நடைபெற்ற அந்த மாநாடு தொடர்பான சோக நிகழ்வு ஒன்று இன்னமும் என் இதயத்தில் உறைந்து போய் இருக்கிறது. அந்த மாநாட்டின் வெற்றிக்காக, இரவுபகல் பாராது உழைத்த சாலினி இளந்திரையன், டெல்லிக்கு வந்த தமிழ்ச் சார்பாளர்களை வரவேற்கச் சென்றபோது, சாலை விபத்து ஒன்றில் கார் மோதி, உயிர் துறந்தார். கட்சி வேறுபாடின்றி அனைவரையும் அழைத்து, அந்த மாநாட்டி னை நடத்த முன்னின்று உழைத்த சாலினி இளந்திரையன் மரணம் அடைந்தது மாபெரும் சோகமாகும். பேராசிரியர் சாலினி இளந்திரையன் உடல், டெல்லி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டு முடிந்தபின்னர்; அந்த மாநாடு அவரது நினைவாகவே நடத்தப்பட்டது!

பேராசிரியர் இ.மறைமலை அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 2000, ஏப்ரல் திங்களில் அமெரிக்கத் தமிழறிஞர் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள், தமிழ்மொழியைச் செம்மொழியெனக் கூறும் நிலைப்பாடு பற்றி வழங்கிய அறிக்கை, உலகெங்கிலும் உள்ள கல்வியாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. ஆங்கிலத்தில் வரையப்பட்ட கருத்தாழம் மிக்க அந்த அறிக்கை தமிழ்ச் செம்மொழி வரலாற்றில், ஆணி முத்தை ஒத்த அத்தியாயமாகும்.

அமெரிக்காவிலுள்ள பர்க்லி நகரில் அமைந்துள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத் தில், 1975ஆம்ஆண்டுமுதல்தமிழ்ப்பேராசிரியராகப்பணிபுரிந்து வருபவர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள். அவர் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் வடமொழி இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர். மாடிசன் நகரில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகவே பணியாற்றியவர். தமிழ் மற்றும் வடமொழி ஆகிய இருமொழி இலக்கி யங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்தவர். அவற்றுடன், ஐரோப்பியச் செம் மொழிகளான இலத்தீனம், கிரேக்கம் ஆகிய இருமொழி இலக்கியங்களையும் விரிவாகக் கற்றுத் தேர்ந்தவர். இம்மொழிகள் அனைத்திலும் உள்ள நூல்களை மூலமொழியிலேயே கற்றுண ர்ந்தவர். தற்கால ஐரோப்பிய மொழிகளின் இலக்கியங்களையும், மொழி ஒப்பியலையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். இரஷ்யன், ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளின் இலக்கியங் களை விரிவாகக் கற்றவர். அவற்றைப் போலவே, தற்கால இந்திய மொழிகளில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் இலக்கியங்களை மூலமொழியிலும், மற்ற எல்லா மொழி களிலும் உள்ள இலக்கியங்களை மொழியாக்கம் வாயிலாகவும் விரிவாகக் கற்றவர். இந்தி மொழியில் மகாதேவி வர்மா, துளசி, கபீர் ஆகிய பெருமக்களின் இலக்கியப் படைப்புகளையும் விரிவாகப் படித்தறிந்தவர்.

இத்தனை சான்றாண்மையினையும், மொழிப் புலமையினையும், இலக்கியத் திறனறி வினையும் ஒருங்கே பெற்ற பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள், தமிழ் மொழியைச் செம்மொழி எனக்கூறும் நிலைப்பாடு பற்றியும், அதன் தகுதிநிலை பற்றியும் வழங்கிய அறிக்கையில் பொறிக்கப்பட்டுள்ள பொன்னான கருத்துரைகளைக் கழக உடன் பிறப்பு கள் படித்து அறிந்து கொள்ளவும், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் வேண்டுமென் பதற்காக; தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட அந்த அறிக்கையின் முக்கியமான பகுதிகளைப் பின்வருமாறு தருகிறேன். இந்தப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்கள் நமது கோவை மாநாட்டுக்கும் வருகை தர இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இதோ – அவரது அந்த அறிக்கை :–**

“தமிழ்மொழி உலகின் மிகவுயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும், மரபுச் செல்வங் களையும் பெற்றுத் திகழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்பதனை நான் எவ்விதத் தயக்கமும் இன்றித் தெளிவாக அறுதியிட்டுக் கூறுவேன். இவ்வாறு நான் கூற முனைவதற்குக் காரணங்கள் பலவுள்ளன. அவற்றை இனி ஒவ்வொன்றாக எடுத்து விளக்க முற்படுகின்றேன்.

முதலாவதாக, தமிழ்மொழி மிகுந்த பழைமைச் சிறப்பு வாய்ந்த மொழி. ஏனைய தற்கால இந்திய மொழிகளின் இலக்கியங்களுக்கெல்லாம் காலத்தால் மிகவும் முற்பட்ட, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் முற்பட்ட பேரிலக்கியங்களைக் கொண்டது தமிழ்மொழி. தமிழில் மிகப்பழம் பெரும்நூல் தொல்காப்பியம். தொன்மைக்காலக் கல் வெட்டுகளிலிருந்து, இந்நூலின் பகுதிகள் காலத்தால் மிகமுற்பட்டவை எனவும், ஏறத்தாழ கி.மு.200க்கு முன்பே இந்நூல் எழுந்துள்ளது எனவும் தெரிகின்றது. பழந்தமிழரின் பேரிலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகும்; அவை பத்துப்பாட்டும், எட்டுத் தொகை நூல்களும் பிறவும் ஆகும். அவை, ஏறத்தாழ கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளில் எழுந்தவை எனக் கொள்ளலாம். அவை, வடமொழியில் காளிதாசரின் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி விட்டன. மதச்சார்பற்ற இந்தியாவில், முதன் முதலில் எழுந்த மதச் சார்பற்ற பெருங்கவிதை இலக்கியத் தொகுப்பு, சங்க இலக்கியங்கள் என்றால் அது மிகையாகாது.

இரண்டாவதாக, இந்தியாவில் தோன்றிய, இந்திய மண்ணிற்கு மட்டுமே தனிச் சிறப்பான இலக்கிய மரபினைக் கொண்டது தமிழ்; இந்த இலக்கிய மரபு வடமொழியிலிருந்து பெறப் பட்டது அன்று என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையைச் சொல்வதானால், தென்னாட்டில் சமற்கிருத மொழியின் செல்வாக்கு வலிமை பெறுவதற்கு முன்னரே, தமிழ் இலக்கியங் கள் தோன்றிவிட்டன. அதனால்தான், தமிழ் இலக்கியங்கள் யாவும், வடமொழியில் அல்லது வேறு இந்திய மொழிகளில் உள்ள எந்த இலக்கியத்தையும் போல இல்லாமல், தன்மை யால், இயல்பாய் முற்றிலும் மாறுபட்டுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.

சிறந்த இலக்கியக் கொள்கை, விழுமிய இலக்கண மரபுகள், உயர்ந்த முருகியற் செழுமை, இவை அனைத்திற்கும் மேலாக, தனித்து விளங்கும் தனக்கேயுரிய மிகப் பெரிய இலக்கியச் செல்வம் ஆகியவற்றைக் கொண்டிலங்குவது தமிழ்மொழியாகும். வடமொழியிலோ, வேறு எந்த இந்திய மொழியிலோ காணப்படாத, அவற்றிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டு விளங்குகின்ற, இந்தியப் பெருநாட்டினுக்கு உரித்தான (இந்திய மக்களிடம் காணப்படுகின்ற) கலைநயம் தோய்ந்த ஒருவகை நுட்ப உணர்வைத் **(Sensibility)** தமிழ் இலக்கியங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. வளம்மிக்க விரிந்து பரந்த அறிவின் மாட்சியும், மரபும் அவற்றின்கண் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன.

மூன்றாவதாக, தமிழ் மொழியின் செவ்வியல் இலக்கியங்களின் தன்மை, அவற்றைச் சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளில் எழுந்து விளங்கும் பேரிலக்கியங்களுக்கு நிகராக (அவற்றுடன் ஒரணியில் வைத்து) எண்ணத் தக்க நிலையை, தகுதியை அவற்றுக்கு வழங்குகிறது. தமிழ் இலக்கியங்களின் சொற் செறிவும், பொருளாழமும், அவற்றின் நுட்பமும் திண்மையும் **(Subtlety)** அகலமும் விரிவும் **(Profundity)** அவை நுவலும் பல்வேறு பாடுபொருள்களும், களமும் **(Varied Scope)** நவீன காலத்திற்கு முந்தைய (இந்திய இலக்கியங்களில், கால அளவில் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமே, சமூகத்தில், தாழ்வுற்ற, பிற்பட்ட, கடைப்பட்ட மக்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன). அவற்றின், மனித குலம் அனைத்தை யும் வயப்படுத்தும் உலகளாவிய கோட்பாடும் **(Universality)**, தமிழ் மொழியை உலகம் தழுவிய மிகப்பெரிய செவ்வியல் மொழி, மரபுகள், இலக்கியங் களுடன் ஒருங்கே வைத்து, அவற்றுள் ஒன்று எனப்போற்றும் தகுதி நிலையை அளிக்கின்றன. வான்புகழ் வள்ளுவர் வழங்கிய திருக்குறள், ஒழுக்கநெறிகளைக் கற்பிக்கும் உலகின் தலைசிறந்த அறநூல் என்பதனை அனைவரும் அறிவோம். எனினும், இந்த நூல், தமிழில் செவ்வியல் மொழி, இலக்கிய மரபுகளைத் தம்முள் கொண்டு விளங்குகிற, ஒன்றிலிருந்து ஒன்று பெரிதும் வேறுபட்ட பாடுபொருள்களை உடைய, பல்வேறு பெருநூல்களின்தொகுப்பில் (பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள்) ஒன்றாகும். இந்தப் பேரிலக்கியத் தொகை நூல்களின் வாயிலாக, மனிதகுல வாழ்வியலின் ஒவ்வொரு பரிமாணமும், ஒவ்வொரு தோற்றமும் மிக நுட்பமாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன; இந்த இலக்கியப் படைப்புகளின் ஆய்வுக்குட்படாத, இவற்றின் ஒளிபடாத வாழ்வியல் துறை களே இல்லை எனலாம்.

இறுதியாக, தமிழ்மொழி நவீனகால இந்தியப் பண்பாடு, மரபுகளின் முதன்மையான, தனித்துவம் உடைய வாயில்களில் ஒன்றாக விளங்குகிறது. சமற்கிருதக் கவிதை மரபின் மீது தென்னக மரபுகளின் செல்வாக்கைப் பற்றி நான் மிக விரிவாக எழுதியுள்ளேன். இதற்கு நிகராக இன்னொரு முக்கியச் செய்தியுமுண்டு; தமிழில் சங்கத்

தொகை நூல்களின் காலத்தில் தோன்றிப் பரவத் தொடங்கிய இந்து சமயச் சார்புடைய, புனிதமான (வழிபாட்டுப்) பேரிலக் கியங்கள் நவீனகால (இந்திய) இந்து சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளன. அந்தப் பக்தி இலக்கியச் சிந்தனைகளும், கருத்து களும் (தெலுங்கு, கன்னடம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் எழுந்த) பாகவத புராணத்திலும், ஏனைய நூல்களிலும் எடுத்தாளப்பெற்று, அவற்றின் வழியாக, இந்தியத் திருநாடு முழுவதும் பரவின. 'வேதங்களுக்கு ஒப்பானவை' என்று போற்றப் படும் புனிதமான சமய (பக்தி) இலக்கியங்கள் தமிழிலுள்ளன; இவை தமிழுக்கே உரியன. இவை தென்னிந்திய வைணவத் திருக் கோவில்களில் (திருப்பதி முதலானவை) வேத மந்திரங்களுடன் சேர்த்து ஓதப் பெறுகின்றன. தற்கால இந்தோ–ஆரிய மொழிகளுக்கு எவ்வாறு வடமொழி (சமற்கிருதம்) மூலமொழி யாக விளங்குகிறதோ, அதேபோன்று தற்காலத் தமிழ், மலையாள மொழி இலக்கியங்களுக்குச், செவ்வியல் மொழியாகத் திகழ்ந்த தொன்மைத் தமிழே மூலமொழியாக விளங்குகிறது. இந்தோ–ஐரோப்பிய மொழிகளில், சமற்கிருதம் மிகமிகப் பழையது; தொன்மையானது; கால வகையில் சிறிதளவும் மாறாது, மாற்றத்திற்கு இடங்கொடாது, இன்றளவும் பழைமைக்குப் பழைமையாக இருந்து வருகிறது. அதே போன்று, திராவிட மொழிகளில் தமிழ் முன்னைப் பழைமைக்கும் பழைமையாகவும் மிகவும் தொன்மையானதாகவும் இருந்து வருகிறது. எனினும், திராவிட மொழிகளின் இயல்பையும், வளர்ச்சியையும் புரிந்துகொள்ள மொழியியலாளர்கள் நாடவேண்டியதும், அவர்களுடைய ஆய்வுகளுக்கு உதவும் உரைகல் லாகத் (கட்டளைக்கல்) திகழ்ந்து வருவதும் தமிழேயாகும்.

ஒரு மொழி 'செவ்வியல் மரபு' உடையது என்று அழைக்கப்படுவதற்குத் தகுதிபெற வேண்டுமெனில், அது பல்வேறு அடிப்படை விதிமுறைகளுக்குப் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்; அவையாவன: அது தொன்மை மிக்கதாக, பழைமைச் சிறப்பு வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்; அது இன்னொரு மொழி மரபில் கிளைத்து வளர்ந் ததாக இல்லாமல், தனக்கேயுரிய தனித்துவ முடைய மொழி மரபினைப் பெற்றதாகவும், அம்மொழி மரபு பெரிதும் தானே படைத்த இலக்கியச் செழுமையில் வளர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்; இதற்கெல்லாம் மேலாக அம்மொழி விரிந்து, பரந்து வளம்செறிந்த தொன்மை வாய்ந்த பேரிலக்கியச் செல்வத் தைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். இந்தியாவின் ஏனைய தற்கால மொழிகளைப் போலல்லாமல், தமிழ் இம்மூன்று அடிப்படைத் தேவைகளையும் ஒருங்கே நிறைவு செய்கின்றது.

'தமிழ் ஒரு செவ்வியல் மொழி' என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காக நான் இதைப் போன்று ஒரு கட்டுரை எழுதவேண்டியுள்ளது என்ற எண்ணமே எனக்கு இயல்புக்கு மாறானதாகத் தோன்றுகிறது. இச்செயல் எப்படியிருக்கிறது என்றால், 'இந்தியா ஒரு மிகப்பெரிய நாடு, இந்துசமயம் உலகின் மிகப்பெரிய சமயங்களில் ஒன்று' என்னும் கூற்றை நிலைநாட்ட முற்படுவது போன்றுள்ளது. 'தமிழ் செவ்வியல் மொழி' என்னும் தகுதி நிலையை மறுக்க முனைவது, இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கும், வளமைக்கும் இன்றியமையாத மையக்கூறாக விளங்கும் – உயிராதாரமாக விளங்கும் – உறுப்பு ஒன்று 'அதற்கு இருக்கக்கூடாது' என்று மறுக்க முனைவதற்கு ஒப்பானதாகும்.''

பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்களது இந்த அறிக்கையில் உள்ள கருத்துக்கள் இந்தியத் திருநாட்டின் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தோடு; தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் எழுச்சியையும் ஏற்படுத்தியது.

அன்புள்ள,

**மு.க.**

## செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 6

### செம்மொழி சிறந்திட; தொடர் செயல்பாடுகள்!

**(30–12–2009 )**

உடன்பிறப்பே,

தமிழைச் செம்மொழியாக அறிவித்திடத் தேவைப்படும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கழக அரசின் சார்பில், தொடர்ந்து மத்திய அரசுக்கு நினை வூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 13.6.2000 அன்று பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு நான் நினைவூட்டுக் கடிதம் அனுப்பினேன். 18.12.2000 அன்று முதலமைச்சர் என்ற முறையில் பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு நான் அனுப்பிய கடிதத்தில், ''ஏற்கனவே நான் அனுப்பிய கடிதங்களின்பால் தங்களது அன்பான கவனத்தை ஈர்த்திட விரும்புகிறேன். தொன்மையும், வளமும்

நிறைந்த தமிழ்மொழி யைச் செம்மொழி எனப் பிரகடனம் செய்திட வேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கை, மத்திய அரசிடம் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வருகிறது. உண்மையும், நேர்மையும் வாய்ந்த மாநில அரசின் இக்கோரிக்கையை பரிசீலனை செய்து மத்திய அரசு உரிய ஆணைகளைப் பிறப்பித்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் '' என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஆட்சி அளவில் என்று மட்டுமல்லாமல், கட்சிரீதியாகவும் –அரசியல்ரீதியாகவும், தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டியது அவசர அவசியம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது. அதன் எதிரொலியாகத்தான் – அனைத்து மாநிலங்களின் ஆட்சிமொழி களும், மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்கப்பட வேண்டுமென்றும்; அப்படி அனைத்து மாநில மொழிகளையும், ஆட்சி மொழிகளாக ஆக்குவது உடனடியாக இயலாது என்ற நிலை ஏற்படுமாயின்; முதல்கட்டமாக, திராவிட மொழிக் குடும்பத்தில் ஒன்றான, இலக்கியப் பண்பாட்டு வளம் நிறைந்த மொழியான தமிழ்மொழியை மத்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக ஆக்கவேண்டுமென்று – தொடர்ந்து தனது தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிட்டுச் சொல்லிவந்த திராவிட முன்னேற் றக் கழகம்; 2001 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில், முதல்முறையாக, "தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவித்திட வேண்டு மென்று தி.மு.க. வலியுறுத்தும்'' என்ற வாக்குறுதியை இடம்பெறச் செய்தது. தேர்தல் வாக்குறுதியுடன் நில்லாமல்; கழகம், அதை வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான செயல் திட்டங்களை வகுத்து, களத்தில் இறங்கியது.

2002ஆம் ஆண்டு, மே திங்கள் 4 மற்றும் 5ஆம் நாட்களில் தலைநகர்த் தமிழ்ச் சங்கமும், பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும் இணைந்து; தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ச் செவ்வியல் மொழி, திருக்குறள் தேசிய நூல் எனும் முப்பெரும் முழக்கத்துடன் மாநாடு நடத்தின. அந்த மாநாட்டில், "தமிழ் மொழியானது காலத்தொன்மை– இலக்கிய, இலக்கண வளமை – வாழும் இளமை, தாய்மை ஆகியவற்றின் காரணமாக இன்னபிற மொழிகளுள் முதலிடம் பெறுகிறது. தமிழ்மொழியைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கவேண்டுமெனத் தொடர்ந்து, பல்லாண்டுகளாக வலியுறுத்தி வரும் ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வினை அறிந்தும், மைய அரசு மேலும் காலந்தாழ்த்தி வரும் நிலை வருந்தத்தக்கது. இனியும் காலங்கடத்தாமல், உடனே தமிழ் மொழியைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென இம்மாநாடு மைய அரசை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2003, ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள், தமிழ் மொழி அகாதெமியின் சார்பில் சென்னையில் பத்தாவது தேசிய மொழிகளின் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில், "இலக்கியக் கடல் விருது'' எனக்கு வழங்கப்பட்டது. அந்த விருதினைப் பெற்றுக்கொண்டு, தமிழ் செம்மொழி என்பதன் தொடர்பாக நான் ஆற்றிய உரை, உடன்பிறப்பே, நீ நினைவு கூர்ந்திட வேண்டிய கருத்துக்கள் நிறைந்தது என்பதால், அதன் முக்கியமான பகுதிகளைப் பின்வருமாறு வழங்குகிறேன்:

"எல்லோராலும் இங்கே பேசப்பட்டது, தமிழ் செம்மொழியாக ஆக்கப்படவேண்டும் என்ப தாகும். ஆக்கப்படவேண்டும் என்பதைவிட, அழைக்கப்படவேண்டும் என்பதுதான் பொருத்தம். ஏனென்றால், ஏற்கனவே தமிழ் செம்மொழிதான். அதில் யாருக்கும் இருவேறு கருத்து கிடையாது. ஆனால், அது செம்மொழி என்று அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைக்கு நாம் எடுத்து வைத்திருக்கின்ற கோரிக்கை. தமிழ் மொழியைச் செம்மொழி என்று அழைக்கப்படக்கூடிய தகுதி இருக்கிறதா என்று பார்த்தால், ஒரு மொழி செம்மொழி என்று அழைக்கப்பட என்னென்ன தகுதிகள் வேண்டுமென்றால், பதினோரு தகுதிப்பாடு களை மொழியியல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள் ளார்கள். அந்தப் பதினோரு தகுதிப்பாடுகளும் முற்றிலும் பொருந்தக்கூடிய, உலகத்தின் ஒரேமொழியாகத் தமிழ் திகழ்கிறது.

முக்கியமான உலகமொழிகளின் மொத்த எண்ணிக்கை 600. அதிலே, இலக்கிய, இலக்கணம் உடைய மொழிகள் 300. இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் 6. அவை, தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரீக் ஆகியன. அதிலே, இலத்தீனும், ஹீப்ரூவும், ஏறத்தாழ இறந்த மொழிகள் என்று கருதப்படக்கூடியவை. ஆனால், இஸ்ரேல் அரசால், ஹீப்ரூவுக்கு உயிரூட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, ஓரளவிற்கு அதிலே வெற்றியும் பெற்று வருகிறது.

இறப்பின் எல்லை வரை சென்றுவிட்ட கிரேக்க மொழி, அந்த நாடு விடுதலை பெற்ற பின், புதுவாழ்வு பெற்று வருகிறது என்று சொல்லலாம். சமஸ்கிருதம் என்றுமே பேச்சு வழக்கு மொழியாக இருந்ததேயில்லை. அது எழுத்து வழக்குக்கு மாத்திரம்தான் பயன்படுகிற மொழி. ஆனால், இந்தியாவிலே உள்ள மூத்த மொழிகளிலே, ஒரு மொழி வடமொழியான சமஸ்கிருதம் என்பதை மறுப்பதற்கில்லை. நான் ஏற்கனவே தமிழில் எழுதியுள்ள குறளோவியம், அந்த வடமொழியில், சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்து, சீன

மொழியை எடுத்துக்கொண்டால், சீனமொழி பட எழுத்துக்கள், சித்திர எழுத்துக்களைக் கொண்ட மொழி. ஆனால், தமிழ்மொழி ஒன்றுதான், மனித சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளைப் பிசிறில்லாமல், அழுத்தந் திருத்தமாக, துல்லிய மாக உணர்த்தும் ஆற்றல் கொண்ட மொழி என்று நானல்ல; மொழியியல் தந்தை என்று போற்றப் படுகின்ற டாக்டர் எமினோ அவர்கள் கூறியிருக் கிறார்கள். அத்தகைய சிறப்பு வாய்ந்த மொழி நம்முடைய மொழி.

ஐரோப்பாவை மொழிவழியிலே அறிந்து கொள்ள வேண்டுமேயானால், இலத்தீன், ஹீப்ரூ, கிரீக் மொழிகளின் துணை தேவைப் படுவதைப்போல; இந்தியாவை அறிய தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளின் துணை தேவை. இந்திய மொழிகளுக்குத் தாயாக, இந்த இரண்டு மொழிகள்தான் உள்ளன.

பண்டித நேரு அன்றைக்கு எழுதிய உலகச் சரித்திரம் என்ற நூலில் மொஹஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய இடங்களில் இருப்பது திராவிட நாகரிகம் என்று ஒப்புக்கொண்டு எழுதினார். அப்படிப்பட்ட நாகரிகத்திற்குச் சொந்தக்காரர் களாகிய நம்முடைய மொழி தமிழ்மொழி. அந்தமொழிதான் ‘கிளாசிகல் லாங்வேஜ்‘ ஆக, செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டு மென்று நாம் இன்றைக்கு முறையீடு வைக்கிறோம். இந்த முறையீடு வெற்றி பெற்றால், என்ன பயன், தமிழ் செம்மொழி யாகிவிட்டால் என்ன ஆகிவிடும் என்று கேட்பவர்களுக்கு நான் தருகின்ற விளக்கம் இதுதான்.

மத்திய அரசு தமிழைச் செம்மொழி என்று அறிவித்தால், இந்தியப் பல்கலைக் கழக மானியக்குழு அதனை ஏற்கும். அதன்பின், அனைத்து இந்தியப்

பல்கலைக்கழகங்களிலும், தமிழ்த்துறை தனித்துறைகளாக உருவாகும். தமிழ் மொழி, தமிழ்க்கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும். இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு, தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும். உலகப் பல்கலைக்கழகங்களில் இப்போது, கீழ்த்திசை மொழிகளில் ஒன்றாக தமிழ் இருந்துவரும் நிலைமை மாறி, தனியே தமிழ்த் துறைகள் உருவாக்கப்படும்.

மத்திய அரசு, சமஸ்கிருத ஆண்டாக அறிவித்ததைப் போல, தமிழ் ஆண்டு என்று அறிவிக்க வாய்ப்பு ஏற்படும். சமஸ்கிருத ஆண்டைக் கொண்டாட, 15 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியதைப் போல, தமிழுக்கும் ஒதுக்கிக் கொண்டாடும் நிலை உருவாகும். தமிழர் களின் கலை, இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புக்களை விவரிக்கும் கலைக் களஞ்சியத் தொகுதிகள் உருவாக்கப்பட வாய்ப்பு ஏற்படும். தமிழ்மொழி–ஆங்கில அகராதிகள் பல வெளிவரலாம். அதற்கான செலவு மத்திய அரசு ஏற்கலாம். அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேக மூட்டும் வகையில், மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில், தமிழிலக்கியங்களும், நவீனப் படைப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

இதனை நிறைவேற்றுவதற்காகத் தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, பல முயற்சிகளிலே ஈடுபட்டோம். தமிழைச் செம்மொழியாக ஆக்கிடவேண்டுமென்று மத்திய அரசிடம் ஏற்கனவே வைக்கப்பட்ட கோரிக்கை சம்பந்தமான ஆவணங்களையெல்லாம் எடுத்துப் பார்த்து – பரிந்துரைகளை எல்லாம் படித்துப் பார்த்து – தமிழைச் செம்மொழியாக ஆக்கவேண்டுமென்ற இந்த மாநாட்டினுடைய தீர்மானத்தை, 1918ஆம் ஆண்டிலிருந்து நாம் இதுவரை படிப்படியாக நிறைவேற்றி வருகின்ற இந்தத் தீர்மானக் கருத்தைச் செயல் படுத்த வேண்டுமென்று, இந்த மாநாட் டின் சார்பாக நான் கேட்டுக்கொள் கிறேன்''.

தமிழ் செம்மொழி சம்பந்தமாக நான் ஆற்றிய இந்த உரை, தமிழ் ஆர்வலர்கள் மத்தியில்

பெரும் உணர்ச்சியையும், வரவேற்பையும் ஏற்படுத்தியதோடு; ஆங்கில நாளேடுகளிலும் விரிவாக வெளியிடப்பட்டு, மத்திய அரசிய லாரின் கவனத்தையும், கருத்தையும் ஈர்த்தது.

2003, மே திங்கள் 3, 4ஆம் நாள்களில் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கமும், தலைநகர்த் தமிழ்ச் சங்கமும் இணைந்து, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடத்திய மாநாட்டில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், ''உலகில் உள்ள மொழிகளில் தமிழ், கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், சீனம் ஆகிய ஐந்தும் மூத்தமொழி களாகும். ஆனால், இந்த மொழிகளில் கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் வழக்கொழிந்த நிலையிலும், அவற்றிற்குச் செவ்வியல் மொழித் தகுதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், காலத் தொன்மை, இலக்கிய வளம், தாய்மைத் தன்மை, உயிரோட்டம் ஆகியவற்றைப் பெற்ற தமிழ் மொழியைச் செவ்வியல் மொழி என அறிவிக்க இந்திய அரசு மறுக்கிறது. தமிழைச் செவ்வியல் மொழியாக ஏற்றுக்கொண்டு அதற்குரிய நிலையினை உருவாக்கிட வேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி; மீண்டும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் – அதன் செயலாளர் திரு.ச.ராமநாதன் அவர்களது முயற்சியின் பயனாக 20.7.2003 அன்று தீர்மானம் நிறைவேற்றியது. அதனைத் தொடர்ந்து, பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில், தமிழறிஞர்களும், தமிழ்ச் சான்றோர்களும், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் என ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

18.8.2003 அன்று தலைநகர்த் தமிழ்ச் சங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகளின் சார்பில், நாடாளுமன்றம் முன் உண்ணா விரதப்போராட்டம் நடத்தப்பட்டது. அந்த உண்ணாவிரதத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நாடாளுமன்ற உறுப்பினர் களும் மற்றும் மத்திய அமைச்சர்களுமான; டி.ஆர்.பாலு, ஆ.இராசா, ஏ.கே.எஸ்.விஜயன், ஏ.டி.கே.ஜெயசீலன், டி.வேணுகோபால், எஸ்.அக் கினிராஜ், ஆதிசங்கர், ஆ.கிருட்டினசாமி, வி.வெற்றிச் செல்வன், பேராசிரியர் சங்கர லிங்கம், ச.விடுதலைவிரும்பி, ஆர்.சண்முக சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் குறித்து, தமிழகக் காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுத்தலைவரும், தமிழ்நாடு காந்திப் பேரவைத் தலைவருமான இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், 12.8.2003 அன்று வெளியிட்ட அறிக்கையில், “தமிழ் பயிற்று மொழி, செவ்வியல் மொழி என்றெல்லாம் ஆகவேண்டுமென்பது நமது நெடிதுநாள் கோரிக்கையாகும். பாரதி நூற்றாண்டு விழாவை 52 வாரங்களும், பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை 52 வாரங்களும் கொண்டாடிய அமைப்பு எமது இலக்கியப் பேரவையாகும். அதன் சார்பில், நான் உண்ணா நோன்பில் கலந்து கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

**அதைப் போலவே, எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் அருமை நண்பர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் 13.8.2003 அன்று வெளியிட்ட அறிக்கையில்,**

“90 வருடங்களுக்கு முன்பே, தமிழைச் செம்மொழியாக்க வேண்டுமென்று தமிழறிஞர் கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள். இதற்காக, கட்சிபேதமின்றி கடந்த சில வருடங்களாகத் தமிழறிஞர்கள் மத்திய அரசை வலியுறுத்திப் பல போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். டெல்லியில் நடைபெறவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தைத் தமிழ்மக்களும், அனைத்துக் கட்சியினரும் ஆதரிக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் எம்.ஜி.ஆர். கழகம் கலந்து கொள்ளும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, டெல்லியில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பிறகு, 19.8.2003 அன்று போராட்டக் குழுவின் சார்பில் இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்களிடமும், குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களிடமும் தமிழைச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ளக் கோரும் மனு கொடுக்கப்பட்டது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், தலை நகர்த் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் புலவர் த.சுந்தரராசன், புலவர் அறிவுடைநம்பி, பேராசிரியர் ஆறு.அழகப்பன், முனைவர் தி.க.சு. கண்ணன், பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தலைவர் சுப்பிரமணியன், டெல்லித் தமிழ்ச் சங்கத் தலைவர் முகுந்தன் ஆகியோர் – மத்திய அரசு ஏற்கனவே சமஸ் கிருதம், பாரசீகம், அராபிய மொழிகளைச் செம்மொழிகளாக அறிவித் திருக்கும் நிலையில்; தமிழின் வளமையையும், தனித்தன்மையையும், தொன்மையையும் கருதி அதனைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டு மென்றும்; கடந்த நூறு ஆண்டுகளாக எழுப்பப் பட்டுவரும் இக்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றும் – பிரதமரிடமும், குடியரசுத் தலைவரிடமும் வலியுறுத்தினர். இக்கோரிக்கை ஏற்கனவே மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக அவர்களிடம் பிரதமர் வாஜ்பய் தெரிவித்தார்.

தமிழைச் செம்மொழியாக அறிவித்திட எழுப்பப்பட்டு வரும் கோரிக்கை குறித்து, திராவிடர் கழகத் தலைவர் திரு. கி.வீரமணி அவர்கள் 2.9.2003 அன்று வெளியிட்ட அறிக்கையில், “தொன்மையும் வளமும் மிக்க மொழியான தமிழைச் செம்மொழியென்று அறிவிக்க வேண்டுமென்பதை, மொழியியல் வல்லுநர்கள்– அறிஞர்கள் முதல் அரசியல் கட்சித் தலைவர்கள், சமூக அமைப்புகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதல் அனைவரும் ஒரே குரலில், மாற்றுக் கருத்து ஏதுமின்றி வாஜ்பய் தலைமையிலான மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இக்கோரிக்கை கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது. இதற்கிடையே; – தமிழைச் செம்மொழியாக அறிவிப்பது தொடர்பாக பரிந்துரை அளிக்கு மாறு, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளிமனோகர் ஜோஷி, தனது அமைச்சக அதிகாரிகளிடம் கேட்டதாகவும்; பயன்பாட்டில் இல்லாத இறந்த மொழியை மட்டுமே செம்மொழியாக அறிவிக்க முடியு மென்றும்; தமிழ்மொழிக்கு அனைத்து வளங் களும் உள்ளபோதிலும், அது பயன்பாட்டில் இருப்பதால் செம்மொழியாக அறிவிக்க இயலாதென

அமைச்சருக்கு அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளதாகவும்; – திடீரென்று ஏடுகளில் அதிகாரபூர்வமின்றி ஒரு செய்தி வெளிவந்துள்ளது. சமஸ்கிருதத்தோடு ஒப்பிடு கையில், தமிழ் வளமான மொழியாக இருப்ப தால், அது செம்மொழிக்குள்ள தகுதியற்ற மொழியென்றால், அதைவிடக் கேலிக்கூத்து வேறு உண்டா? உலகத் தமிழர்கள் முதல் உள்நாட்டுத் தமிழர்கள் வரை அனைவரும் இதனை ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கருதிட வேண்டும்'' என்று அவர் அறைகூவல் விடுத்தார்.

மத்திய ஆட்சியில் இருந்த தேசிய ஜன நாயகக் கூட்டணியில் பெரும்பங்கு வகித்து வந்த பா.ஜ.க.வில்; முரளி மனோகர் ஜோஷி போன்ற முன்னணித் தலைவர்கள் சிலர், திராவிட மொழிக் குடும்பத்தின் மீதிருந்த தீராத வெறுப்பின் காரணமாக; தமிழ் செம்மொழி யென அறிவிக்கப்பட வேண்டுமெனும் கோரிக்கை தொடர்பாகக் கொண்டிருந்த எதிர்மறையான அணுகுமுறையும், காட்டிய தாமதமும் தமிழ்ச் செம்மொழி அறிவிப்பைத் தள்ளிப்போடச் செய்தன என்ற நிகழ்வினை; வரலாறு கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது என்பதை மறுத்திட இயலாது.

அன்புள்ள,

**மு.க.**

## செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் – 7

### கடிதமல்ல; காலத்தால் அழிக்க முடியாத செப்பேடு!

**(31–12–2009)**

உடன்பிறப்பே,

ஆட்சியிலே இருந்தாலும், எதிர்க்கட்சியாகச் செயல்பட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம், தான் ஏற்றுக் கொண்ட இலட்சியங்களுக்காக என்றென்றும் குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கும் என்பதற்குக் கழக வரலாற்றில் எண்ணற்ற சான்றாவணங்கள் இருக்கின்றன. தமிழைச் செம்மொழியாக அறிவித்திட வேண்டு மென்பது கழகத்தின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றிட, ஆட்சியில் இருந்தபோது மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, எதிர்க்கட்சியாக இருந்த போதும் கழகம் தொய்வில்லாத நடவடிக்கைகளை மேற்கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்கிற முறையில் நான், பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து, 22.4.2003 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில்;

“தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்பது எனது இதயபூர்வமான கோரிக்கை. கடந்த பல ஆண்டுகளாக நான் வலியுறுத்தி வரும் இந்தக் கோரிக்கையை மீண்டும் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்மொழி எப்போது தோன்றியது என்பதை இதுவரை எந்த அறிஞரும் கண்டு பிடிக்கவில்லை. கல்தோன்றி மண் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய மொழி தமிழ்மொழி என்று அறிஞர்கள் பலர் கூறியுள்ளனர். இதுவே தமிழின் தொன்மையைப் பறைசாற்றுகிறது. அத்தகைய பெருமை வாய்ந்த தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை நான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறேன்.

நான், தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பாகப் பலமுறை மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்நிலையில், தங்கள் தலைமையில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, நீண்ட எதிர்பார்ப்புடன் கூடிய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் என்று நம்புகிறேன்'' என்று மீண்டும் மத்திய அரசுக்கு நினைவூட்டி, வலியுறுத்தினேன்.

2003ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் 20, 21 ஆகிய நாட்களில் நடைபெற்ற விழுப்புரம் மாவட்டத் தி.மு.க. மாநாடு; விழிப்புணர்ச்சி ஊட்டிய மாநாடாக – எழுச்சியும், ஏற்றமும் மிகுந்த மாநாடாக – பயன்விளைத்திடும் வகையில் பாங்குற நடைபெற்றது. அந்த மாநாட்டில் “செம்மொழியாக அறிவிக்கப்படுவதற்கும், மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக இடம் பெறுவதற்கும் அனைத்துத் தகுதிகளும் தமிழ்மொழிக்கு இருந்தும்; பலமுறை மத்திய அரசிடமும், நாடாளுமன்றத்திலும் இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டும்; இதுவரை அதனை ஏற்று அறிவிக்காமல் இருக்கும் மத்திய அரசின் மெத்தனப் போக்கைச் சுட்டிக் காட்டுவதுடன்; உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி'' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தையொட்டி, தி.மு.க. தலைமை இலக்கிய அணி சார்பாக, தமிழகம் முழுவதும் 15 மாவட்டத் தலைநகரங்களில் தமிழ்ச் செம்மொழி – ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. முனைவர் மு.பி.மணிவேந்தன் மற்றும் மாநில நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தினர்.

விழுப்புரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட; தமிழ் ஆட்சிமொழி – செம்மொழி, காவேரி ஆணையம், சேதுசமுத்திரத் திட்டம், பொடா– எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் ஆகியவை குறித்த தீர்மான விளக்கக் கூட்டங்கள் தமிழகமெங்கும் நடைபெற்று, கழகச் சொற்பொழிவாளர்கள் உரையாற்றினர். அந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம், 1.11.2003 அன்று மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன் மறியல் அறப்போராட்டத்தை நடத்தியது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முயற்சியால், 10.1.2004 அன்று தமிழறிஞர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், செம்மொழிக் கோரிக்கையினைத் தமிழறிஞர்கள் மட்டுமன்றிப் பாமரர்களும் அறியவேண்டு மென்றும்; அவர்களும் அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு நல்கிட வேண்டுமென்றும்; எனவே ஒருகோடிக் கையெழுத்து இயக்கத்தினை நடத்தி, நடுவண் அரசை வலியுறுத்தவேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன் தொடக்க விழா 12.1.2004 திங்களன்று கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில், தஞ்சை நகர்மன்றத் தலைவர் திரு.கு.சுல்தான் முதல் கையெழுத்திட நடைபெற்றது. சம்பந்தப் பட்ட அனைவரும், தமிழ் ஆர்வலர்களும் மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக, மிகக்குறுகிய காலத்திலேயே அந்த இயக்கம் இலக்கினை அடைந்தது.

2004, மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி; திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், முதன் முதலாக செம்மொழிக் கோரிக்கையின் நோக்கத்தை விளக்கி; ‘‘இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழுக் கென்று துறை ஏற்படுத்திடவும், தமிழ் ஆராய்ச்சிக்கென மத்திய அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கிடவும், உலகளாவிய (Global) பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சிப் பணி நடைபெறவும் வாய்ப்பாக, செம்மொழிக்குள்ள அனைத்துத் தகுதிகளும் கொண்ட தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழியென அறிவிக்க வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்’’ என்ற வாக்குறுதி இடம் பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று, அதில் தியாகத் திருவிளக்காம் திருமதி சோனியாகாந்தி அவர்களின் தலைமையில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றிபெற்று; டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைத்தது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல கட்சிகள் இடம் பெற்றன. நாடாளுமன்றத் தேர்தல் களுக்கு முன்பிருந்தே திருமதி. சோனியா காந்தி அவர்களிடம் நாம் தொடர்ந்து எடுத்துரைத்து வந்ததன் விளைவாக, மத்தியில் ஆட்சி அமைந்ததற்குப் பிறகு வெளியிடப்பட்ட குறைந்தபட்ச பொதுச்செயல்திட்ட அறிக்கை யில் (National Common Minimum Programme); தமிழ்மொழி, செம்மொழியென பிரகடனப்படுத்தப்படும் (Tamil will be declared as a Classical Language) என்ற செயல் திட்டமும் இடம் பெற்றது. இது செம்மொழி வரலாறு ஒரு சிறப்பான கட்டத்தை எட்டிவிட்டது என்பதை உலகத்திற்கு உணர்த்தியது.

7.6.2004 அன்று நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்கள், தமிழ் செம்மொழியென பிரகடனப் படுத்தப்படும் (Tamil will be declared as a Classical Language) என்று செய்த அறிவிப்பு, தமிழறிஞர்களையும், தமிழ் ஆர்வலர்களையும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

2004, ஆகஸ்டுத் திங்கள் 21, 22 ஆகிய நாட்களில் சேலம் மாநகரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்பு மாநாட்டில்; ‘‘கடந்த ஒரு நூற்றாண்டாகத் தமிழறிஞர்கள் பலரும், தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியே யென்று தக்க சான்றுகள் தந்து, வலியுறுத்தி வந்தாலும், தமிழ்மொழியின் அந்தச் சிறப்புத் தகுதியை மத்திய அரசு ஏற்க வேண்டுஎன்பதைக்கலைஞர்அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குக் கடித வாயிலாகவும்,

நேரிலும் பலமுறை வலியுறுத்தி வந்ததுடன், தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலும் அதனை இடம்பெறச் செய்து, தமிழ்மொழியைச் செம்மொழியென அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தியதற் கிணங்க, மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, அதனை ஏற்று குடியரசுத் தலைவர் உரையில் அறிவித்திருப்பதை இம்மாநாடு வரவேற்பதுடன், விரைவில் அதற்குரிய அரசாணை வெளியிடவும் கேட்டுக் கொள்கிறது’’ என்ற தீர்மானம்; பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியம் முன்மொழிந்திட, திரு.ச.அமுதன் வழிமொழிய,

ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலிலும், டாக்டர். மன்மோகன்சிங் அவர்களின் தலைமையிலும் இயங்கி வரும் மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, 12.10.2004 அன்று, தமிழைச் செம்மொழியெனப் பிரகடனம் செய்து அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிவிக்கை வெளியானதும், நான் எவ்வளவு குதூகலம் கொண்டிருப்பேன் – எனது உள்ளம் எந்த அளவுக்கு மகிழ்ச்சியால் துள்ளியிருக்கும் – எனது மனதில் எவ்வளவு பெருமிதம் முளைத்திருக்கும்; என்பதையெல்லாம் உடன்பிறப்பே, என்னை முழுதும் அறிந்த நீ நிச்சயம் உணர்வாய். தந்தை பெரியார் அவர்கள் என்னைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டிய போதெல்லாம் – அறிஞர் அண்ணா அவர்கள் என்னை அரவணைத்து உச்சிமுகர்ந்து அன்புமழை பொழிந்தபோதெல்லாம்; அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடான மகிழ்ச்சி அப்போது என்னுள் குடிகொண்டிருந்தது. அதன் வெளிப்பாடாகத்தான் 10.10.2004 அன்று சென்னையில் தமிழ் மொழி அகாதமி நடத்திய பாராட்டு விழாவிலும்; 17.10.2004 அன்று மதுரையில், மதுரை தமிழ்ச் சங்கமும், தமிழார்வம் உடைய 30க்கும் மேற்பட்ட சங்கங்களும் இணைந்து நடத்திய பாராட்டு விழாவிலும்; நான் ஆற்றிய உரைகள் அமைந் திருந்தன என்பதைத் தமிழார்வலர்கள் அனைவரும் அறிவர். அந்த உரைகள் இத்தொடர் கட்டுரைகளுக்கு முழுதும் பொருத்தமானவையெனினும்; அவற்றில் ஒருசில பகுதிகளை மட்டும் பின்வருமாறு வழங்குகிறேன். அவை இதோ :–

“தமிழ் மொழி செம்மொழி என அறிவிக்கப்பட்டதைக் கொண்டாடுகின்ற வகையில் நாமெல்லாம் இங்கே கூடியிருக் கிறோம். அதற்கு ஒரு பாராட்டு விழா என்றும், அந்தப் பாராட்டு விழா எனக்கென்றும் குறிப்பிட்டிருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. திராவிட மொழி ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல் என்கின்ற பேறிஞர், அவரைத் தொடர்ந்து பல ஆண்டுகால இடை வெளிக்குப் பிறகு, தமிழ்மொழி செம்மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று முதல் குரல் கொடுத்த சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர், அவர்களைத் தொடர்ந்து தமிழ்ச் சங்கங்கள் பல, தமிழ்ப் புலவர்கள் பலர், தமிழ்ப் பேறிஞர்கள் பலர் – இப்படி நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில் இந்த ஒரு நிலை நாம் எய்துவதற்காகப் பாடுபட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவர்களுக் கெல்லாம் நீங்கள் தெரிவிக்க வேண்டிய பாராட்டுக்களை, வழங்க வேண்டிய நன்றியை என் வாயிலாக இன்றைக்கு வழங்கியிருக்கின்றீர்கள் என்று தான் நான் கருதுகிறேனேயல்லாமல், நீங்கள் நன்றியினை ஒரு மூட்டையாகக் கட்டி, என்னுடைய தலையிலே வைத்து, இதைக் கொண்டு போய் அவர்களிடத்திலே சேர்த்திடு என்று கட்டளையிட்டிருக்கிறீர்கள்.

நான்ஒரு கருவி. இந்தக் கருவியைத் தமிழ் நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். தமிழ்ப் புலவர்கள், தமிழ்ப் பேறிஞர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உளி சிற்பம் செதுக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டால், அந்த உளியே அந்தச் சிற்பத்தை செதுக்கியதாக பொருள் கொள்ள முடியுமா ? அந்தப் பணியை ஆற்றியது சிற்பி. அதைப்போல நான் உளிதான், சிற்பிகள் பலர், பல்லாயிரவர். அந்தச் சிற்பிகளுக்கெல்லாம் என் சிரம் தாழ்ந்த வணக்கத்தை, நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் கொஞ்சம் அணுகிப் பார்த்தால் எந்த வொரு மொழியும் ஒரு அரசைப் பொறுத்துத் தான் வளர முடியும். வரலாற்றை நீங்கள் புரட்டிப் பார்ப்பீர்களேயானால், ஒரு மொழி வளர அரசும், அரசின் ஆதிக்கமும் அந்த அரசை நடத்துகின்ற வர்களுடைய ஆதரவும் தேவை என்பதை அறியலாம். அப்படிப் பார்த்தால் தமிழ் செம் மொழியாக ஆவதற்கான வழிவகை வகுக்கின்ற ஒரு அரசு இந்தியாவிலே உருவாயிற்று என்பதே உண்மை. அந்த அரசின் கடமையாகத்தான் தமிழ் செம்மொழியாக இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றிய டாக்டர். மன்மோகன் சிங் அவர்களுக்கும், வழிகாட்டும் குழுவிற்கு பொறுப்பேற்றிருக்கின்ற திருமதி.சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும் இந்தப் பெருவிழாவின் சார்பாக நான் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் 1924ஆம் ஆண்டு 80 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில், தஞ்சைத் தரணியில் எங்கோ ஒரு சிற்றூரில், திருக்குவளை என்ற கிராமத்தில் முத்து வேலருக்கும், அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்த நான் இன்றைக்கு, இந்தப் பெருவிழாவில், தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் வாழ்த்த, இத்தனை போற்றுதலுக்கும், புகழுதலுக்கும், பெருமைக்கும் உரியவனாக ஆகியிருக்கிறேன் என்றால், இதற்குக் காரணமாக என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையாருக்கும், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கும், வழிகாட்டி உய்வித்த அண்ணன் பேறிஞர் அண்ணா அவர்களுக்கும் என்னோடு ஒத்துழைத்து, உறுதுணையாக இருக்கின்ற உங்கள் அனைவருக்கும், எல்லா உடன்பிறப்புகளுக்கும் இந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்குகின்றேன்.

கடந்த காலத்தில் தமிழ் செம்மொழியாக ஆவதற்காகவும், ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆவதற்காகவும், விழுப்புரம் மாநாட்டிலே தீர்மானம் நிறைவேற்றி போராட வேண்டியிருந்தது. ஒரு இலட்சம் பேர் என்னுடைய

தலைமையிலே உள்ள இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலைக்கு செல்ல வேண்டியிருந்தது. அப்பொழுதும் கவனிக்கப் படும், பார்ப்போம் என்ற ஒரு ஆறுதல் மொழிகூட கடந்த காலத்திலே இருந்த அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இந்த அரசு, இன்றைக்கு இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிற அரசு, நம்முடைய உணர்வைப் புரிந்து கொண்டு, உடனடியாக செம்மொழியாக ஆக்குவோம் என்று குடியரசுத் தலைவர் உரையிலே அறிவித்து, அறிவித்ததை நீங்கள் எப்போது அமலாக்கப் போகிறீர்கள் என்று நாங்கள் வலியுறுத்தி, வலியுறுத்தி, இன்றைக்கு அது ஆக்கபூர்வமாக, அமைச்சரவைக் கூட்டத்திலேயே அங்கீகாரம் பெற்று, தமிழ் மொழி, செம்மொழியாக நம்முடைய மடிகளிலே தவழ்ந்து விளையாடுகின்ற ஒரு காட்சியைக் காணு கின்றோம்.

இது ஒருவருடைய உழைப்பு அல்ல. தமிழ் நாட்டிலே இருக்கின்ற வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை வீண் போக வில்லை. நாங்கள் தமிழ் மீது வைத்துள்ள ஆசை, பாசம் இவைகள் எல்லாம் வீண் போக வில்லை. வீண் போகாமல் பாதுகாத்த பெருமை எனக்கல்ல. என்னுடைய தலைமையிலே நாற்பது பேரை வெற்றிபெறச் செய்த இந்த நாட்டு வாக்காளப் பெருமக்களுக்கு உரியது. தமிழர்களுக்கு உரியது. எனவே, இந்தப் பாராட்டும், நன்றி கூறும் விழாவும், அவர்களுக்கே உரியது''.

பின்னர், **5.3.2006** அன்று திருச்சியிலே நடைபெற்ற தி.மு.கழக மாநாட்டில் திருமதி. சோனியாகாந்தி அவர்கள் முன்னிலையில் நான் உரையாற்றியபோதுதான் என்னுள் பெருக் கெடுத்த உணர்வுகள் குற்றாலத்து அருவி யெனக் கொட்டின. அந்த உணர்வுகளை இதனை எழுதும்போது மீண்டும் நான் பெற்று, படிக்கும்போது நீயும் பெறவேண்டும் என்பதற்காக, உரையின் ஒரு பகுதியை பின்வருமாறு வழங்கியிருக்கிறேன்:–

''தமிழைச் செம்மொழியாக்க; நூற்றைம்பது ஆண்டுகாலமாக சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர் அவர்களுடைய கோரிக்கை பூத்து, காய்த்து, பழுத்து, அது அழுகிவிடுமோ என்றெல்லாம் நாம் பயந்திருந்த காலத்தில்; ''நாங்கள் இருக்கிறோம், அஞ்சாதீர்கள்'' என்று சொல்லுகின்ற இன்றைய மத்திய ஆட்சி நாம் விடுத்த அந்த வேண்டுகோளை ஏற்று தமிழை செம்மொழி என்று அறிவித்திருக்கிறது. தமிழ் செம்மொழி என்று அறிவித்து; அதைத் தொடர்ந்து அம்மையார் அவர்களே, நவம்பர் **8** அன்று நீங்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதினீர்கள். அந்தக் கடிதத்தில்,

November 8, 2005

Dear Thiru Karunanidhiji,

I have received your letter of 28th October. I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party.

With Regards,

Yours sincerely,
**Sonia Gandhi**

அதாவது, தமிழை செம்மொழியாக ஆக்கு வதற்குத் தேவையான சடங்கு, சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து அது நிறைவேறி விட்டது. இந்தச் சாதனைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் காரணம் என்றாலும்கூட, குறிப்பாகவும் சிறப்பாகவும், நீதான் இதற்குக் காரணம். உன் தலைமையிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதற்குக் காரணம் என்று எழுதினீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்கிறேன். இது ஒரு கடிதமாக அல்ல. காலா காலத்திற்கும், இன்னும் நூறாண்டுகாலம், இருநூறாண்டு காலத்திற்கும் பிறகு என் கொள்ளுப் பேரன் எடுத்துப் படித்து நம்முடைய தாத்தா கட்டிக்காத்த செப்பேடு இது என்று பாராட்டுகின்ற அளவிற்கு ஆக வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவன் நான்.

இளமைப் பருவத்தில் தமிழ் வாழ்க, தமிழர் வெல்க என்று புலி, வில், கயல் பொறித்த கொடி பிடித்து அரசியல் வாழ்வைத் தொடங்கியவன் நான். அந்த அரசியல் வாழ்வுதான் இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் செம்மொழியாக ஆக, ஒரு வரலாறு உண்டு என்றால், அந்த வரலாற்றை – பெருமையை எனக்கு அளிக்கும் வகையில் நீங்கள் எனக்கு எழுதிய அந்தக் கடிதம் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட்டு, வைரங்கள் பதிக்கப் பட்டு, என்னுடைய கல்லறையிலே எதிர்காலத் தில் மாட்டப்பட வேண்டிய ஒன்று. என்னுடைய நினைவகத்திலே இருக்க வேண்டிய ஒன்று என்கின்ற அந்த பூரிப்போடு நீங்கள் எழுதிய அந்தக் கடிதத்திற்காக என்னுடைய நன்றி யையும், வணக்கத்தையும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்''.

இந்த நன்றி உரையின் ஒவ்வொரு சொல்லும் நான் வாழும் காலம் வரை எனது இதயத்திலும்; ஏன், நான் மறைந்த பிறகும்கூட, எனது கல்லறையிலும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்!

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று, தமிழறிஞர்கள் முதலில் எழுப்பிய குரல் – அமைப்பு ரீதியாக எதிரொலித்து – தமிழர்களின் இதயக் குரலாக மாறி – அரசியல் அரங்கில் ஏற்றம் பெற்று – ஆட்சி மூலமாக அந்தக் குரல் ஆற்றல் பெற்று – தக்கோரிடத்தில் சரியான தருணத்தில் தகுதி படைத்தோரால் உரிய முறையில் எடுத்துரைக் கப்பட்டதால்; தமிழ் அன்னை இன்றைக்குத் தங்கரதத்திலே வீற்றபடி தரணியிலே பவனி வருகிறாள்!

காலம் கனிந்தது. தமிழர்களின் நூறாண்டு காலக் கனவு நனவானது. தமிழ் செம்மொழி யெனப் பிரகடனம் ஆயிற்று – செம்மொழி வரலாற்றின் முதல் பாகம் சிறப்பாக நிறைவெய்தி உள்ளது. செம்மொழிக்கு நாம் அடுத்தடுத்து ஆற்றிட வேண்டிய பணிகள் அணிஅணியாகஉள்ளன.அவற்றிற்காக நாம் நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்வோமாக!

செம்மொழியாம் தமிழ் வாழ்க!
செந்தமிழர் நலம் வாழ்க!
சீர்மிகு தமிழகம் செழித்தோங்கி வளர்ந்திடுக!

அன்புள்ள,

**மு.க.**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 21 குழுக்களின் கலந்தாய்வுக் கூட்டம்**

31.12.2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சென்னை–நுங்கம்பாக்கம், தாஜ் கோரமண்டல் ஓட்டலில், 21 குழுக்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்ட முடிவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாநாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களின் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று, தங்கள் பணிகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடல்கள் நடந்தன. மாநாடு நடைபெறும் அரங்குக்குச் சென்றும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்தும் கலந்துரையாடி பணிகள் செம்மையாக நடைபெற்று வருகின்றன.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி கோவை மாநகரில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை**

4.1.2010 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக நகர ஏழை மக்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுத்தல் என்னும் திட்டத்தின் கீழ், கோவை–உக்கடம் பகுதியில் 68 கோடி ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 232 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், அம்மன்குளம் என்ற இடத்தில் 50 கோடி ரூபாய் செலவில் 1,608 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும், மொத்தம் 118 கோடி ரூபாய்ச் செலவில் 3 ஆயிரத்து 840 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஆணையிட்டுள்ளார்.

**உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி கோவை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் சாலைகளை மேம்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, மாநாடு நடைபெறக்கூடிய கொடீசியா வளாகம் அமைந்துள்ள சேலம்–கொச்சின் சாலையை இணைக்கும் கோவை இரயில் நிலையம், பேருந்து நிலையம், விமான நிலையம் ஆகியவற்றுக்கான சாலைகள்; மாநாட்டுத் திடலின் அருகே தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் சித்ரா–குரும்பாளையம் சாலை மற்றும் சிங்காநல்லூர் பேருந்து நிலையம், கோவை மத்தியப் பேருந்து நிலையம், இராமநாதபுரம் மற்றும் போத்தனூர் ரயில் நிலையம் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள் முதலான நெடுஞ்சாலைத்துறைக்கு உட்பட்ட கோவை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள 96 கிலோமீட்டர் நீளமுடைய 72 சாலைகளை 59 கோடியே 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் மேம்படுத்திட நிருவாக ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 04.01.2010 அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

## தமிழ் இணைய மாநாட்டினையொட்டி பள்ளி மாணவ–மாணவியருக்கு பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க முடிவு

19.1.2010 அன்று நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு அமைப்புக் குழுக் கூட்டத்தில், பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வேறு போட்டிகளை நடத்திட முடிவு செய்யப்பட்டது. ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு Paint Brush (தூரிகை வரைவு) போட்டியும், திருக்குறள் (அறத்துப்பால், பொருட்பால்) பழமொழி, ஆத்திசூடி என்ற இம்மூன்றனுள் ஒன்றைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு, ஒரு பாடலை வரைகலைப் பதிவில் ஒரே படக்காட்சியாக Paint Brush (தூரிகை வரைவு) அல்லது அதேபோன்ற மென்பொருள் தூரிகைச் சாதனத்தைக் கொண்டு 45 நிமிடங்களுக்கும், குழுப் போட்டிகளுக்கு 1 மணிநேரம் என்ற அளவிலும், மேல்நிலைப்பள்ளி மாணவச் செல்வங்களுக்கு அசைநிலை வரைகலை (Animation) போட்டியும், இப்போட்டியில் பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், கலைஞரின் சங்கத்தமிழ் பாடல்கள் இம்மூன்றனுள் ஒன்றைத் தேர்ந்துக் கொண்டு ஒரு பாடலை படக்காட்சியாக அசைநிலை வரைகலை (Animation) அல்லது அதேபோன்ற மென்பொருள் தூரிகைச் சாதனத்தை கொண்டு ஒரு மணி நேரம் என்ற அளவிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. சுமார் 10,000 முதல் 15,000 மாணவர்கள் பங்கேற்பார்கள் என மதிப்பிடப்பட்டது.

## தமிழ் இணைய மாநாட்டிற்கு பெயர்களை பதிவுசெய்ய தனி வலைதளம் உருவாக்கம்

இணைய மாநாட்டிற்கு www.tamilinternetconference.org எனும் இணையதளத்தில் மாநாட்டில் பங்கேற்போர் தம் பெயர்களை பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் இணைய மாநாட்டு கண்காட்சி, தமிழ்க் கணினி வளர்ச்சி குறித்த தமிழ் மென்பொருள் கண்காட்சி கோவை செம்மொழி மாநாட்டில் நடைபெறுகிறது. இக்கண்காட்சியில் பத்தாயிரம் சதுர அடியில் நூற்றுக்கும் மேற்பட்ட மென்பொருள் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. அதில் அனைத்துலகமும் ஈர்க்கும் அளவிற்கு மென்பொருட்கள், தமிழக அரசின் மின் ஆளுகை (e governance) அரங்குகள், தமிழ் மல்டிமீடியா சிடி அரங்குகள், தமிழ் மென்பொருட்கள் இடம்பெறவிருக்கின்றன. இக்கண்காட்சியின் வாயிலாக பொதுமக்கள் தமிழ் மென்பொருட்களையும் தமிழக அரசின் தமிழ்ப் பயன்பாடுகள் மற்றும் அலுவலகச் செயல்பாடுகளையும் பயன்படுத்திப் பார்க்கலாம். கணித் தமிழ்ச் சங்கம் என்ற தமிழ்க் கணினி அமைப்பு, தகவல் தொழில் நுட்பத் துறையுடன் இணைந்து இக்கண்காட்சியை நடத்தவிருக்கிறது. இக்கண்காட்சி பற்றி மேலும் தகவலுக்கு antopeter@yahoo.com, www.tamilinternetconference.org எனும் மின்னஞ்சல் மற்றும் இணைய முகவரியை அணுகலாம்.

## ஆய்வரங்கத்தில் பங்கேற்க பதிவு செய்துள்ளோர் விவரம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்கத்தில் பங்கேற்க வலைத்தளம், மின் அஞ்சல், அஞ்சல் மற்றும் நேரில் என்று இந்தியா உட்பட 49 நாடுகளைச் சேர்ந்த 7 ஆயிரத்து 356 பேர் பதிவு செய்து கொண்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு :

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (யு.எஸ்.ஏ.) –லிருந்து பதிவு செய்திருப்பவர்கள் 44 பேர். அமெரிக்கன் சமோவா – 1, அயர்லாந்து – 3, ஆஸ்திரியா – 1, ஆஸ்திரேலியா – 15, யுனைடெட் கிங்டம் (இங்கிலாந்து) – 18, இத்தாலி – 1, இந்தோனேஷியா –2, இலங்கை – 91, இரான் – 1, எத்தியோப்பியா – 1, ஐக்கிய அரபு நாடுகள் – 5, ஐல் ஆப் மேன் – 1, ஓமன் – 4, கசகிஸ்தான் – 1, கத்தார் – 1, கனடா – 23, காங்கோ – 1, கிரீஸ் – 1, கென்யா – 2, சவுதி அரேபியா – 6, சிங்கப்பூர் – 90, சீனா – 4, சுவிட்சர்லாந்து – 2, செர்பியா – 1, நார்வே – 2, நியூசிலாந்து – 3, நெதர்லாந்து – 3, நைஜீரியா – 1, பக்ரைன் – 2, பார்படாஸ் – 1, பிரான்ஸ் – 7, பிரிட்டிஷ் இந்தியா ஓஷன் டெரிடரி – 1, பின்லாந்து – 1, புரூணை – 1, போலந்து – 1, மலேசியா – 181, மொரிசியஸ் – 9, வங்க தேசம் – 1, ஜப்பான் – 3, ஜெர்மனி – 9, ஹாங்காங் – 1, பிற நாடுகள் – 2, இந்தியா – 6 ஆயிரத்து 800. ஒட்டுமொத்தமாகப் பதிவு செய்திருப்பவர்கள் 7 ஆயிரத்து 356 பேர்.

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட சாலை மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கி ஆணை

3.2.2010 அன்று, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட 75.27 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை மேம்பாட்டிற்காக 26.31 கோடி ரூபாயினை ஒதுக்கி ஆணை பிறப்பித்தது.

<u>கோவையில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு</u>

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி ஏறத்தாழ 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவையில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் பல்வேறு ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு – 59 கோடியே 85 இலட்சம் ரூபாய்.
- கோவையில் செம்மொழிப் பூங்கா அமைத்திட – 20 கோடி ரூபாய்.
- மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப் பணிகளுக்கு – 10 கோடி ரூபாய்,
- மின் கட்டமைப்பு வசதிகளுக்கு – 56 கோடி ரூபாய்,
- கோவை மாநகரில் சாலைகள் மேம்பாடு, புதிய தெரு விளக்குகள் அமைத்தல், நடைமேடைகள் அமைத்தல், பேருந்து நிழற்குடை அமைத்தல் மற்றும் புதிய இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு – 104 கோடியே 40 இலட்சம் ரூபாய்,
- கொடிசியா உள் அரங்கம் அமைக்கும் பணிகளுக்கு – 9 கோடியே 30 இலட்சம் ரூபாய்,
- மாநாட்டுப் பந்தல் அமைக்கும் பணிகளுக்கு – 7 கோடியே 71 இலட்சம் ரூபாய்,
- ஊர்வலம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடுகளுக்கு – 5 கோடியே 85 இலட்சம் ரூபாய்,
- கண்காட்சி அமைக்கும் பணிகளுக்கு – 1 கோடியே 60 இலட்சம் ரூபாய்,
- விருந்தோம்பல் செலவுகளுக்கு – 4 கோடியே 95 இலட்சம் ரூபாய்,
- நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி மேம்பாட்டுப் பணிகளுக்கு – 4 கோடியே 27 இலட்சம் ரூபாய்,
- மருத்துவ வசதி, சிறப்பு மலர், போக்குவரத்து வசதி ஆகிய பணிகளுக்கு – 10 கோடியே 85 இலட்சம் ரூபாய்,

பொதுவான செலவுகளுக்கு – 5 கோடியே 22 இலட்சம் ரூபாய். ஆக மொத்தம் ஏறத்தாழ 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

<u>உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு குறித்த சிறப்பு ஆய்வுக் கூட்டத்தில்<br>மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நிறைவுரை (17–02–2010)</u>

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு குழுக்களைச் சார்ந்த தலைவர்களே, உறுப்பினர்களே, அரசு அதிகாரிகளே, நண்பர்களே!

கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பான பல்வேறு வகைப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள 21 குழுக்களும், தத்தமது பணிகளைத் தொடங்கி, மிகச் சிறப்பாக செய்துவருவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒவ்வொரு குழுவும் சந்திக்கும்போது, பல்வேறு முடிவுகளை மேற்கொள்கின்றது. அந்த முடிவுகளை அவ்வப்போது மாநாட்டுச் சிறப்பு அலுவலர் அவர்களுக்கு அனுப்பி வைத்திட அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குழுவும் மேற்கொள்ளவுள்ள பணிகளுக்கான செலவுகளுக்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதி ஒதுக்கீட்டினைக் கருத்தில் கொண்டு, பணிகளை வரையறுத்துச் சிறப்பாகச் செய்யும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குழுவுக்கும் இன்னின்ன பணிகள் என்று வரையறுத்து அறிவிக்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட பணிகளைத் தவிர – ஒரு குழு மேற்கொள்ள வேண்டிய பணியினை மற்றொரு குழு மேற்கொள்ளாமல் தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாநாடு தொடர்பானவற்றுள் ஆய்வரங்கம் மிகவும் முக்கியமானது. ஆய்வரங்கத்தில் படிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளும், பரிமாறப்படும் கருத்துகளும் அச்சு இயற்றப்பட்டு, காலாகாலமும் நிலைத்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் துணை செய்யும் என்பதால் ஆய்வரங்கப் பணி சிறப்பானது, முக்கியமானது. எனவே, ஆய்வரங்கத்தில் பங்குபெறப் போகும் தமிழ் அறிஞர்களின் தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி, உணவு உள்ளிட்ட விருந்தோம்பலுக்கு உயர்முக்கியத்துவம் அளித்திட வேண்டுமென்றும், அதில் எவ்விதக் குறைபாடும், எந்தவொரு நாட்டுத் தமிழ் அறிஞரிடமிருந்தும் வந்துவிடக் கூடாது என்பதில் அனைவரும் கண்ணுங்கருத்துமாக கவனம் செலுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநாடு தொடர்பாக கோவை மாநகரில் நடைபெற்று வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தொடர்பானவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் உயர்ந்த தரத்தை உறுதி செய்திட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அனைத்துக் குழுக்களும், பணிகளை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு, திட்டமிட்டுச் சிறப்பாகச் செய்திட வேண்டுமென்றும்; மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித் தருவதில் ஒவ்வொருவரும் சிறப்பான பங்களிப்பை நல்கிட வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இன்று மாலையில் நடைபெற்றுள்ள இந்தக் கலந்தாய்வு நிகழ்ச்சியில் அளிக்கப்பட்டுள்ள கருத்துகள் அனைத்தும் நம்முடைய செம்மொழித் தமிழ் மாநாட்டை எந்த வகையிலே சீரும் சிறப்புமாக நடத்த முடியும் என்பதற்கு வழிகாட்டிகளாக அமைந்திருக்கிறது என்பதை நாம் நன்றாக உணர்கின்றோம். பலவற்றை இங்கே விவரிக்க நேரம் இல்லாத காரணத்தால் அடுத்தடுத்துக் கூடுகின்ற நம்முடைய குழுக்களின் கூட்டத்தில் அதைப் பற்றியெல்லாம் ஆய்ந்து, ஆவன செய்வதற்கு நம்மை நாமே தயார் படுத்திக் கொள்ள முடியும் என்று நான் கருதுகின்றேன்.

மாநாட்டிற்கு இதுவரையிலே இருந்த இடைவெளி மாதக்கணக்கில் இருந்தது – பின்னர் வாரக் கணக்கில் இருந்தது – பின்னர் வாரக் கணக்கில் இருந்து – இப்போது நாட்கணக்கிலே வந்திருக்கிறது. ஆகவே, நாட் கணக்கிலே வந்துவிட்ட காரணத்தால் மிகக் குறுகிய காலத்தில் நிறைய பணிகளை நாம் ஆற்றவேண்டியிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மிக முக்கியமாக, நம்முடைய காவல் துறை நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, பாதுகாப்புப் பணி மிக மிக முக்கியம். பாதுகாப்புப் பணி இது போன்ற பெருங்கூட்டங்களில் எந்த அளவிற்குத் தேவையானது என்பதையும், இது போன்ற பெரும் கூட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு தவறுகளைச் செய்வோர், தீய செயல்களில் ஈடுபடுவோர், திருட்டுக் குற்றங்களுக்கு ஆட்படுவோர் – இவர்கள் எல்லாம் இந்த நேரத்தைத்தான் தங்களுக்கு உகந்த நேரமாகக் கருதுவார்கள். ஆகவே, இதிலே சிறிதளவும் ஏமாந்து விடாமல், காவல் துறையினர் கண்காணிப்போடு இருந்திட வேண்டும் என்று நான் அறிவுறுத்துகிறேன்; கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, இங்கே இந்தப் பாதுகாப்பில் உணவுப் பாதுகாப்பும் சொல்லப்பட்டது. உணவுப் பாதுகாப்பில் எப்படி கவனம் செலுத்த வேண்டும் என்றால் – உணவு பரிமாறப்படுகின்ற இடமானாலும், அல்லது உணவைப் பகிர்ந்தளிக்கின்ற இடமானாலும், அந்த இடங்களிளெல்லாம் கலாட்டா செய்ய வேண்டும் என்பதற்காகவோ, அல்லது சிறுவர்களை, ஏழை பாழைகளை அனுப்பி, அந்த உணவுப் பண்டங்களைத் திருடச் செய்ய வேண்டும் என்று தூண்டி விடுபவர்களாலோ ஏகப்பட்ட குழப்பம் பல இடங்களில் நடந்து வருவதைக் கண்டிருக்கின்றோம். குறிப்பாக திருமண வீடுகளில்கூட பரிமாறப்படுகின்ற நேரங்களில் ஒருவரோ இருவரோ – ஏன் பத்துப் பேரோ இருந்து பகிர்ந்து அந்தப் பண்டங்களைப் பலருக்கும் பரிமாறுகின்ற நேரத்தில் அடிதடி ஏற்படுவதும், அப்படி ஏற்படுகின்ற நேரத்திலே பலர் அந்த அடிதடிக்கு உள்ளாகி அவதியுறுவதும் நம்முடைய தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே காவல் துறையினருடைய கட்டினையும் மீறி நடைபெற்ற சம்பவங்கள் – இந்த ஆட்சியிலும் சரி, கடந்தகால ஆட்சியிலும் சரி, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிறைய நிகழ்ந்திருக்கின்றன.

எனவே, காவல் துறை கண்காணிப்போடு இருக்கிறோம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. நிச்சயம் அந்தக் கண்காணிப்போடு பணியாற்ற வேண்டும் என்று நான் அவர்களுக்கு அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று – வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் மாத்திரமல்ல, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற அறிஞர் பெருமக்கள், பொதுமக்கள் – இவர்கள் மாநாட்டிற்கு வருகின்ற நேரத்தில், அவர்களிடத்திலே மரியாதையோடு நடந்து கொள்கின்ற அந்தப் பண்பாட்டை இந்த மாநாட்டிற்காக நியமிக்கப்படுகின்ற தொண்டர்கள் பின்பற்ற வேண்டும். அப்படிப் பின்பற்றுவதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அந்தப் பயிற்சி அளிக்க நம்முடைய குழுக்களின் தலைவர்கள் முன்வர வேண்டும். அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்கள் நெருங்க நெருங்க – இப்பொழுதெல்லாம் இப்படி ஒரு மண்டபத்திலே ஒரு பெரும் வெளியிலே – அல்லது ஒரு கூடத்திலே அமர்ந்து உங்களோடு நான் கருத்துகளைச் சொல்லுகின்ற இந்தக் காலம் மாறி – ஆங்காங்கு பத்துப் பேரிடத்திலோ, நான்கு பேரிடத்திலோ, ஐந்து பேரிடத்திலோ – அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அவர்களுக்குப் பதில் சொல்லுகின்ற வகையிலும், எப்படி நாம் இந்தப் பணியை ஆற்றலாம் என்கின்ற முறையிலும், கருத்துகளைச் சொல்லுகின்ற வாய்ப்புகள் மாநாடு நெருங்க நெருங்க ஏற்படும். அப்படி ஏற்படுகின்ற நேரத்திலே அவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற அளவிற்கு நீங்கள் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இந்தக் கூட்டத்திற்கு இவ்வளவு நேரம் வந்து காத்திருந்து, உங்களின் அருமையான கருத்துகளை எல்லாம் வழங்கியமைக்காக நன்றியைத் தெரிவித்து மாநாடு சிறப்புற அனைவரும் நம்முடைய ஒத்துழைப்பை நல்கிடுவோம் என்று கூறி இந்த அளவில் விடைபெறுகிறேன்.

<u>**கோவை உலகத் தமிழ் இணைய மாநாடு**</u>

தமிழக அரசின் சார்பில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் வரும் ஜூன் மாதம் 23 ஆம் நாளிலிருந்து 27ஆம் நாள் வரை நடக்கவிருப்பதை அனைவரும் அறிவோம். இச்செம்மொழி மாநாட்டையொட்டி 3 நாட்கள் உலகத் தமிழ் இணைய மாநாடும் 'உத்தமம்' அமைப்புடன் இணைந்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடத்தப்படுகிறது.

தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் குறித்து தொடர்ந்து பன்னாட்டு அளவில் மாநாடுகளை 'உத்தமம்' அமைப்பு சிறப்பாக இதுவரை சென்னை (1999, 2003) சிங்கப்பூர் (1997,2000,2004) மலேசியா (2001), அமெரிக்கா (2002), ஜெர்மனி (2009) ஆகிய நாடுகளில் நடத்தியுள்ளது.

மாநாட்டு கருத்தரங்கம், சமுதாயக் குழுமம், தமிழ்க் கணினிக் கண்காட்சி ஆகிய மூன்று சிறப்புக் கூறுகளைக் கொண்ட குழு அளவிலான தமிழ் இணைய மாநாடாக இந்த மாநாடு விளங்கும். தமிழ்க் கணினியம், தமிழ் இணையம் ஆகியவற்றின் அண்மைக்கால முன்னேற்றங்கள், பெருமுயற்சிகளும் குறித்த கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் தீர்வுகளை நோக்கி முன்னேனறவும் மாநாட்டு அரங்குகள் பயன்படும்.

உலகெங்கிலுமிருந்து தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் தமிழில் கருத்துகளைத் தெரிவிக்க உள்ளார்கள். விரிவான விவாதங்களுக்குப் போதுமான நேரம் கிடைக்க ஏதுவாக 300 பேராளர்கள் மட்டுமே மாநாட்டில் பங்கேற்க வகைச் செய்யப்பட்டுள்ளது. தமிழ் இணைய மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புவோர் www.tamilinternetconference.org என்ற இணையதளத்தில் பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

போட்டிகளில் வெல்லும் மாணவ, மாணவியருக்கு கண்ணையும், கருத்தையும் கவரும் தகுதியான பரிசுகளும், அதிகமான மாணவர்களை தனிப்போட்டி, குழுப்போட்டிக்கு அனுப்பவிருக்கும் பள்ளிகளுக்கு (Laptop) மடிக்கணினியும் பரிசாக வழங்கப்படவிருக்கிறது.

பள்ளி மாணவர்களுக்கு அமைந்தது போல தமிழகத்திலுள்ள அனைத்து அரசு, தனியார், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், கலை, அறிவியல், கல்லூரிகள், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை, விளையாட்டு நலம் வாரியாக மற்றும் மாவட்ட வாரியாக தமிழ்க் கணினி போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

<u>**தமிழ் இணைய மாநாட்டுக் கட்டுரைகள்**</u>

கட்டுரைச் சுருக்கம் அல்லது கூட்டு ஆய்வாளர்களின் சுய ஆய்வு குறித்தானதாக இருக்கவேண்டும். இவ்வாய்வு கணினியில் தமிழ்ப் பயன்பாடு பற்றிய எந்த ஒரு தலைப்பிலாவது இருக்கலாம். இது தமிழ் மொழியைப் பற்றி மட்டுமோ அல்லது கணினியைப் பற்றி மட்டுமோ இல்லாமல் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் பல்லூடகம்

போன்ற துறைகள் எப்படியெல்லாம் கணினி, கையடக்கத் தொலைபேசி போன்ற மின்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன என்பன பற்றி ஏதாவது ஒரு தலைப்பில் இருக்கலாம்.

உங்களின் கட்டுரைகள் சுருக்கம் ஒரு பக்கத்துக்கு மிகாமல் இருக்கவேண்டும். தமிழில் இருந்தால் அது ஒருங்குறியில்தான் (UNICODE) இருக்கவேண்டும், வேறு எழுத்துருவில் (FONT) தட்டச்சுச் செய்ய நேரிட்டால் அதை நீங்களே ஏதாவது ஒரு உருமாற்றுக் கனிமத்தைப் பயன்படுத்தி ஒருங்குறியின் எழுத்துருவுக்கு மாற்றி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

<u>கட்டுரைச் சுருக்கம் அனுப்பவேண்டிய இறுதி நாள்</u>

2010, பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள்

கட்டுரைச் சுருக்கம் குறித்தான முடிவு
2010, மார்ச் மாதம் 5 ஆம் நாள் அன்று தெரிவிக்கப்படும்.

முழு வடிவமான கட்டுரையை அனுப்பவேண்டிய கடைசி நாள்
2010, ஏப்ரல் மாதம் முதல் தேதி

முழுக் கட்டுரையில் மாற்றம் ஏதும் இருப்பின் ஏப்ரல் மாதம் பதினைந்தாம் நாளுக்குள்
திருத்திய வடிவம் எங்களுக்குக் கிடைக்கவேண்டும்.

தங்களின் கட்டுரைச் சுருக்கம் கருத்தரங்கில் படிக்க ஏற்றுக்கொள்ளப்பட்டதெனில் தங்களின் ஆய்வுக்கட்டுரையை ஆறு பக்கத்திற்கு மிகாமல் மேற்குறிப்பிட்ட நாளுக்குள் அனுப்பவேண்டும். ஆய்வுக் கட்டுரையில் தாங்கள் கொடுத்துள்ள விவரங்கள் கட்டுரைச் சுருக்கத்தில் தாங்கள் குறிப்பிட்டபடியே இருக்கவேண்டும்.

இவ்வகையில் தங்களின் கட்டுரைச் சுருக்கத்தையும் அதன் பின் அனுப்பும் ஆய்வுக் கட்டுரையையும் பரிந்துரைக் குழுவினர் தர நிர்ணயம் செய்வர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இரண்டுமே ஏற்புடையதாக இருக்கும் தருணத்தில்தான் தங்களின் கட்டுரையைக் கருத்தரங்கில் படிக்க அனுமதி அளிக்கப்படும். கட்டுரையைக் கருத்தரங்கில் முப்பது நிமிடங்களுக்குப் படிக்கவேண்டும். இதற்குத் தங்களின் படைப்பு விவரங்களைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்வது அவசியம். கட்டுரைச் சுருக்கத்தையும் கட்டுரையையும் மின்வடிவில் தான் தாங்கள் எங்களுக்கு அனுப்பவேண்டும். அவற்றை அச்சுப்பிரதியாகப் பெற்றுக்கொள்ள இயலாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். கட்டுரை படைப்பாளர்கள் தான் தங்களுடைய கட்டுரையைக் கருத்தரங்கில் படிக்க இயலும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். விரும்புவோர் ஒரு பக்க அளவிலான கட்டுரைச் சுருக்கத்தை ஆங்கிலத்திலோ தமிழிலோ தட்டச்சுச் செய்து ti2010-cpu@infitt.org எனும் மின்னஞ்சல் முகவரியில் அனுப்பலாம்.

**<u>தமிழ் இணைய மாநாட்டுக் கண்காட்சி</u>**

தமிழ்க் கணினி வளர்ச்சி குறித்த தமிழ் மென்பொருள் கண்காட்சி கோவை செம்மொழி மாநாட்டிலும் நடைபெறுகிறது. இக்கண்காட்சியில் பத்தாயிரம் சதுர அடியில் நூற்றுக்கும் மேற்பட்ட மென்பொருள் கூடங்கள் அமைக்கப்படுகிறது. இக்கண்காட்சியில் அனைத்துலகமும் ஈர்க்கும் அளவிற்கு மென்பொருட்கள், தமிழரசு அரசின் மின் ஆளுகை (e governance) அரங்குகள், தமிழ் மல்டிமீடியா சி.டி. அரங்குகள், தமிழ் மென்பொருட்கள் இடம் பெறவிருக்கின்றன. இக்கண்காட்சியின் வாயிலாக பொதுமக்கள் தமிழ் மென்பொருளையும் தமிழக அரசின் தமிழ்பயன்பாடுகள் மற்றும் அலுவலகச் செயல்பாடுகளையும் பயன்படுத்திப் பார்க்கலாம். கணினித் தமிழ்ச்சங்கம் என்ற தமிழ்க் கணினி அமைப்பு தகவல் தொழில் நுட்பத் துறையுடன் இணைந்து இக்கண்காட்சியை நடத்தவிருக்கிறது. இக்கண்காட்சிப் பற்றி மேலும் தகவலுக்கு எம். ஆன்டோ பீட்டர், 044-42113535 antopeter@yahoo.com தொடர்பு கொள்ளலாம்.

தமிழ் இணைய மாநாட்டினையொட்டி கண்காட்சி அரங்கம் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. ஊர்வலம் நடத்துவது தொடர்பாக ஊர்வலத்தின் பாதை, கருப்பொருள் (கான்செப்ட்) பற்றியும் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டு நினைவாக தபால் தலைகள் வெளியிடுவது தொடர்பாக மைய அரசுக்குக் கோரிக்கை அனுப்புவது பற்றியும்


பேசப்பட்டது. ஆய்வரங்கம் மற்றும் பொது அரங்கில் கலந்து கொள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர் பெருமக்களையும் முக்கிய பிரமுகர்களையும் அழைப்பது தொடர்பாகவும் விவாதித்து முடிவு செய்யப்பட்டது. மாநாட்டிற்கு அழைக்கப்படும் அறிஞர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படவேண்டிய வசதிகள் தொடர்பாக முடிவு செய்யப்பட்டது. மாநாடு தொடர்பாக அமைக்கப்பட்டது. அனைவருக்கும் தங்குமிடம் ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் ஆய்வு செய்து அதற்கான முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 23–6–2010 அன்று ஊர்வலத்துடன் ஆரம்பம் ஆகிறது. மாநாட்டினை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தொடங்கி வைக்க இசைவு தெரிவித்திருக்கிறார்கள்.

**இதற்கு முன்பு உலகத் தமிழ் மாநாடுகள்**

| | | |
|---|---|---|
| முதல் உலகத் தமிழ் மாநாடு | மலேசியா – கோலாலம்பூர் | 1966, ஏப்ரல் 16 – 23 |
| இரண்டாவது மாநாடு | இந்தியா – சென்னை | 1968, ஜனவரி 3 – 10 |
| மூன்றாவது மாநாடு | பிரான்ஸ் – பாரீஸ் | 1970, ஜூலை 15 – 18 |
| நான்காவது மாநாடு | இலங்கை – யாழ்ப்பாணம் | 1974, ஜனவரி 3 – 9 |
| ஐந்தாவது மாநாடு | இந்தியா – மதுரை | 1981, ஜனவரி 4 – 10 |
| ஆறாவது மாநாடு | மலேசியா – கோலாலம்பூர் | 1987, நவம்பர் 15 – 19 |
| ஏழாவது மாநாடு | மொரீஷியஸ் | 1989, டிசம்பர் 1 – 8 |
| எட்டாவது மாநாடு | இந்தியா – தஞ்சாவூர் | 1995, ஜனவரி 1 – 5 |




தலைமைச் செயலகம்
SECRETARIAT